# உதயன்

விலை ரூ.20
பக்கம் 28

சுடர் 30 | கதிர் 094 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 16 சனிக்கிழமை 28-02-2015

13 லட்சம் பரிசு வெல்லுங்கள்
விவரம் உள்ளே...!

## மீண்டும் தேர்தலுக்குத் தடை

# ரூ.55 லட்சம் வீண் விரயம்

### அடிப்படை மனித உரிமை மீறப்படுவதாக வழக்கு: இடைக்காலத் தடை விதித்தது நீதிமன்று

யாழ்ப்பாணம், பெப். 28
கரைதுறைப்பற்று – புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தல் மூன்றாவது தடவையாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இன்று தேர்தல் நடத்தப்படுவதற்குரிய ஏற்பாடுகள் யாவும் முழுமையாகச் செய்யப்பட்டிருந்தன. தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அவற்றுக்காக ரூபா 55 இலட்சத்தை தேர்தல்கள் திணைக்களம் செலவு செய்துள்ளது. தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதால் அந்தப் பணம் வீண் விரயமாகியுள்ளது.
அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்றும், உள்ளூராட்சி மன்ற தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அடுத்தே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி வரை தேர்தல் நடத்துவதற்கு நீதிமன்று இடைக்கால தடை விதித்துள்ளது.
கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கான தேர்தல் 2011 ஆம் ஆண்டு முதல் முறையாக இடம்பெறவிருந்தது. அப்போது அந்தப் பகுதியில் மீள்குடியமர்வு இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பக். 24


வாக்குச் சாவடிக்கு எடுத்துச் செல்லப்படும் வாக்குப் பெட்டிகள்

## வாகரையில் துப்பாக்கி சூடு: குடும்பப் பெண் படுகாயம்

மட்டக்களப்பு, பெப்.28
மட்டக்களப்பு வாகரையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். சூட்டுச் சம்பவத்தின் பின்னர் குறித்த பெண்ணின் கணவர் தலைமறைவாகியுள்ளார். எஸ்.புவனேஸ்வரி (வயது–32) என்பவரே படுகாயமடைந்துள்ளார். இவர் 4 பிள்ளைகளின் தாயாவார். பக்.24

## 110 சேவை நாளைமுதல் இலவசம்

யாழ்ப்பாணம், பெப்.28
யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் 110 இலக்க அவசர அம்புலன்ஸ் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் இலவசமாக வழங்கப்படும்.
யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார். பக்.24

## சீனாவுடன் ஆலோசித்தே முடிவு!

கொழும்பு, பெப்.28
இலங்கையில் சீனா முன்னெடுத்துள்ள திட்டங்கள் குறித்து சீனாவுடன் கலந்தாலோசித்தே முடிவு எடுக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள மங்கள சமரவீர, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் கருத்துத் வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"கொழும்பு போட் சிற்றி திட்டம் குறித்து பேசப்படவில்லை. இலங்கை அரசு சீன உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்து மட்டும்ஆராயப்படவில்லை."– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## வடக்கு மக்கள் நிலையறிய வந்தனர் ஐ.நா. அதிகாரிகள்

### பல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்

யாழ்ப்பாணம்,பெப்.28
ஐ.நா. அறிக்கை பிற்போடப்பட்ட பின்னர், வடபகுதி மக்களின் மன நிலை எவ்வாறு இருக்கின்றது என்பதை நாடி பிடித்துப் பார்ப்பதற்காக ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ–மூனின் அரசியல் அலுவலகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்கள் பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கை வெளியிடப்படுவது பிற்போடப்பட்டுள்ளது.
அதற்கு எதிராக தமிழ் மக்களால் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், ஐ.நா.பொதுச்செயலாளர் பான் கீ–மூனின் அரசியல்விவகார அலுவலகத்தைச் சேர்ந்த பிரதிச் செயலாளர் இலங்கைக்கு இன்று வரவுள்ளார். அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முதலாவது சந்திப்பை நடத்தவுள்ளார். நாளை மறுதினம் திங்கள்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரவுள்ளார். பக். 24

## ஒபாமாவை கொல்ல முயன்ற மூவர் கைது


விரிவான தகவல் 12 ஆம் பக்கத்தில்

## வலி.வடக்கு - வலி.கிழக்கில் முதற்கட்ட மீள்குடியமர்வு

### 6 கிராம சேவையாளர் பிரிவுகளில் 1,500 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படுவர்

யாழ்ப்பாணம், பெப். 28
வலி.வடக்கு – வலி.கிழக்கில் 6 கிராம சேவையாளா பிரிவுகள் முதல் கட்டமாக மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதி மக்கள் மூன்று வாரங்களுக்குள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட உள்ளனர். யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடலில் இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது.
வலி.வடக்கில் 5 கிராம சேவையாளர் பிரிவுகளும், வலி.கிழக்கில் ஒரு கிராம சேவையாளர் பிரிவிலுமாக ஆயிரத்து நூறு ஏக்கர் வரையில் விடுவிக்கப்படவுள்ளது. ஆயிரத்து 500 க்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமரவுள்ளன. பக். 24

**மீள்குடியமர்வு நடைபெறவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகள்**
- பளைவீமன்காமம் தெற்கு (ஜே/237)
- கட்டுவன் (ஜே/238)
- வறுத்தலைவிளான் (ஜே/241)
- குரும்பசிட்டி (ஜே/242).
- வசாவிளான் கிழக்கு (ஜே/244)
- வளலாய் (ஜே/284)

## வெள்ளைவான் கடத்தல்களுக்கு இராணுவ அதிகாரிகளே காரணம்

### முன்னாள் பொலிஸ் பேச்சாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 28
வெள்ளைவான் கடத்தல்கள் மற்றும் கொலைகளின் பின்னணியில் இராணுவ அதிகாரிகளே இருந்தனர் என்ற பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் முன்னாள் பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி.
"வெள்ளைவான் கடத்தல்களின் பின்னணியில் இருந்தவர்கள் குறித்த தகவல்கள் என்னிடம் உள்ளது. அது பற்றிய விசாரணை ஒன்று நடத்தப்பட்டால், அதில் தொடர்புடையவர்களின் பெயர்களை வெளியிடத் தயாராக இருக்கின்றேன்"– என்று அவர் கூறியுள்ளார். பக். 24

**மீனவர் மோதல் உறவுக்கு வேட்டு**
பக்கம்.16

## யாழ். பொலிஸ் அத்தியட்சகர் உட்பட இரு பொலிஸார் கைது

யாழ்ப்பாணம், பெப். 28
யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன மற்றும் எல்பிட்டிய பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ஆனந்த ராஜகருணா ஆகியோர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பக். 24

## நேரில் சென்று நிலைமைகளை அவதானிப்பர்

யாழ்ப்பாணம், பெப். 28
வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்கில் விடுவிக்கப்படவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மற்றும் கிராம சேவையாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் இன்று செல்லவுள்ளனர் என்று தெரி விக்கப்படுகின்றது.
வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் ஆயிரம் ஏக்கரை விடுவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. பக். 24



## அங்கத்துவ பணத்தை மீளத்தருமாறு மகேஸ்வரி நிதியம் முன் போராட்டம்

### பாரவூர்தி உரிமையாளர்கள் நடத்தினர்

யாழ்ப்பாணம்,பெப்.28
மகேஸ்வரி நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட அங்கத்துவப்பணத்தை மீளத் தருமாறு கோரி யாழ்.மாவட்ட பாரவூர்திகளின் உரிமையாளர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் கண்டன ஊர்வலம் நடத்தினர். இந்த ஊர்வலம் கோண்டாவிலில் அமைந்துள்ள சங்க அலுவலகத் துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு பலாலி வீதி வழியாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மகேஸ்வரி நிதியத்தை வந்தடைந்தது. பக். 24

# கூட்டமைப்புக்கு பெரும் ஏமாற்றம்

## கல்வி, காணி அமைச்சு மு.காவுக்கு நேற்றுடன் முடிவுக்கு வந்தது இழுபறி

மட்டக்களப்பு, பெப். 28
கிழக்கு மாகாண சபை அமைச்சர்கள் நியமனத்தில் கூட்டமைப்புக்குப்பெரும்ஏமாற்றம்ஏற்பட்டுள்ளது. கல்வி மற்றும் காணி அமைச்சு கூட்டமைப்புக்கு வழங்கப்படாமையே ஏமாற்றத்துக்குக் காரணம். இந்த முக்கிய அமைச்சைப் பொறுப்பேற்பது எனக் கூட்டமைப்பு முடிவு செய்திருந்த நிலையில் அது அந்தக் கட்சிக்கு வழங்கப்படவில்லை.

கிழக்கு மாகாண சபையின் கல்வி மற்றும் காணி அமைச்சை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்திருந்த நிலையில் நேற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஆரியவதி கலப்பதி கல்வி மற்றும் காணி அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண அமைச்சர் பதவிகளுக்கு சீ.தண்டாயுதபாணி மற்றும் கே.துரைராஜசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதற்கமைய கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சீ. தண்டாயுதபாணியைக் கல்வி மற்றும் காணி அமைச்சராகவும், மாகாண சபை உறுப்பினர் கே.துரைராஜசிங்கத்தை விவசாய கால்நடை மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அமைச்சராகவும்நியமிக்கத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருந்தது.

இந்த நிலையில் நேற்றுக் கிழக்கு மாகாண கல்வி மற்றும் காணி அமைச்சராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஆரியவதி கலப்பதியும், வீதி அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக எம். ஐ.எம். மன்சூரும் சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர். இவர்கள் இருவரும் நேற்றுக் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

இதேவேளை, கிழக்கு மாகாண சபையில் மீதமுள்ள விவசாயம் மற்றும் சுகாதாரம் ஆகிய இரு அமைச்சுக்களும் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் பிரசன்ன இந்திரகுமார் சபையின் பிரதித் தவிசாளராகத்தெரிவு செய்யப்பட்டுள்ளார். (த-10)

# கழிவு ஒயில் இடர் வலயம் பிரகடனப்படுத்தினால் பாதிப்பு

## துறைசார் அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப். 28
கழிவு ஒயில் குடிதண்ணீருடன் கலந்துள்ளது என்று சந்தேகிக்கப்படும் பிரதேசங்களை, 'இடர் வலயம்' என்று பிரகடனப்படுத்தினால், அந்தப் பகுதியில் பொதுமக்கள் யாரும் வசிக்க முடியாது. அத்துடன் அந்தப் பிரதேசம், பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டில்– மேற்பார்வையிலேயே இருக்கும். மேலும் அவ்வாறு, 'இடர் வலயம்' எனப் பிரகடனப்படுத்துவதற்குச் சில பொறிமுறைகள் இருப்பதாகவும், சம்பந்தப்பட்ட துறைசார் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுன்னாகம் பிரதேச்தில் கழிவு ஒயில் குடிதண்ணீருடன் கலந்துள்ளமையினால், வலிகாமம் பிரசேத்தின் 60 கிராம சேவையாளர் பிரிவுகள் வரையில் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. இந்தப் பகுதிகளை 'இடர் வலயம்' என்று பிரகடனப்படுத்தவேண்டும் எனப் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை முன்வைத்து வருகின்றனர். அவ்வாறு பிரகடனப்படுத்துவதற்கு உரிய ஒழுங்கு முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

மனித உயிர் இழப்பு நடந்திருக்க வேண்டும் (அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்), சொத்திழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும், சுற்றுச்சூழல் இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். இவை மூன்றும் நடந்திருப்பதுடன், தண்ணீர் பாதிப்பை ஈடு செய்ய முடியாத நிலைமை காணப்பட வேண்டும். அதாவது பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்ய இயலாது காணப்பட வேண்டும்.

இவ்வாறு இருப்பதுடன், இந்த விடயங்கள் தொடர்பில் கிராம, பிரதேச, மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் அனுமதி பெற்று, தேசிய சபைக்கு சமர்பிக்கப்பட வேண்டும். ஆனாலும், யாழ். மாவட்டச் செயலகத்தினால், கிராம மட்ட அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள் விடுத்த கோரிக்கை தேசிய சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பிரதேசத்தை 'இடர் வலயம்' எனப் பிரகடனப்படுத்தினால், அந்தப் பகுதியில் மக்கள் வாழ முடியாது. மேலும், குறித்த காணிகளுக்குரிய நஷ்டஈடு காலப் போக்கில் வழங்கப்படும். அத்துடன் குறித்த பகுதியை, பாதுகாப்புத்தரப்பினரே பொறுப்பேற்பார்கள். இவ்வாறான நிலைமை ஏற்படும், என்றும் சம்பந்தப்பட்ட துறைசார் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். (த-5)

# பெண்களிடம் சங்கிலிகள் அபகரிப்பு

வயோதிபப் பெண்களைத் தாக்கிவிட்டுஅவர்கள்அணிந்திருந்ததங்கச் சங்கிலிகளை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர் திருடர்கள்.

இந்தச் சம்பவங்கள் மீசாலை மற்றும் கொடிகாமம் பகுதிகளில் இடம் பெற்றுள்ளது.

மீசாலை மேற்குப் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் வீட்டினுள்நுழைந்ததிருடர்கள்அங்கிருந்த வயோதிபத் தம்பதியை தாக்கிவிட்டுப் பெண் அணிந்திருந்த 2 பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை அறுத்ததுடன் அங்கிருந்த 32 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.தாக்குதலுக்கு இலக்கான அதே இடத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை ஞானாம்பிகை (வயது–64) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கொடிகாமம் பெரிய நாவலடிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீட்டின் முன்னால் சமையலுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்த மூதாட்டியிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்ட போது,கழுத்தில் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். (த-9)

# கல்வி, காணி அமைச்சு பெரும்பான்மையிடமே

## மு.காவுக்கு வலியுறுத்தியதாம் மத்திய அரசு

மட்டக்களப்பு, பெப். 28
கிழக்கு மாகாணத்தில் கல்வி மற்றும் காணி அமைச்சு பெரும்பான்மையிடம் தான் இருக்கவேண்டும் என மத்திய அரசு முஸ்லிம் காங்கிரஸுக்கு தெரிவித்ததை அடுத்தே கல்வி மற்றும் காணி அமைச்சு கூட்டமைப்புக்குக்கைகூடவில்லைஎனத் தெரிவிக்கப்படுகின்றது

கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவைத் தெரிவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கூட்டமைப்பினருக்கு இரு அமைச்சுப் பதவிகளும் பிரதித் தவிசாளர் பதவியும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்து.

இந்த நிலையில் கூட்டமைப்பு தமக்கு கல்வி மற்றும் காணி அமைச்சு தர வேண்டும் என்று வலியுறுத்தியிருந்ததுடன், அப்படித் தர மறுக்கப்படும் பட்சத்தில் ஒப்பந்தம் குறித்து மீள்பரிசீலனை செய்யப்படும் எனவும் தெரிவித்திருந்தது.

இதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனுக்கும் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற முக்கிய சந்திப்பையடுத்து கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சீ. தண்டாயுதபாணி கல்வி மற்றும் காணி அமைச்சராகவும், மாகாண சபை உறுப்பினர் கே.துரைராஜசிங்கம் விவசாய கால்நடை மற்றும்சுற்றுலாஅபிவிருத்திஅமைச்சராகவும் நியமிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

'கிழக்கு மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் கூட்டமைப்பின் அமைச்சுப் பதவிகள் மீது அழுத்தங்களை பிரயோகிக்கின்றனர். இது தொடர்பில் அவர்கள் தங்கள் கட்சிக்கும் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் கடும் அழுத்தங்களை கொடுக்கின்றனர். இதிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியேவரவேண்டும்.அப்படிபிரச்சினைகள் யாவும் தீர்க்கப்படும் பட்சத்தில் விரைவில் அமைச்சுப் பதவிகள் குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும்' என கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சீ.தண்டாயுதபாணி கூறியுள்ளார். (த-10)

# பிரதேச சபை உறுப்பினர் நேற்று விபத்தில் சாவு

வவுனியா, பெப். 28
வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் இளையகுட்டி கேதீஸ்வரன் உழவியந்திரப் பெட்டிக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வவுனியா வடக்கு, நெடுங்கேணி மாறாயிலுப்பை பகுதியில் தனது சகோதரரின் வீட்டில் இருந்து உழவு இயந்திரத்தில் நெல் மூடைகளை ஏற்றித் தனது வீட்டில் பறிப்பதற்கு முயற்சி செய்தபோது உழவு இயந்திரத்திரப் பெட்டியின் டிப்பர் பம் சீராக இயங்காததால் அதனை சீர் செய்ய முயற்சித்தபோது பெட்டியின் டிப்பர் பம் வெடித்துள்ளது. இதனால் உழவு இயந்திரப்பெட்டி அவர் மீது விழுந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினரானஇவர்மாறாயிலுப்பை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமாவார். 42 வயதான கேதீஸ்வரன் மூன்று பிள்ளைகளின் தந்தையுமாவார். இந்த விபத்து குறித்து நெடுங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். பிரேதம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த)

# இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்



யாழ்ப்பாணம்,பெப்.28
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 43 பேரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்றம்நேற்றுஉத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறைக்கு அண்மித்த கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட நாகை மாவட்டம் மற்றும் காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் 43 பேரையும் இலங்கைக் கடற்படையினர் ரோந்துக் காவலின்போது கைது செய்து, யாழ்.மாவட்ட நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் நேற்றுக் காலை ஒப்படைத்தனர்.

காரைக்கால்மாவட்டத்திலிருந்து 3 படகுகளுடன் 27 மீனவர்களும், நாகை மாவட்டத்தில் இருந்து 2 படகுகளுடன் 16 மீனவர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் நேற்றுப் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது வழக்கை விசாரணை செய்த நீதிவான் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, முல்லைத்தீவுக் கடற்பரப்புக்கு அண்மித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 40 இந்திய மீனவர்களும் 5 படகுகளுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (த-14-109)

# போதனா வைத்தியசாலை கழிவுகளை அகற்ற பணிப்பு

யாழ்ப்பாணம்,பெப். 28
யாழ்.போதனா வைத்தியசாலையில் 14 நாள்களாகக் கழிவகற்றப்படாததால் அங்கு குப்பைகள் நிரம்பி வழிகின்றன. அது தொடர்பில் வடமாகாண முதலமைச்சரின் செயலாளருடனான சந்திப்பை அடுத்து 2 நாள்களில் அவற்றை அகற்றுமாறு முதலமைச்சர் யாழ்.மாநகர சபைக்குப் பணித்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஶ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்.மாநகர எல்லையில் குப்பை அகற்றுவது தொடர்பான சிக்கல் ஏற்பட்டதையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையிலும் கழிவகற்றல் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. அதனால் வைத்தியசாலையில் குப்பை நிறைந்து துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளது. அது சுகாதாரத்துக்குக் கோடாகவும் அமைந்துள்ளது.

அந்தப் பிரச்சினை தொடர்பில் வடமாகாண முதலமைச்சரின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. அது தொடர்பில் இரு தரப்பினரையும் அழைத்துக் கலந்துரையாடிய பின்னர் அவற்றை அகற்றி யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் புதைக்குமாறு கூறப்பட்டுள் ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உணவுக் கழிவு, குப்பை உள்ளிட்ட கழிவுகளுடன் மருத்துவ விடுதிக் கழிவுகளும் ஒன்றாகவே கொட்டப்பட்டு வந்துள்ளன. அதுவும் குப்பைகள் நிறைந்து விடக் காரணமாகிவிட்டது. அவை கிருமிகளையுடையதாக இருக்கும் என்று மாநகர தரப்பினரால் கூறப்படுகிறது.

அதனால் உணவு உள்ளிட்ட சாதாரண கழிவுகளை ஒரு புறமாகவும், மருத்துவ விடுதிக் கழிவு உள்ளிட்டவற்றைத்தனியாகவும் இனிமேல் கொட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் மூலமே கழிவகற்றலை இலகுவாக்க முடியும் என்றும் கூறப்பட்டதனால் இன்றிலிருந்து அவற்றைத் தனித் தனியான இடத்தில் கொட்டுமாறு கூறப்பட்டுள்ளது. அதன்படி இனிமேல் செயற்பாடு இருக்கும் என்று பதில் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-4)

BUSINESS MANAGEMENT | 0777 692318
BCAS CAMPUS
JAFFNA



# சங்கா முதலிடம்




நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் விளையாடி வரும் வீரர்களில், இலங்கை வீரர்களான சங்ககாரா – மஹேல இருவரும் உலகக் கிண்ணத் தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களாக இருக்கின்றனர்.

நடப்பு உலகக் கிண்ணத்தில், விளையாடி வரும் வீரர்களில் குமார் சங்ககாரா 1142 ஓட்டங்களுடன் முதலிடத்திலும், இரண்டாவது இடத்தில் மஹேல யெஜவர்தனா 1075 ஓட்டங்களுடனும் உள்ளார். இவர்கள் இருவருமே ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்களாகவும் உள்ளனர்.

மூன்றாவது இடத்தில் டில்ஷான் 902 ஓட்டங்களுடன் இருக்கின்றார். நான்காவது இடத்தில் மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் கெய்ல் 859 ஓட்டங்களுடன், ஐந்தாவது இடத்தில் 780 ஓட்டங்களுடன் தென்னாபிரிக்காவின் டீவில்லியர்ஸும் உள்ளனர்.

உலகக் கிண்ணத்தில், ஒட்டுமொத்தமாக அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர்கள் வரிசையில் இந்தியாவின் டெண்டுல்கார் 2278 ஓட்டங்களைப்

பக்கம் 04

# சர்ச்சையைக் கிளப்பும் நடுவரின் தீர்ப்புக்கள்

## டி.ஆர்.எஸ் முறையும் திருப்தியில்லை

டி.ஆர்.எஸ். என்பது நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் நடைமுறையாகும். களத்திலுள்ள நடுவர்களின் தீர்ப்பில் திருப்தியில்லை என்றால், அவர் வழங்கிய முடிவு தவறு என்றால், அதனை மறுபரிசீலனைக்கு உட்படுத்தும் முடிவைக் கோர முடியும். மூன்றாவது நடுவர் தொலைக்காட்சியில் மீண்டும் பார்த்து முடிவை அறிவிப்பார்.

மூன்றாவது நடுவர், எல்.பி.டபிள்யூ. தீர்ப்புக்களின் போது களநடுவரின் முடிவு ('அம்பயர்ஸ் ஹோல்') என்று தீர்ப்பளிப்பது புதிய பிரச்சினையை – சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. களநடுவர்கள் முன்னர் கொடுத்த தீர்ப்பிலிருந்து மாறாமல், அதனையே மீளவும் தீர்ப்பாக வழங்குகின்றனர். இதனால் ஆட்டத்தின் போக்குகளிலேயே பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஆட்டத்தில், கிறிஸ் கெயில் 215 ஓட்டங்களை குவித்து சாதனை படைத்தார். ஆனால் ஆட்டத்தில் அவர் சந்தித்த முதல் பந்திலேயே 'டக்–அவுட்' ஆக வேண்டியவர். இங்குதான் டி.ஆர்.எஸ் தவறு நடந்தது. கிறிஸ் கெயில் சந்தித்த முதல் பந்தை சிம்பாப்வேயின் பன்யங்காரா வீசினார். அந்தப் பந்து கெயில் காலில் பட்டதால் எல்.பி. டபிள்யூ முறைப்பாடு செய்யப்பட்டது.

கள நடுவர் ஸ்டீவ் டேவிஸ் அதை ஆட்டமிழப்பு இல்லை என்றார். எனவே சிம்பாப்வே அணிசார்பில்நடுவரின்முடிவை மறுபரிசீலனை செய்ய கோரப்பட்டது. ஆனால் மூன்றாவது நடுவர் இதை 'அம்பயர் ஹோல்'

பக்கம் 04




# அதிரடிக்குப் பதிலடி தீவுகளை துவைத்து எடுத்த ஆபிரிக்கா




நேற்றைய ஆட்டத்தில் 162 ஓட்டங்களை விளாசி ஆட்ட நாயகனாகத் தெரிவாகிய வில்லியர்ஸ்

கெயில் ஆடிய ருத்ரதாண்டவம் அடங்கும் முன்னரே, டீவில்லியர்ஸ் வெறியாட்டத்தை நேற்று நிகழ்த்தினார். அதிரடிகளால் கலக்கும் மேற்கிந்தியத்தீவுகளுக்கு, ஆபிரிக்கா அதிரடிகளால் பதிலடி கொடுத்தது. இதனால் மேற்கிந்தியத்தீவுகள் மீண்டும் மோசமான தோல்வியைப் பதிவு செய்தது. 257 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா இமாலய வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு கெயில் என்றால் தென்னாபிரிக்காவுக்கு வில்லியர்ஸ். கெயில் களத்தில் நிற்பது எவ்வளவு ஆபத்தோ அதை விட இன்னுமொரு மடங்கு ஆபத்து வில்லியர்ஸ் களத்தில் நிற்பது. வில்லியர்ஸ் நேற்று நிகழ்த்திய சாதனைகள் பல. உலகக் கிண்ண தொடரில் மிகவேகமாக பெறப்பட்டது இரண்டாவது சதம். ஒருநாள் ஆட்டங்களில் மிக வேகமான 150 ஓட்டங்கள் என சில சாதனைகளுடன் நேற்று மகுடம் சூடியது தென்னாபிரிக்கா.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. தொடர் முழுவதும் சொதப்பி வரும் கொக் நேற்றய தினமும் சொதப்பவே செய்தார். இடத்தைநிரப்பினார்பிளசிஸ். அம்லாவுடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டம். ஆளுக்கொரு அரைச் சதமும் அடித்தனர். அணி பலமான நிலைக்குச் சென்றது. அணியின் ஓட்டம் 145 ஆக இருந்த பொழுது விடைபெற்றார் பிள சிஸ். அதே பந்துப்பரிமாற்றத்தில் விடைபெற்றார் அம்லா. 146 ஓட்டங்களுக்கு 3 இலக்குகள். களத்தில் றொஸ்சொவ் மற்றும் வில்லியர்ஸ்.

பக்கம் 04

# ஷமி இன்றைய ஆட்டத்தில் இல்லை




நடப்புச்சம்பியன்இந்திய அணி, ஐக்கிய அரசு இராச்சியத்தை இன்று எதிர்கொள்கின்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஷமி பங்குபற்றமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்துடன் இந்திய அணி உலகக் கிண்ணத்தில் மோத இருப்பது இதுவே முதல் முறையாகும். ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் இந்தியா அந்த அணியுடன் 2 முறை மோதியுள்ளது. இந்த 2 தடவையும் இந்தியாவே வெற்றி பெற்றது. 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சார்ஜாவில் நடந்த ஆட்டத்தில் 71 ஓட்டங்களிலும், 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தம்புள்ளவில் நடந்த ஆசியக்

பக்கம் 04

# சொதப்புவதை தவிர்ப்போம்

அடுத்து வரும் லீக் ஆட்டங்களில், கடைசிப் 10 பந்துப் பரிமாற்றங்களில் துடுப்பாட்டத்தில் சொதப்பலை தவிர்க்க புது வியூகம் வகுத்து, எழுச்சி காண்பதே இலக்கு, என்று இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில், 45.2 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளுக்கு 273 ஓட்டங்கள் எடுத்திருந்த இந்திய அணி, அடுத்த 23 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 இலக்குகளை பறிகொடுத்தது. பின்னர் ஒருவழியாக 50 பந்துப் பரிமாற்றங்களில் 300 ஓட்டங்கள் எடுத்தது. இந்த ஆட்டத்தில் மத்திய வரிசை முழுமையாகவே சொதப்பியது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில், 43.3 பந்துப் பரிமாற்றத்தில் 2 இலக்குகளுக்கு 261 ஓட்டங்கள் எடுத்திருந்த இந்திய அணி, அடுத்த 41 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 இலக்குகளை இழந்தது. இந்த நிலை தொடர்ந்தால் இந்திய அணிக்கு சிக்கலாகிவிடும்.

இது குறித்து இந்திய அணித் தலைவர் டோனி கூறியதாவது, கடைசி நேரத்தில் இலக்குகளை விரைவில் பறிகொடுப்பது வருத்தம் அளிக்கின்றது. இந்தப் பிரச்னை அனைத்து

பக்கம் 04

# கிடைத்த வாய்ப்பை கச்சிதமாக கையகப்படுத்திய ஆப்கான்

ஸ்கொட்லாந்து – ஆப்கான் அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், ஆப்கான் அணி மயிரிழையில் வெற்றி பெற்றது. அந்த அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்த ஷென்வாரி 20 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, பெரிங்டன் பந்துவீச்சில் ஸ்லிப் திசையில் கொடுத்த மிக இலகுவான பிடியெடுப்பு வாய்ப்பை மஜித் ஹக் நழுவவிட்டார். அந்த பிடி எடுக்கப்பட்டிருந்தால் ஆப்கான் நிச்சயம் தோற்றிருக்கும். அதிர்ஷ்ட வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்ட ஐஷன்வாரி, மஜித் ஹக்கின் 10 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் தொடர்ச்சியாக 3

பக்கம் 04

# இலங்கையின் சாதனைத் துளிகள்

இலங்கை – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், இலங்கை அணி சாதனைகளைப் புதுப்பித்துள்ளது.

- இந்த ஆட்டத்தில் டில்ஷான் குவித்த 161 ஓட்டங்கள், உலகக் கிண்ணத்தில் இலங்கை வீரரின் தனிநபர் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும். இதற்கு முன்பு 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் கென்யாவுக்கு எதிராக அரவிந்த டி சில்வா 145 ஓட்டங்கள் எடுத்ததே இலங்கை வீரரின் அதிகபட்சமாக இருந்தது.
- குமார் சங்ககரா 73 பந்துகளில் சதத்தை அடைந்தார். ஒரு நாள் கிரிக்கெட்டில் இது அவரது அதிவேக சதமாகும். கடந்த ஆண்டு ஆசியக் கிண்ண கிரிக்கெட்டில் இந்தியாவுக்கு எதிராக 83 பந்துகளில் சதம் கண்டதே முந்தைய அவரது மின்னல்வேக சதமாகும்.
- 22 ஆவது முறையாக 100 ஓட்டங்களை கடந்துள்ள சங்ககரா ஒரு நாள் ஆட்டத்தில் அதிக சதங்கள் அடித்தோர் பட்டியலில் ஹோக்லி (இந்தியா), கிறிஸ் கெயில் (மேற்

பக்கம் 04


| குழு A | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 3 | 0 | 0 | 6 |
| இலங்கை | 2 | 1 | 0 | 4 |
| ஆஸ்திரேலியா | 1 | 0 | 1 | 3 |
| பங்களாதேஷ் | 1 | 1 | 1 | 3 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 2 | 0 | 2 |
| இங்கிலாந்து | 1 | 2 | 0 | 2 |
| ஸ்கொட்லாந்து | 0 | 3 | 0 | 0 |

| குழு B | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 0 | 0 | 4 |
| தென்னாபிரிக்கா | 2 | 1 | 0 | 4 |
| அயர்லாந்து | 2 | 0 | 0 | 4 |
| மே.இ.தீவுகள் | 2 | 2 | 0 | 4 |
| சிம்பாப்வே | 1 | 1 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 2 | 0 | 0 |
| பாகிஸ்தான் | 0 | 2 | 0 | 0 |

# அதிரடிக்குப் பதிலடி தீவுகளை துவைத்து எடுத்த ஆபிரிக்கா

வில்லியர்ஸ் ஆரம்பம் முதலே அதிரடியை கைவிடவில்லை. எந்தப் பந்து வீச்சாளர்களுக்கும் பயப்படவில்லை. வில்லியர்ஸிற்கு வாய்ப்புக்களை வழங்கி மறுமுனையில் இலக்குகளை பாதுகாத்துக் கொண்டிருந்தார் றொஸ்சொவ். மறுமுனை யில் கெயிலிற்கே அதிரடி என்றால் என்ன என்று பாடம் புகட்டினார் வில்லியர்ஸ்.

மட்டையைச் சுழற்ற பந்துகள் எல்லைகளைத் தொட்டுக் கொண்டிருந்தன. 52 பந்துகளில் சதம் கடந்தார். கொஞ்சம் என்றால் கெவின் ஓ



பிரைனின் சாதனை நேற்றய தினம் தவிடு பொடியாகியிருக்கும். சதம் கடந்த பின் அதிரடி இரட்டிப்பானது. இறுதிப்பதினாறு பந்துகளில் 62 ஓட்டங்களை விளாசித்தள்ளினார். 66 பந்துகளில் மொத்தமாக 162 ஓட்டங்கள்.

கரீபிய மண்ணில், டீ வில்லியர்ஸ் கடந்த மாதம் ஆடிய தாண்டவம் எல்லோர் மனதிலும் மீண்டும் வந்து சென்றது. அங்கேயும் தீவுகளின் பந்துகளை நொருக்கிய டீ வில்லியர்ஸ், நேற்றும் பாவம் பார்க்காது வெளுத்து வாங்கினார். இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் மட்டும் 30 ஓட்டங்கள். 408 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது ஆபிரிக்காவின் தாண்டவம். 409 ஓட்டங்களை பெற்றால் வெற்றி. தீவுகளின் வெற்றி வாய்ப்பு 22 சதவீதம் மட்டுமே என்று மைதான வாக்கெடுப்பு தீர்மானித்திருக்க களமிறங்கினார்கள் கெயில் மற்றும் சிமித்.

ஆரம்பமே அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. சிம்பாவேயுடன் இரட்டைச்சதம் கடந்த கெயில் 3 ஓட்டங்கள், சதம் கடந்த சாமுவேல்ஸ் ஓட்டங்கள் எதனையும் பெறாது வெளியேறினார்கள். மத்தியவரிசை வீரர்களும் பதின்ம ஓட்டங்களுடன் விடைபெற்றனர்.

தீவுகளின் கடைசி நம்பிக்கையாக இருந்த சிமித்தும் வெளியேற, 53 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தத்தளித்து கொண்டிருந்தது. பின்வரிசை வீரர்கள் முன்வரிசை வீரர்களுக்கு சற்றும் சளைத்தவர்கள் இல்லை என்று ஒற்றை இலக்கங்களில் விடைபெற தீவுகளின் ஏழாவது இலக்கு 63 ஓட்டங்களுக்கு சாய்க்கப்பட்டது. 100 ஓட்டங்களை தாண்டுவது எட்டாக்கனி யாக இருந்தது. இறுதியில் ஒன்பதாம் நிலை வீரரான ஹோல்டர் – அணித் தலைமை பொறுப் பைத் தக்க வைக்க, தனது அணிக்கு தஞ் சமளிக்க தீவுகள் ஒருவாறு 100 ஓட்டங்களை எட்டியது. தொடர்ந்த அதிரடியாக செயற்பட்ட ஹோல்டர் அரைச்சதம் கடந்து வெளியேற தீவுகள் 151 ஓட்டங்களில் சுருண்டு 257 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. (5–ரி)

2015 உலகக் கிண்ணம்

தென்னாபிரிக்கா எதிர் மே.இ.தீவுகள்
257 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி
நாணயச் சுழற்சி தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஹெராக் | C ருசல் B ஹோல்டர் | 12 | 19 | 03 | 0 |
| அம்லா | LBW B கெயில் | 65 | 88 | 01 | 01 |
| பிளாசிஸ் | C ரம்தின் B கெயில் | 62 | 70 | 03 | 0 |
| றொஷோவ் | C ரம்தின் B ருசல் | 61 | 39 | 06 | 01 |
| வில்லியர்ஷ் | ஆட்டமிழப்பில்லை | 162 | 66 | 17 | 08 |
| மில்லர் | C ரெயிலர் B ருசல் | 20 | 16 | 0 | 0 |
| பெக்கார்டின் | ஆட்டமிழப்பில்லை | 10 | 05 | 0 | 01 |
| உதிரிகள் | | 16 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ரெயிலர் | 08 | 64 | 0 | 01 |
| ஹோல்டர் | 10 | 104 | 01 | 02 |
| ருசல் | 09 | 74 | 02 | 0 |
| சாமுவேல்ஸ் | 02 | 14 | 0 | 0 |
| பென் | 10 | 79 | 0 | 0 |
| சமி | 07 | 50 | 0 | 0 |

TOTAL 408/5 (50)
1-18 (ஹெராக்)
2-145 (பிளாசிஸ்),
3-146 (அம்லா),
4 -280 (றொஷோவ்)
5 – 328 (மில்லர்)

TOTAL

மே.இ.தீவுகள்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சிமித் | C மில்லர் B ரஹீர் | 31 | 34 | 04 | 01 |
| கெயில் | B அப்பொட் | 03 | 04 | 0 | 0 |
| சாமுவேல்ஸ் | C ஹெராக B அப்பொட் | 0 | 09 | 0 | 0 |
| கார்டர் | C வில்லியர்ஸ் B மோர்கல் | 10 | 20 | 01 | 0 |
| ரம்தின் | B ரஹீர் | 22 | 47 | 02 | 0 |
| சிம்மொன்ஸ் | LBW B ரஹீர் | 0 | 02 | 0 | 0 |
| சமி | ST ஹெராக B ரஹீர் | 05 | 11 | 0 | 0 |
| ருசல் | C அப்பொட் B ரஹீர் | 0 | 03 | 0 | 0 |
| ஹோல்டர் | C அம்லா B ஸ்ரெயின் | 56 | 48 | 03 | 04 |
| ரெயிலர் | ஆட்டமிழப்பில்லை | 15 | 18 | 02 | 0 |
| பென் | C அம்லா B மோர்கல் | 01 | 03 | 0 | 0 |
| உதிரிகள் | | 08 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரெயின் | 7 | 24 | 01 | 0 |
| அப்பொட் | 08 | 37 | 02 | 0 |
| மோர்கல் | 5.1 | 23 | 02 | 0 |
| ரஹீர் | 10 | 45 | 05 | 02 |
| பிளாசிஸ் | 03 | 17 | 0 | 0 |

TOTAL 151 (33.1)
1-12 (கெயில்),
2-15 (சாமுவேல்ஸ்)
3-52 (கார்டர்), 4-52 (சிமித்)
5-53 (சிம்மொன்ஸ்)
6-63 (சமி)7-63 (ருசல்)
8-108 (ரம்தின்)
9-150 (ஹோல்டர்)
10-151 (பென்)

ஆட்ட நாயகன் வில்லியர்ஷ்



அதிகூடிய இலக்குகள்

| | |
|---|---|
| 11 | சவுத்தி (நியூஸிலாந்து) 3 ஆட்டங்கள் |
| 9 | ரஹீர் (தெ.ஆபிரிக்கா) 3 ஆட்டங்கள் |
| 9 | டேவி (ஸ்கொட்லாந்து) 3 ஆட்டங்கள் |
| 9 | ரெய்லர் (மே.இ.தீவுகள்) 4 ஆட்டங்கள் |
| 8 | பின் (இங்கிலாந்து) 3 ஆட்டங்கள் |



அதிகூடிய ஓட்டங்கள்

| | |
|---|---|
| 258 | கெயில் (மே.இ.தீவுகள்) 4 ஆட்டங்கள் |
| 217 | வில்லியர்ஸ் (தெ.ஆபிரிக்கா) 3 ஆட்டங்கள் |
| 210 | தவான் (இந்தியா) 2 ஆட்டங்கள் |
| 192 | சாமுவேல்ஸ் (மே.இ.தீவுகள்) 4 ஆட்டங்கள் |
| 185 | டில்சான் (இலங்கை) 3 ஆட்டங்கள் |

## சர்ச்சையைக் கிளப்பும் நடுவரின் தீர்ப்புக்கள்

### டி.ஆர்.எஸ் முறையும் திருப்தியில்லை

என்று கூறி விட்டார். களநடுவர் முடிவுக்கே விடப்படுகின்றது என்று தீர்பளித்து விட்டார். ஆனால் ஆட்டமிழப்புக்கான வாய்ப்பு அதிகமாகவே இருந்தது.

இதனையே களநடுவர் ஆட்டமிழப்பு என்று முன்னரே தெரிவித்திருந்தால், கெய்ல் முடிவை மறுபரிசீலனைக்காக மூன்றாம் நடுவருக்கு விட்டிருந்தால், மூன்றாம் நடுவர் கள நடுவரின் தீர்ப்பு என்று தெரிவித்திருப்பார். அவர் ஆட்டமிழந்திருப்பார். உண்மையில் அது ஆட்டமிழப்பா ? இல்லையா என்பதை மூன்றாம் நடுவரும் தீர்மானிக்க முடியாத இந்த இக்கட்டான நிலைமையே சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆட்டமிழப்புத்தான் என்றால் உறுதியாகஆட்டமிழப்புவழங்க வேண்டும் என்றும், இல்லை என்றால் அதனை மறுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் நடுவருக்கு செல்ல, அவர் அதனை மீளவும். கள நடுவர்களின்முடிவுஎன்றுகொடுப்பது, மூன்றாம் நடுவர் முறைமையில் எந்தப் பலனும் இல்லைஎன்பதையே எடுத்துக் காட்டுவதாக, முன்னாள் வீரர்கள் பலரும் தெரிவித்துள்ளனர்.

எனவே டி.ஆர்.எஸ். முறையைப் பயன்படுத்தி மூன்றாம் நடுவருக்கு முறைப்பாடு செய்யப்பட்டால், அதனை அவரே தீர்மானிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (5–ரி)

## சொதப்புவதை தவிர்ப்போம்

அணிகளுக்கும் உள்ளது. தொடக்கத்தில் இருந்து சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கும் துடுப்பாட்ட வீரர்கள் களத்தில் இருந்தால், எதிரணியின் பந்துவீச்சை கணித்து அதிரடியாக ஓட்டங்களைக் குவிப்பார்கள்.

குறைந்த பந்துகள் மட்டுமே மீதமுள்ள நிலையில் மத்திய வரிசையில் களமிறங்கும் புதிய துடுப்பாட்ட வீரர்கள், எதிரிணியின் பந்துவீச்சை கணிப்பது கடினம். இதனால் வேகமாக ஓட்டங்களைச் சேர்க்க முயற்சிக்கும் போது, இலக்குகளை இழந்து விடுகின்றனர்.

இதனைத் தவிர பின்வரிசை வீரர்களிடமிருந்து அதிக ஓட்டங்களை எதிர்பார்க்க முடியாது. இன்னும் நான்கு லீக் ஆட்டங்கள் மீதமிருப்பதால், மத்திய வரிசையில் கூடுதல் கவனம் செலுத்த உள்ளோம். தவிர, கடைசி நேர இலக்குகள் வீழ்ச்சியை கட்டுப்படுத்த புது வியூகம் வகுத்து, நிறைய ஓட்டங்கள் சேர்க்க முயற்சிப்போம் – என்றார். (5–ரி)

## ஷமி இன்றைய ஆட்டத்தில் இல்லை

கிண்ண ஆட்டத்தில் 116 ஓட்டங்களிலும் வெற்றி பெற்று இருந்தது.

இந்த நிலையில் இன்று இடம் பெறும் ஆட்டத்தில், காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் ஷமி விளையாடமாட்டார். அவரது இடது முழங்காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக விளையாட மாட்டார் எனக் கூறப்படுகிறது. முகமது ஷமிக்கு இடது முழங்காலில் லேசான காயம் ஏற்பட்டு உள்ளது. அதற்காக அவருக்கு நேற்று முன்தினம் ஊசி போடபட்டுள்ளது. (5–ரி)

## இலங்கையின் சாதனைத் துளிகள்

கிந்தியத்தீவுகள்), கங்குலி (இந்தியா) ஆகியோருடன் 4 ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். முதல் மூன்றுஇடங்களில்முறையே இந்தியாவின் சச்சின் டெண்டுல்கார் (49 சதம்), ஆஸ்திரேலியாவின் ரிக்கிபொண்டிங் (30 சதம்), இலங்கையின் ஜெயசூர்யா (28 சதம்) ஆகியோர் உள்ளனர்.

▶▶ சங்ககரா – டில்ஷான் இணைந்து குவித்த 210 ஓட்டங்களே ஒரு நாள் ஆட்டத்தில் இரண்டாவது இலக்குக்கு இலங்கையின் அதிகபட்ச இணைப்பாட்டமாகும். இதே கூட்டணி 2012 ஆம் ஆண்டு இந்தியா வுக்கு எதிராக 200 ஓட்டங் கள் எடுத்ததே முன்பு மிகச்சிறந்த இணைப்பாட்டமாக இருந்தது.

▶▶ உலகின் மிகப்பெரிய மைதானமான மெல்போர்னில், ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கை வீரர்கள் சதத்தை பதிவு செய்திருப்பது இதுவே முதல் முறையாகும். இங்கு இலங்கை அணி 18 ஒரு நாள் ஆட்டங்களில் ஆடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

▶▶ மெல்போர்னில் 300 ஓட்டங்களுக்குமேல் குவித்த அணிகள் தோற்றதில்லை. அந்த வகையில் இது 11 ஆவது நிகழ்வாகும்.

▶▶ குமார் சங்ககரா இந்த ஆட்டத்தில் 2 பிடியெடுப்பும், ஒரு ஸ்ரம்பிங்கும் செய்தார். இதன் மூலம் உலகக் கிண்ணத்தில் அவர் ஆட்டம் இழக்கச் 'செய்தோரின் எண்ணிக்கை 51 ஆக (33 ஆட்டம்) உயர்ந்தது. இந்த வரிசையில் ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் 52 பேரை (31 ஆட்டம்) ஆட்டமிழக்கச் செய்து முதலிடத்தில் உள்ளார். (5–ரி)

## சங்கா முதலிடம்

பெற்றுமுதலிடத்திலும், பொன்டிங் 1743 ஓட்டங்களைப் பெற்று இரண்டாவது இடத்திலும் உள்ளார். குமார் சங்காரா, இன்னமும் 83 ஓட்டங்களை நடப்பு உலகக் கிண்ணத்தில் பெற்றால், அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர்கள் வரிசையில் மூன்றாவது இடத்துக்கு முன்னேற முடியும். (5)

## கிடைத்த வாய்ப்பை கச்சிதமாக கையகப்படுத்திய ஆப்கான்

சிக்ஸர்களை தூக்கியடித்தது வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவதாக அமைந்தது. 9 பந்துப் பரிமாற்றத்தில் 26 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்திருந்த ஹக் பந்து வீச்சு 10 ஆவது பந்துப்பரிமாற்றத்தின் முடிவில் 45 ஓட்டங்களுக்குக்கு ஒரு இலக்கு என்று மாறியது.

உலகக் கிண்ணத் தொடரில் ஒரு அணி ஒரு இலக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவது இது 5 ஆவது முறையாகும். 1975 ஆம் ஆண்டு, 1987 ஆம் ஆண்டுகளில்தலா ஒருதடவையும், 2007 ஆம் ஆண்டில் 2 தடவையும்,தற்போதுஸ்கொட்லாந்துக்கு எதிராக ஆப்கான் இவ்வாறு வென்றுள்ளது.

உலகக் கிண்ணத்தில் தனது 11 ஆவது ஆட்டத்தில் விளையாடிய ஸ்கொட்லாந்து, முதல் வெற்றிக்காக இன்னும் காத்திருக்க வேண்டிய பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டது. ஆப்கானுக்கு தனது 3 ஆவது ஆட்டத்திலேயே முதல் வெற்றியை பதிவு செய்து அசத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸ்கொட்லாந்து அணி முதல் முறையாக 200 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளது. முன்னதாக, 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 186 ஓட்டங்கள் எடுத்ததே அந்த அணியின் அதிகபட்சமாக இருந்தது. (5–ரி)


# புதுப் பயிற்சி

இந்தியவீரர்களுக்குஇடையே நடந்த களத்தடுப்பு பயிற்சியில், ஹோக்லியின் கூட்டணி வெற்றி பெற்றது.

இந்திய அணி, இன்று இடம் பெறவுள்ள ஆட்டத்தில், ஐக்கியஅரபுஎமிரேட்ஸ்அணியை எதிர்கொள்கிறது. இதற்காக இந்திய வீரர்கள் இரண்டு வித்தியாசமான களத்தடுப்புப் பயிற்சிமுறையில்ஈடுபட்டனர். முதலில் 'டம்மி கேட்ச்' முறையில் பயிற்சி மேற்கொண்டனர். இதன்படி, நான்கு வீரர்கள் வரிசையாக நின்றனர். பின் 10 மீற்றர், தூரத்தில் இருந்து துணைப் பயிற்சியாளர் சஞ்சய் பங்கர், ரென்னிஸ் மட்டையை வைத்து ரென்னிஸ் பந்தை அடித்தார். முதலில் நின்ற வீரர் டம்மியாகச் செயற்பட்டார். இவர் பந்தைப் பிடிக்க மாட்டார், மாறாகப் பந்து வரும் தருணத்தில் சட்டென விலகிவிடுவார். இந்த சில வினாடிகளில் அவருக்கு அடுத்துள்ள வீரர் துடிப்பாக செயற்பட்டு பிடியெடுக்க வேண்டும். இந்தப் பயிற்சியின் மூலம் 'ஸ்லிப்' பகுதியில் களத்தடுப்பு செய்வதற்கு இலகுவாக இருக்கும். இந்தப்பயிற்சியில்ரெய்னா, ஜடேஜா, விராத் ஹோக்லி சிறப்பாக செயற்பட்டனர்.

களத்தடுப்பு ஆட்டம் என்ற பெயரில்இரண்டாவது பயிற்சி வழங்கப்பட்டது. இதற்காக 8 பேர் வீதம் 2 அணிகள் பிரிக்கப்பட்டன. ரெய்னா, ஹோக்லி, ஷிகர் தவான், ஸ்டூவர்ட் பின்னி போன்ற சிறந்த களத்தடுப்பாளர்கள் ஒரு அணியாகவும், அஸ்வின், ஜடேஜா என்று களத்தடுப்பில் சற்றுப் பலவீனமானவர்கள் மற்றொரு அணியாகவும் களம் கண்டனர்.

10 மீற்றர் தூரத்தில் இருந்து துணைப் பயிற்சியாளர்களான சஞ்சய் பங்கர், ஸ்ரீதர் ஆகியோர், இரு பிரிவு வீரர்களுக்கும் மாறி மாறி பந்தை எறிந்தனர். இதை பெற்று, 'பிளாஸ்டிக் விக்கெட்' மீது சரியாக எறிந்து தகர்க்க வேண்டும். இதில் யார் துல்லியமாக எறிகிறார்கள் என்பதை பயிற்சி நிபுணர் சந்தீப், சிறப்புப் பயிற்சியாளர் ராகவேந்திரா கண்காணித்தனர். மிகவும் சுவையாக நடந்த இந்தப் பயிற்சியில் ஹோக்லி, ரெய்னா அடங்கிய கூட்டணி வெற்றி பெற்றது. (5)



## இந்திய சூதாட்ட தரகருடன் தொடர்பு

பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அல் அமின் ஹுசைன் அனுமதியின்றி இரவு 10 மணிக்குப் பின்னர் வெளியில் சுற்றியதாகத் தெரிவிக்கப்பட்டு, உலகக் கிண்ண அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார்.

இந்த நிலையில் அல் அமின் ஹுசைன் அணியில் இருந்து நீக்கப்பட்டதற்கு, அவர் இந்திய சூதாட்ட தரகரை சந்தித்து பேசியது தான் காரணம் என்று பங்களாதேஷ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஒழுங்கீனமாக நடந்து இருந்தால் அவருக்கு அபராதம் தான் விதிக்கப்பட்டு இருக்கும். சூதாட்ட தரகரை சந்தித்ததால் தான் அல் அமின் ஹுசைன் அணியில் இருந்து நீக்கப்பட்டார் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை பங்களாதேஷ்கிரிக்கெட்சபைத்தலைவர் ஜலால் யூனுஸ் மறுத்துள்ளார். ஒழுங்கீன நடவடிக்கை காரணமாகத்தான் அல் அமின் ஹுசைன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (5-ரி)

### தினம் ஒரு பரிசுப் போட்டி 16

கடந்த (2011) உலகக் கிண்ணத் தொடரின் அதிகூடிய ஓட்டங்கள் பெற்ற வீரர் யார்?

.......................................................................

பெயர் : ..................................................

தே.அ.இல. : ..............................................

முகவரி : ..................................................

..................................................

தொலைபேசி இல.: ......................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (01.03.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

### பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

.............................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

### போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

### அரையிறுதி பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)...................... 2)......................

3)...................... 4)......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015

தலா 5,000/= 20 பேருக்கு

## 5 லட்சம் ரூபாவுக்கான பரிசுக் கூப்பன்

### மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

......................

தொலைபேசி

......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2 1/2 லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1 1/2 லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

**லக்கி பான்சி கவுஸ்**
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்**
பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா**
350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கனன் போட்டோ**
165 பிரதான வீதி,பருத்தித்துறை.
**சூரியா பாமசி**
புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்**
85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்**
3ஆம் சந்தி கெருடாவில்.
**தர்மலிங்கம்**
கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சோலை**
இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்**
ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்**
மூளாய் வீதி வட்டுக்கோட்டை.

**தயாளன் ஸ்ரோர்ஸ்**
பலாலி,வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்**
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்**
பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி.
**ஓம் கணேசா**
இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்**
103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்**
14. விதானையார் வீதி சுண்டுக்குளி.

**சுரேஸ் ஸ்ரோர்ஸ்**
இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே**
செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்**
சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்**
பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்**
சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்**
பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்**
சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை**
பஸ் நிலையம் சுன்னாகம்.

**கிருபா போட்டோ**
கே.கே.எஸ்.வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்**
நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்**
ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி**
ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்**
அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை**
வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை**
மல்லாவி.
**கோமதி நெற்கபே**
வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை**
24, பஸ் நிலையம் வவுனியா.

**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்**
ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்**
31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்**
பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்**
தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்பிசிஎஸ்)** பூநகரி.
**டிலசிகா**
124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.

**சஜி புக் சொப்**
விசுவமடு.
**வரணா புக்சொப்**
755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்**
குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை**
பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்**
வரணி.
**விநாயகர் களஞ்சியம்**
அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்**
வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,**
நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்**
காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். உடன் பணிபுரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். சிலர் எதிர்பாராத இடமாற்றத்தைச் சந்திக்கலாம்.

**இடபம்:** சொந்தத் தொழில் புரிவோர் சிறிது சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும். தொழில் நிமித்தமாக நீண்ட தூரம் பயணம் போக வேண்டி வரும்.

**மிதுனம்:** எதிரிகள் வகையில் அசட்டையாக இருத்தல் கூடாது. புதிய முதலீடுகளின் போது ஆலோசனைகள் அவசியமாகின்றன. பண விடயத்தில் தொடர்ந்து அக்கறை தேவை.

**கடகம்:** எந்த ஒரு காரியத்தையும் விடா முயற்சியுடன் செய்வீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டுச் சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். வீண் மனக்கவலையை உண்டாக்கும்.

**சிங்கம்:** அலைச்சலால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாத நிலை ஏற்படலாம். வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத போட்டிகள் ஏற்படும்.

**கன்னி:** தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடு செய்யும் முன் யோசிப்பது நல்லது. கடன் விடயங்களில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி இருக்கும்

**துலாம்:** குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். அயலில் உள்ளோரை அனுசரித்துச் செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், நீண்டதூர பயணங்களின் போதும் கவனமாக இருப்பது நல்லது.

**விருச்சிகம்:** வீண் அலைச்சல் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் ஏற்படும். வாக்கு வன்மையால் அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் எந்த ஒரு காரியத்தையும் சிந்தித்துச் செய்வது நல்லது.

**தனுசு:** நீண்ட முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். ஆனால் பொருளாதார ரீதியாக சிறப்பாக இருக்கும். எதிர்பார்த்த புகழ், பாராட்டுக் கிடைக்கும். எதிர்பார்த்த பதவி கிடைப்பதில் வாக்குவாதம் ஏற்படலாம்.

**மகரம்:** வேலையில் தீவிர அக்கறை எடுக்க வேண்டும். மருத்துவச் செலவு வெகுவாகக் குறையும். மனதில் பட்டதை பளிச்சென்று சொல்வீர்கள்.


**கும்பம்:** எடுத்த காரியத்தை திறமையாகச் செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். சுய நம்பிக்கை அதிகரிக்கும். எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும்.

**மீனம்:** மனதை கவலை கொள்ளச் செய்த பிரச்சினைகளில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சாதகமான பலன் கிடைக்கப் பெறலாம். தொழில், வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும், சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும்.

# அசத்தும் குரங்கு



இங்கிலாந்தில் உள்ள உயிரியல் பூங்காவில் ஒரு கொரில்லா, உடற் பயிற்சிகளை செய்து பார்வையாளர்களை மகிழ்வித்து வருகிறது. 'கிவு' என்ற பெயர் கொண்ட அந்த கொரில்லா, 2002 ஆம் ஆண்டு பிறந்தது. 2006 ஆம் ஆண்டு, பூங்காவில் சேர்க்கப்பட் டது. பார்வையாளர்க ளிடம் பாசத்தை வெளிப் படுத்தியதால், உடனடியாக பிரபலம் ஆனது. பார்வையாளர்களின் பாராட்டுகளைப் பெற்றது. தற்போது, உடற் பயிற்சி திறமையும் அந்த கொரில்லாவுக்கு வந்து சேர்ந்துள்ளது. ஜிம்மில் பயிற்சி பெறுபவர்களே வெட்கப்படும் அளவுக்கு, உடற் பயிற்சிகளைச் செய்து பார்வையாளர்களைப் பரவசப்படுத்தி வருகிறது. அதற்கேற்ப, ஆரோக்கியமான உணவுக் கட்டுப்பாட்டையும் பின்பற்றி வருகிறது.




# பிகே தமிழில் ரீமேக் ஆகிறதா?


மோகன்லால் நடித்த திரிஷயம்' படம் தமிழில் 'பாபநாசம்' என்ற பெயரில் ரீமேக் செய்யப்படுகின்றது. கமல்ஹாசன் நடிக்கிறார். ஜீது ஜோசப் இயக்குகிறார்.

அதேபோல் ஹிந்தியில் அமீர்கான் நடித்து வெளிவந்த, மாபெரும் வெற்றிப் படமான பிகே தமிழ் ரீமேக்கில், கமல் நடிப்பார் என்று கூறப்பட்டு வந்தது. இந்தப் படத்தையும் பாபநாசம் பட இயக்குந ர் ஜீது இயக்குவார் என தகவல் வெளியாகி உள்ளது.

இது பற்றி ஜீது ஜோசப் கூறும்போது, அமீர்கான் நடித்த 'பிகே' ஹிந்தி படத்தின் தமிழ் ரீமேக் இயக்க எனக்கு வாய்ப்பு வந்திருக்கிறது. இதில் கமல் நடித்தால் நன்றாக இருக்கும். ஆனால் அவர் நடிப்பாரா? இல்லையா என்பது பற்றி முடிவாகவில்லை. இது குறித்து கமலிடம் பேச்சு நடக்கிறது. அவரது முடிவை பொறுத்து இந்தப் படம் உருவாகும், என்றார்.

தற்போது கமலின் பாபநாசம் படத்தின் இறுதிகட்டப் பணிகள் நடந்து வருகின்றன.



# ரிலாக்ஸா வாசியுங்க...

**மாணவன் :** டீச்சர்...நேற்று நீங்கள் சொன்ன மாதிரியே.. இன்றைக்கி நாங்க ஐந்து பேரும் சேர்ந்து ஒரு பாட்டியை, ரோட்டுக்கு இந்த பக்கத்துல இருந்து அந்தப் பக்கமா கொண்டு வந்து விட்டோம்!

**ஆசிரியர் :** வெரிகுட்...!! நல்ல காரியம்! வயசானவங்க வீதியைக் கடக்க இப்படித் தான் உதவி செய்யணும். அதுசரி....... ஒரு பாட்டிக்கு எதுக்கு ஐந்து பேர்....?!

**மாணவன் :** பின்ன என்ன டீச்சர்...! அவங்க வரவே மாட்டேன்னு அடம் பிடிச்சாங்க...! நாங்கள் ஐந்து பேரும்தான் சேர்ந்து இழுத்து பிடிச்சு கொண்டுவந்து விட்டோம்...!

# பேய் வீடு




எகிப்தின் நைல் நதிக்கு அருகில் இருக்கும் தீப்ஸ் பகுதியில் 3 ஆயிரம் ஆண்டுகளாக, உலகின் கண்களில் இருந்து மறைந்து கிடந்த துட்டன்காமுனின் கல்லறையை, பிரிட்டனைச்சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் திறந்தார். கல்லறையின் நான்காவது மற்றும் கடைசி அறை, பல அதிகாரிகளின் முன்னிலையில் திறக்கப்பட்டது.

ஒன்றுக்குள் ஒன்றாக வைக்கப்பட்டிருந்த மூன்று சவப்பெட்டிகளில், கடைசிப் பெட்டியில் மன்னர் துட்டன்காமுன் மீளாத் துயிலில் ஆழ்ந்திருந்தார். 18 வயதில் மர்மமான முறையில் இறந்த மன்னர் இவர். தனது கல்லறையைத் திறப்பவர்களுக்கு சாவு நிச்சயம் என்று துட்டன்காமுனின் கல்லறையில் எழுதப்பட்டிருந்தது. இந்த நிலையில், கல்லறையைத் திறந்து 6 வாரங்களுக்குப் பிறகு, ஆராய்ச்சியாளர் சாவடைந்தார். இதேபோல், அதே ஆண்டில் அந்தக் கல்லறையைப் பார்வையிட்ட ஜோர்ஜ் ஜே கவுல்ட் என்பவர் சில மாதங்களில் மர்மக் காய்ச்சலால் உயிரிழந்தார். துட்டன்காமுனின் உடலை எக்ஸ்–ரே மூலம் ஆய்வுசெய்த சேர் ஆர்ச்சிபால் டக்ளஸ் அடுத்த ஆண்டு மர்ம நோயால் இறந்தார்.

அதேபோல, இந்தப் பணியில் ஈடுபட்ட 58 பேரில் 8 பேர் அடுத்தடுத்து சாவு அடைந்தனர். அதற்கு மன்னரின் ஆவிதான் காரணம் என்று கூறப்பட்டது. இப்படி பலர் மர்மமாக உயிரிழந்தது பலரின் கற்பனையைப் பயங்கரமாகத் தூண்டிவிட்டது.

இறுதியில் அந்த மாடமாளிகையை பேய்வீடாக்கி விட்டனர். இந்த நிலையில், செல்சியா அணிக்காக கால்பந்தாடி வரும் எடோ அந்த மாடமாளிகையை வாங்கியுள்ளார். இவர் எத்தனை நாளைக்கு தாக்குப் பிடிக்கப் போகின்றாரோ ?

# சுற்றுலாப் பயணிகளுடன் யாழ்.வந்தது கரிக்கோச்சி



யாழ்ப்பாணம், பெப்.28
நிலக்கரியால் இயங்கும் (கரிக் கோச்சி) ரயில் ஒன்று சுற்றுலாப் பயணமாக கடந்த 24ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தது. ஏராளமானோர் அதைப் பார்த்துப் பரவசப்பட்டனர்.

அந்த ரயில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வந்திருந்தபோது வவுனியா ரயில் நிலையத்திலும் தரித்து நின்றது.

முன்னொரு காலகட்டத்தில் கரிக் கோச்சி என்று அழைக்கப்பட்ட, நிலக்கரியால் இயங்கும் இந்த ரயிலே பாவனையில் இருந்தது.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் அத்தகைய ரயிலைக் காண்பதென்பது மிக அபூர்வமானது என்பதால் அதைப் பார்ப்பதற்காக பெரும் மக்கள் கூட்டமொன்று அங்கு திரண்டிருந்ததைக் காண முடிந்தது. (வ-22)

# சத்துணவு தயாரிக்கும் திட்டம் மூதூர் கிராமங்களில் ஆரம்பம்

திருகோணமலை, பெப்.28
மூதூர் பிராந்திய மருத்துவ அதிகாரி பணிமனையும், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தி னரும் இணைந்து சஞ்ஜீவி திட்டத்தினூடாக 'ஒரு கோப்பை உணவில் நிறை உணவு பெறத்தக்கதாக தயாரிக்கும் திட்டத்தை மூதூரில் உள்ள சகல கிராமங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

கிராம மட்டத்திலுள்ள அன்னையர் ஆதரவுக் குழு மற்றும் கிராம மாதர் அபிவிருத்தி சங்கத்தினர் இணைந்து பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் இந்தத் திட்டத்தை அறிமுகப் படுத்தி வருகின்றனர்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 80 கிராமங்களில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. உள்ளூர் உற்பத்திகளான காய்கறிகள், பழங்கள், கீரைகள், தானியங்கள், புரத உணவுகளைப் பயன்படுத்தி குறைந்த செலவில் மனித உடலுக்குத் தேவையான 6 வகையான போசாக்கு சத்துக்களை எவ்வாறு பெறலாம் என்பதே இந்த விழிப் புணர்வின் பிரதான கருவாகக் காணப்படுகிறது. போர், சுனாமி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மூதூர் பிரதேசத்தில் போசாக்கு தொடர்பான பிரச்சினைகள் மக்கள் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

பிறக்கும் குழந்தைகளும் நிறை குறைபாட்டுடன் காணப்படுவதை விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஆய்வொன்றினூடாக அறிந்துகொண்டதன் காரணமாக இந்தச்செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (வ)

**கிளினிக் நடைபெறுகிறது**

சம்பந்தர் மொடேர்ன் வைத்தியநிலையத்தில் வழமைபோல் என்பு முறிவு, நெரிவு கிளினிக் (ORTHOPEADIC) நடைபெறுகின்றது.

தொடர்பு : 077 873 0129

**Lanka Skill Development Academy (Pvt) Ltd**

UK ABC AWARD Basel Hotel Management College in Jaffna

**வேலைவாய்ப்பு**

Hotel Industry ஆசிரியர் / பயிற்றுவிப்பாளர் (பெண்கள்)

**தகுதிகள்**

சிறந்த ஆங்கில அறிவு
சிறந்த கணினி அறிவு
கற்பித்தலில் முன்னனுபவம்

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி பயிற்சியளிக்கப்பட்டு வேலையில் இணைக்கப்படுவார்
(பயிற்சியின் ஆரம்பத்திலிருந்தே சம்பளம்)

Hotel Management Course
(6 month to 1 year with Training)
இரண்டாவது பிரிவுக்கான அனுமதிகள்
03 மார்ச் ஆரம்பம்.
O/L தகுதி போதுமானது.

தொடர்புகளுக்கு:
21, சிவன்கோயில் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

T.P : 021 454 6008
076 547 8007
077 815 3187

(57321)(3.7.5)

# வர்த்தக சந்தையில் விற்பனையாகும் எனாமல் வர்ணப்பூச்சுக்களில் ஈயம்

## உறுதிப்படுத்தியது சுற்றாடல் நியதிகள் மையம்

கொழும்பு, பெப்.28
வர்த்தக சந்தையில் விற்பனை செய்யப்படும் எனாமல் வர்ணப்பூச்சுக்களில் ஈயம் கலந்திருப்பதாக சுற்றாடல் நியதிகள் மையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைப் பெறுபேறுகளில் உறுதிப் படுத்தப் பட்டுள்ளது.

பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த 18 வர்ணப்பூச்சு மாதிரிகளுள் 8 மாதிரிகளில் நுகர்வோர் தொடர்பாக சேர்க்கப்பட்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச ஈயத்தின் அளவுப் பிரமாணத்தை விட அதிகரித்த அளவில் ஈயம் கலந்திருப்பது பரிசோதனைகளில் உறுதிப் படுத்தப் பட்டிருந்தது.

2003. ஆண்டின் இலக்கம் 9 ஐக் கொண்டுள்ள சட்டவிதிக்கு அமைய நுகர்வோருக்கு அமைவான வர்ணப் பூச்சுக்களில் குறைந்த பட்சமாக ஒரு மில்லியனுக்கு 600 மூலக்கூறுகள் என்றவாறே ஈயம் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் 8 மாதிரிகளில் ஒரு மில்லியனுக்கு 600 மூலக் கூறுகள் என்ற அளவுப் பிரமாணத்தை விட பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக அதிகரித்த அளவில் ஈயம் உள்ளடக்கப்பட்டிருப்பதாக சுற்றாடல் நியதிகள் மையம் தெரிவிக்கிறது.

மேலும் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவை விடவும் மிக அதிகளவில் ஈயம் செறிந்துள்ள வர்ணப்பூச்சு வகை ஒன்றில் ஈயம் அற்றது என்று குறிப்பிடப்பட்டு இன்னமும் விற்பனைக்கு விடப்பட்டிருப்பதாகவும், அதன் மூலம் நுகர்வோர் உரிமைகள் பாரதூரமான விதத்தில் மீறப்படுவதாகவும் தெரிவிக்கும் சுற்றாடல் நியதிகள் மையம், இதுநாள் வரையிலும் நுகர்வோர் அதிகாரசபை அது குறித்து கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது. (வ-22)

**சித்திரத்தேர் வெள்ளோட்டம்**



**கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ சிவமகா காளி அம்பாள் தேவஸ்தானம்**

எதிர்வரும் 02.03.2015 திங்கட் கிழமை முற்பகல் 11 மணிக்கு விநாயகர் சிற்பாலய கலாபூஷணம் இராசரத்தினம் குழுவினரால் நிர்மாணிக்கப்பட்ட 3 தேர்களும் வெள்ளோட்டம் நடைபெறும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பஞ்சரத பவனியும் நடைபெறும்.

அறங்காவலர்.

(57345)(4.3.7)

**ST.JOHN'S COLLEGE, JAFFNA
CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
THE JAFFNA ACADEMY AND SCHOOL OF TECHNOLOGY**

ADMISSION-ST.JOHN'S COLLEGE: 2016 FOR GRADE I, GRADE 4, GRADE 6, GRADE 10 & A/L
CHUNDIKULI GIRLS 'COLLEGE: 2016 FOR GRADE I GRADE 6 & GRADE 12

01.
அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 02.03.2015 முதல் 16.03.2015 வரை பெற்றுக் கொள்ளலாம்.
ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பபடிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21.03.2015 சனிக்கிழமை அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

02. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.

03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/=

05. வயதெல்லைகள்: -
தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2010 இற்கும் 31.01.2011 இற்கு மிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2007 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2005 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2001 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

06. தரம் 12 (A/L -2018 Batch) விண்ணப்பதாரி 01.02.1999 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

07. தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 17.10.2015 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:
01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02. தரம் 12 இற்கு(A/L-2018 Batch) தமிழ் மொழி மூலம் (தொழில்நுட்பத்துறை, விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்), ஆங்கிலமொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) London A/L 2016/2017 இற்கும் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக் கொள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 02.01.2016 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 06.01.2016 ஆரம்பமாகும்.
03. சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L) (தமிழ்/ஆங்கில மொழி மூலம் 2018) (Batch) விண்ணப்பதாரிகள்O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.
04. The jaffna Academy and School of Technology Gr.5, மற்றும் 2 ஆம் தடவையாக O/L, A/L எடுக்கும் மாணவர்களினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அதிபர்கள்.

(சி/16818)(4.3.7)

## கூட்டம்

கல்வியங்காடு பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் ஆலய நிர்வாகசபையின் வருடாந்தப்பொதுக்கூட்டம்நாளைஞாயிற்றுக்கிழமைபிற்பகல்3.30மணிக்கு தலைவர் கோ.சிவசுந்தர மூர்த்தி தலை மையில் நடைபெற வுள்ளது. (வ)


கண்ணீர் அஞ்சலி



ஸ்ரீமான் இரத்தினம் கந்தசாமி
(நீர்வேலி வடக்கு)

அவர்கள் நீர்வேலி செல்லக்கதிர்காம முருகன் ஆலயச்சூழலில் வாழ்ந்து, தாமும் தம் குடும்பமுமாக ஆலய வழிபாடுகளில் பங்கேற்று தொண்டு செய்து வாழ்ந்தவர். தீபமேற்றும் திருப்பணியில் முன்நின்றவர்.

பிற்காலத்தை பிரான்ஸில் கழிக்க நேரிட்ட போதும், நோயுற்ற வேளையிலும் "நான் கதிர்காம கோயிலில் நிற்கிறேன்" என்றே தன்னை மறந்து சொல்லிச் சொல்லி இறைபதம் எய்தியவர்.

அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் மனைவி, பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறுவதுடன், அவரின் ஆன்மா செல்லக் கதிர்காமத்து முருகப்பிரான் திருமலரடிகளில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

(57326)(5.3.7)

ஆலய குருக்களும் அறங்காவலர் சபையினரும்,
செல்லக்கதிர்காம சுவாமி ஆலயம், நீர்வேலி.



31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
28.02.1946

மறைவு
30.01.2015

கடந்த 30.01.2015 சிவபதமடைந்த
அமரர் காசிப்பிள்ளை
செல்வேந்திரமணி

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (01.03.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக்கல்லூரி அருகில்,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.
(57304)(4.3.7)



ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
நாகம்மா
சுப்பிரமணியம்



அன்பிற்கினிய பிள்ளைகளை
நற்பிரஜைகளாக்கி
நின்றொளிர்ந்த நிலாவே!
பண்புக்குரிய
பணியைப் பண்புடனே
நிறைவேற்றியவரே!
எம் உயர்ச்சிக்குப் பின்புலமாக
நின்ற பெருமாட்டியே!!
உம்மைப் பிரிந்து ஐந்தாண்டானதோ!
மறக்கவில்லை
உங்கள் நினைவு...

தோற்றம்
22.06.1939

மறைவு
23.02.2010

(54216)(5.3.7)

மிஷன் பாடசாலை வீதி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



நினைவஞ்சலி

9 ஆம் ஆண்டு



தோற்றம்
16.01.1922

மறைவு
28.02.2006

அமரர் சிவகுரு
மாணிக்கவாசகர்
திதி: மாசி அமாவாசை

6 ஆம் ஆண்டு



தோற்றம்
05.03.1986

மறைவு
28.02. 2009

அமரர் சிவபாலச்சந்திரன்
பிரசாத் (பேராதனைப் பல்கலைக்கழகம்)
திதி : சதுர்த்தி

சங்கட சதுர்த்தியில் பிறந்த மாணிக்க மலையே!
அறிவுக்கடலே! சங்கடங்களைத் தீர்த்து
நல்வழி காட்டிய நீ சதுர்த்தி திதியில் இறையடி
சேர்ந்தாய் உங்களை நினைக்க கண்ணீர் ஆறாக ஓடுகிறது
இறைவனின் விளையாட்டில் தோற்று சோர்வோடு வாழ்கின்றோம்.
ஆண்டவனின் அடியில் இருந்து நல்வழி காட்டுங்கள்
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
உங்களைப் போன்ற திறன் உடையவர்களை எப் பிறப்பில் காண்போம்?
ஓம் சாந்தி

32/3, முரசு மோட்டை, பரந்தன் (51369)(4.3.7) குடும்பத்தினர்.


## தென்மராட்சி இலக்கிய அணியின் வள்ளுவர் விழா ஞாயிறன்று

யாழ்ப்பாணம், பெப்.28

தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் வள்ளுவர் விழா நாளைஞாயிற்றுக்கிழமைகாலை9 மணிக்கு சாவகச்சேரி ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில்சிலேடைக்கவிரத்தினம் க.கணபதிப்பிள்ளையின் "மாணிக்க வாசகர் வரலாறு – ஓர் அகச்சான்றுக் கண்ணோட்டம்" நூல் வெளியீடு நடைபெற வுள்ளது. தொடர்ந்து பி.ப 2.30 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் ஆன்றோர் கௌரவிப்பும் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் வள்ளுவன் வழித்தடத்தில் வல்லமை காட்டிய பெருங்கவிஞன் என்ற தலைப்பில் இலக்கிய ஆணைக்குழு, நடுவர் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் ச.மார்க்கண்டு, வே.ஞானசம்பந்தன், வே.உதயகுமார், அ.வாசுதேவா ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

"வர்க்கப் பாகுபாட்டுக்கு வழிவகுத்த வள்ளுவர் குற்றக் கூண்டில்" என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நிகழ்வும் நடைபெறவுள்ளது. இதில் நடுவராக கம்பவாரிதி இ.ஜெயராஜ் மற்றும் பேராசிரியர் தி.வேல் நம்பி, விரிவுரையாளர் ச.லலீசன், கவிஞர் த.நாகேஸ்வரன், கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ–10)

## வவுனியாவில் நாளை நற்பண்பு செயலமர்வு

வவுனியா, பெப்.28

வவுனியா புதிய வேலர் சின்னக்குளம் கிராமத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் நற்பண்பு செயலமர்வு நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகமும் புதிய வேலர் சின்னக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயமும் இணைந்து இந்த புண்ணிய கிராம வேலைத் திட்டத்தை ஒழுங்கு செய்துள்ளன.

வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நற்பண்பு செயலமர்வில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பிரபா செல்வரூபன், வவுனியா மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தே.மகேஸ்வரன், ஆனந்த குமாரசாமி வித்தியாலய அதிபர் மு.தெய்வேந்திரன், கிராம அலுவலர் எஸ்.நந்தகோபாலன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.விஜயந்தி, சமுர்த்தி உத்தியோகத்தர் ற.மு.றிப்தீன், நற்பணி மன்றத் தலைவர் வே.சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

மன வளக் கலை குறித்து ல.கலைச்செல்வன், கலாபூஷணம் பண்டிதை செல்வி யோக லட்சுமி சோமசுந்தரம், மொழியரசி கலாகுமரப்பா, என்.சுதாகரன் ஆகியோர் நிகழ்த்தும் சிறப்பு சொற்பொழிவு மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலைநிகழ்வு கள் என்பன சிறப்பு நிகழ்வுகளாக இடம் பெறும். (ஓ–421)

## பணிஸ் வகைகளின் விலை இதுவரை குறையவில்லை

### வடமராட்சி மக்கள் விசனம்

கரணவாய், பெப்.28

வடமராட்சிப் பகுதியிலுள்ள வெதுப்பகங்களில் பாணின் விலை தவிர ஏனைய உற்பத்திப் பொருள்களின் விலைகள் இதுவரை குறைக்கப்படாமை தொடர்பாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அரசினால் அறிவிக்கப்பட்ட விலை குறைப்பை அடுத்து பாண் 60 ரூபாவில் இருந்து 54 ரூபாவாக விலை குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால் வெதுப்பகத்தின் ஏனைய உற்பத்திப் பொருள்களான பணிஸ், அட்டைப் பணிஸ், கறி பணிஸ் உட்பட அனைத்துப் பொருள்களும் பழைய விலையிலேயே விற்பனை செய்யப் படுகின்றன.

அதேபோல சில சிற்றுண்டிச் சாலைகளிலும் அவற்றின் விலைகள் குறைக்கப்படவில்லை. தேநீர் 15 ரூபா வீதமும் பால் தேநீர் 25 ரூபா முதல் 30 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதோடு சிற்றுண்டி வகைகளும் பழைய விலைகளிலேயே விற்பனை செய்யப் படுகின்றன.

எனவே வெதுப்பக உற்பத்திப் பொருள்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளின் விற்பனைப் பொருள்கள் என்பவற்றை குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ள வேண்டும் என்று வடமராட்சி பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ–108)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு
11.04.1948

இறப்பு
30.01.2015

அமரர் சீவபூஷனம் பொன்னையா

கடந்த 30.01.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (28.02.2015) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெருங்குளம் வீதி.
மடத்தடி. சாவகச்சேரி.
குடும்பத்தினர்.
(57224)(3.7.8)


## நீதிமன்றின் பெயரில் கடன் பெற்றவர்மீது நடவடிக்கை

தென்மராட்சி, பெப். 28

நீதிமன்றின் பெயரில் கடன் பெற்று செலுத்தப்படாமல் உள்ள விடயம் நேற்று முன்தினம் வர்த்தகர் ஒருவரால் நீதி வானின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. நீதிமன்றின் தேவைக்கென பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு நீண்ட நாள்களாக பணம் வழங்காததால் பொறுமையிழந்த வர்த்தகர் இவ்விடயத்தை நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் சமர்ப்பித்தார்.

இவ்விடயம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக் குமாறு பொலிஸாருக்கு உத்தர விட்ட நீதிவான், நீதிமன்றின் பெயரை பயன்படுத்தி எவரும் வர்த்தக நிலையத்தில் கடனுக்கு பொருள்கள் கொள்வனவு செய்திருந்தால் உடனடியாக நீதிமன்ற பிரதம முகாமைத்துவ உதவியாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவித்துள் ளார். (வ–9)

## நடமாடும் சேவை

கோண்டாவில் சமூக அபிவிருத்திக்கான செயற்பாட்டு மையத்தின் அனுசரணையுடன் யாழ்.சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட உதவியும் நடமாடும் சேவை யும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு.கல்வியங்காடு சங்கிலியன்மன்றத்தில்நடைபெறவுள்ளது. நடமாடும் சேவையில் குடும்ப வன்முறை, தாபரிப்பு, விவாகரத்து, காணி தொடர்பான இலவச சட்ட ஆலோசனைகள், சட்ட உதவிகள் மற்றும் பிறப்பு இறப்பு, விவாக சான்றிதழ்கள் தொடர்பான ஆலோச னைகளும், பிற ஆலோசனைகளும்வழங்கப்படவுள்ளன. (வ–14)

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப்.28

செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செல்வி சா.மாணிக்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக யாழ் கல்வி வலய ஆரம்பப்பிரிவு விளையாட்டுச் செயற்றிட்ட இணைப்பாளர் எஸ்.சிவகாந்தி கலந்து கொள்வார். (வ)

## படைப்புக்கள் ஓர் அறிமுகம் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ்.இலக்கிய குவியத்தின் ஏற்பாட்டில் திருமதி மைதிலி தயாபரனின் படைப்புக்கள் ஓர் அறிமுகம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ்ப்பாணம் டேவிட் வீதியில் அமைந்துள்ள அழகியற் கல்லூரி திருமறைக் கலாமன்றத்தில் வேலணையூர்–தாஸ் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் ஜெ.வினோத், ந.சத்தியபாலன், ந.குகபரன், சி.ரமேஸ், மைதிலி தயாபரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (வ–23–10)

## நூல் வெளியீடு

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி ஆசிரியை ஜனாபா நஸ்பியா அஜித் எழுதிய 'சிதறல்களில் சில துளிகள் (நினைவுகள் நிஜங்களாகலாம்)' நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக் கிழமை நடைபெறவுள்ளது.

ஒஸ்மானியாக் கல்லூரி மஃமூத் மண்டபத்தில் இன்று பி.ப 4 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு கவிஞர் சோ.பத்ம நாதன் தலைமை வகிக்கவுள்ளதுடன் பிரதம விருந்தினர்களாக மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்மாவட்ட இந்திய துணைத் தூதர் ஏ.நடராஜா மற்றும் யாழ். கல்வி வலய மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (வ–10)



பொத்துவில் ஆதார மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவின் திறப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது. மருத்துவ அத்தியட்சகர் ஏ.எம்.இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுகாதார இராஜாங்க அமைச்சர் எம்.ரீ.ஹஸன் அலி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இரத்த வங்கிப் பிரிவைத் திறந்து வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் பைஸல் காசீம், அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ)

## இந்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 28

புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், இந்து விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனை கௌரவித்து இந்து மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான விடயங்களை பகிரும் நிகழ்வு இன்று பி.ப 3 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமை வகிக்கவுள்ளார். நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (வ-10)

# மோசடியில் தொடர்புடையோரை கைது செய்ய துரித நடவடிக்கை

கொழும்பு, பெப்.28

ஊழல் மோசடிகளில் சம்பந்தப்பட்டுள்ள நபர்களைக் கைது செய்வது தொடர்பான செயற்றிட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கு தேசிய நிறைவேற்றுச் சபை தீர்மானித்துள்ளது.

கடந்தகாலத்தில் இடம்பெற்றுள்ள பெரும் ஊழல்கள் மற்றும் மோசடிகளுடன் தொடர்புடையோருக்கு எதிராக இன்னமும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருப்பதால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு தேசிய நிறைவேற்றுச் சபை இணங்கியுள்ளது.

இதற்கு மேலதிகமாக அரசமைப்புக்கான 19ஆவது திருத்தத்தை மார்ச் மாதத்தின் முதலாவது வாரத்திலேயே நாடாளுமன்றத்தில் முன் வைப்பதற்கும் தேசிய நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த 19ஆவது திருத்தம் தொடர்பாக சுதந்திரக் கட்சியின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் அத்திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பாகவும் தேசிய நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

மேலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் கையகப்படுத்தப்பட்டுள்ள வடக்கில் உள்ள காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிப்பது தொடர்பாகவும் நிறை வேற்றுச் சபையின் உறுப் பினர்கள் கலந்தாலோசித்துள்ளனர்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளுக்கு சில அரச அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்காதிருக்கும் நிலைகாணப்படுவதால் அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும் தேசிய நிறைவேற்றுச் சபையில் ஆராயப் பட்டுள்ளது. (வ-22)

### கலந்துரையாடல்

சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் 'நல்லாட்சிக்கான சந்தர்ப்பங்கள் ஒரு நோக்கு' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நாளைஞாயிற்றுக்கிழமை டி.சி.எம் தனியார்கல்விநிறுவனத்தில் பி.ப 4 மணிக்குக்கு நடைபெறும். நிகழ்வுக்கு சொசியபாலன் தலைமை வகிக்கவுள்ளார். நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)


சேவைநலன் பாராட்டு



சங்கீத பூஷணம் திருமதி தேவவதனி நாகதேவன்

(SLTS-I)

30 ஆண்டுகள் ஆசிரியர் சேவையில் எமது கல்லூரியில் 13 வருடங்கள் ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும் சேவையாற்றி 28.02.2015 இல் ஓய்வு பெறுகின்ற இக்கல்லூரியின் பகுதித்தலைவராகிய திருமதி தேவவதனி நாகதேவன் அவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வளமோடு வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியரின் சேவை விவரம்

| | |
|---|---|
| 05.08.1984-01.03.1987 | மன்/நானாட்டான் மகா வித்தியாலயம் |
| 02.03.1987-31.12.1988 | யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை |
| 01.01.1989-31.07.1991 | மன்/பேசாலை பற்றிமா மகா வித்தியாலயம் |
| 01.08.1991-01.01.1994 | யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் |
| 02.01.1994-01.01.1997 | யா/இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை |
| 02.01.1997-31.10.2002 | யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் |
| 01.11.2002-28.02.2015 | யா/வரணி மத்திய கல்லூரி. |

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.

வரணி மத்திய கல்லூரி,
வரணி.

(51909)(4.3.7)



- பகுதி I, II மாதிரி வினாத்தாள்கள்
- கணிதம், கற்றாடல், தமிழ் கற்றல் குறிப்புகள்
- மொழித்திறன் பயிற்சிகள்
- கட்டுரைக் களம்
- மும்மொழி கற்போம், அறிவியல் கதைகள்.
- மாணவர் ஆக்கங்கள்.

உள்ளே

தரம் 4 மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு ஒரு நற்செய்தி




நாளைமுதல்

மாதம் இருமுறை 1ம், 15ம் திகதிகளில்

தரம் 4 மாணவர்களை அரச பரீட்சைக்கு சிறப்பாக வழிகாட்ட வேண்டிய தேவையை உணர்ந்து பெரும்பாலான பாடசாலைகள், பெற்றோர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க புலமைச்சுடரானது இவர்களுக்காக தனியாக வெளிவருகின்றது.

பிரதிகளை சகல பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாக பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவுடன் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0716850005, 0115737593, 0714273035

வடமாகாண தொடர்புகளுக்கு : 0776569617 வடமராட்சி தொடர்புகளுக்கு : 0773920632

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**காணி விற்பனைக்கு**

வட இந்து மகளிர் பாடசாலைக்கும் ஒராங்கட்டைச் சந்திக்கும் இடைப்பட்ட இடத்தில் 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 617 2912 (54212)(5.3.7)

**விற்பனைக்கு**

கணினிக் கல்வி நிறுவனம் ஒன்றின் மடிக் கணினி, ஆலோசனை கூட மேசை, துவிச்சக்கர வண்டி, கதிரை, இரும்புக்கபினெற், நெற்கவே மேசை, இரும்புப்பெட்டி, அலுமினிய பிற்றிங்ஸ், A/C கள் என்பன விற்பனைக்குள்ளன.

T.P :- 077 069 1979 (57341)(5.3.7)

**காணி விற்பனைக்கு**

◆ பளை கச்சார்வெளிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 6 (ஆறு) ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு.

◆ புலோப்பளையில் வயலும் காணியும் விற்பனைக்கு உண்டு. (57281)(5.3)

T.P: 075 530 8215, 076 846 5926

**விற்பனைக்கு**

WPK-xxxx இலக்கமுடைய கார் விற்பனைக் குண்டு. சிறிது காலம் பாவித்தது. 6 இலட்சம் மட்டும் செலுத்தி காரை எடுத்துச் செல்லலாம். மீதி கடன் அடிப்படையில்.

தொடர்பு :- 071 488 7583


# பிடிபட்டனர் இரு மிருசுவில் வாசிகள்

வங்கி ஒன்றின் தன்னியக்க பணப்பரிவர்த்தனை இயந்திரத்தில் மோசடி செய்து 40 ஆயிரம் ரூபா பணத்தை கையாடிய மிருசுவிலைச் சேர்ந்த இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இருவரையும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது இருவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

ஹற்றன் நஷனல் வங்கியில் இடம்பெற்ற மோசடியில் அங்கு பொருத்தப்பட்டிருந்த இரகசியக் கமெரா மூலம் அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. (வ-9)

# கம்பன் கழகத்தின் வித்தகம் நிகழ்வு

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் வித்தகம் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடை பெறவுள்ளது.

நிகழ்வுக்கு யாழ் இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமை வகிக்கவுள்ளார். நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராகக் கலந்துகொள்ளும் சிந்தனையரங்கு நிகழ்வு நடைபெறவுள்ளது. வள்ளுவ நாடு என்ற பொருளில் குறள் காட்டும் அரசனாக இரா.செல்வவடிவேல், குறள் காட்டும் அமைச்சனாக ச.மார்க்கண்டு, குறள் காட்டும் குடிகளாக கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் பேசவுள்ளனர்.

ஆர்வலர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)

# மணி விழா

யாழ்ப்பாணம், பெப்.28

கணித ஆசான் தம்பிப்பிள்ளை வரதராஜாவின் மணிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமைகாலை 8.30 மணிக்கு இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவன 40 ஆவது ஆண்டு நிறைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.மருதலிங்கம் நிகழ்த்துவார்.

ஆசியுரையை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், இருபாலை கற்பக விநாயகர் ஆலயக் குருக்கள் பா.செல்வசேனக்குருக்கள் ஆகியோர் நிகழ்த்துவர். வரத தீபம் நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் வழங்குவார். (வ)


**ஆரம்பமாகின்றன**

**A/L பாஸ் பேப்பர் வகுப்புக்கள் மார்ச் 08 முதல்**

கணித விஞ்ஞான பிரிவுகளுக்கான
கடந்த 10 ஆண்டு கால வினாப்பத்திர வகுப்புக்கள்

* பெருமளவு வெற்றியாளர்களை உருவாக்கிய ஆற்றல் மிக்க ஆசிரியர்கள்
* மாணவர்கள் மீது தனிக் கவனம்
* குறைந்த கட்டணம்

வர்மன்- இரசாயனவியல்
சதீஸ்- பௌதிகவியல்
ராகவன்-உயிரியல்
மயூரன்-கணிதம்

மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை என்பதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

School of Proffessional and Degree Studies (Pvt)Ltd
தொழில்துறை மற்றும் பட்டப்படிப்புகள்
இல.65, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (57340)
தொ.பே: 077 177 7061, 021 222 9793 (4.3.7)

**மணமக்கள் தேவை**

1987 LONDON (PR) PHD பாவம் 40, பட்டதாரி பெண் 25 வயதுக்குள்ளும், 1982 சைவபோசனம் பாவம் 20 வங்கியாளருக்கும் ஆசிரியருக்கும், 1980/1986 பத்து பாவத்துள் எஞ்சினியர், அரச ஊழியர்களும், சூரியன் + செவ்வாய் சேர்க்கையுள்ள 25 மணமக்களுக்கும் பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும்:-

077 463 4451,077 211 5783

**பெண் வேலையாள் தேவை**

A.R.M.Marketing ஸ்தாபனத்துக்கு பெண் விற்பனையாளர்கள் தேவை.
262, மானிப்பாய் றோட், ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 071 478 3317, 077 226 1888 (57344)(4.3.7)

**மணமகள்கள் தேவை**

◆ 88 இல் பிறந்த 1இல் செவ்வாய் 55½பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
◆ 83 இல் பிறந்த 10 இல் சூரியனும் செவ்வாயும் 36 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
◆ 79 இல் பிறந்த 9¼ பாவம் செவ்வாய் இல்லாமல் ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
◆ 77இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 26½ பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
◆ 85 இல் பிறந்த 4இல் செவ்வாய் 46 பாவமுடைய MBBS டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை
◆ 84 இல் பிறந்த 1இல் செவ்வாய் 73 பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
◆ 83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய BSC, MSC இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
◆ 80 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 19¼ பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு :-
கமலக்கண்ணன் திருமண சேவை
இல. 62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, சுடமாவடி.
T.P : 077 607 0862 (57336)(5.3.7)

**வீடு விற்பனைக்கு**

சாவகச்சேரி கற்குளி வீதி, பாலாதியேட்டர் அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 706 5299 (56813)(4.3.7)





# சத்சங்கம் நிகழ்வு

தென்மராட்சி, பெப்.28

வயது வந்த மாணவர்கள் உட்பட பொது மக்கள் மத்தியில் அ[illegible] மிக அறிவை வளர்க்கும் நோக்குடன் மருதனார்மடம் வீதி உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலைய தியான மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சத்சங்கம் நிகழ்வு நடை பெறவுள்ளது.

பிரார்த்தனை, தியானத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி பிரபு பிரேமானந்தஜி மகராஜின் பஜனை நடைபெறும்.

அதைத்தொடர்ந்து மலேசிய இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சுப்பிரியானந்தஜி மகராஜ் ஆன்மிக உ[illegible] நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் உயர்தர வகுப்பு மாணவர்கள் உட்பட அனைவரையும் கலந்துகொண்டு திரிமூர்த்திகளின் அருளைப் பெறுமாறு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவமோகன் அறிவித்துள்ளார். (வ-115)

# துப்பாக்கிச் சூட்டில் குடும்பப்பெண் காயம்

மட்டக்களப்பு, பெப்.28

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள வாகனேரியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த செல்லான் புவனேஸ்வரி (வயது -30) என்ற குடும்பப்பெண்; படுகாயமடைந்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை, அவரது கணவரே கட்டுத்துப்பாக்கியால் சுட்டதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடும்பத் தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டதாக கிராமவாசிகள் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவரைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)


# கேள்வி அறிவித்தல்
# புதுக்குடியிருப்பு பிரதேச சபை

விசுவமடு பொதுச்சந்தையில் மரக்கறிச்சந்தை அமைத்தல். NP/MU/PUPS/W/ 01/2015
புதுக்குடியிருப்பு பொதுச்சந்தைக்கான வீதி அமைத்தல் NP/MU/PUPS/W/02/2015
றெட்பானா பொதுச்சந்தையில் மலசலகூடம் திருத்தம். NP/MU/PUPS/W/03/2015
மாங்குளம் நூல்நிலையக்காணிக்கான வேலி அமைத்தல். NP/MU/PUPS/W/04/2015

1. புதுக்குடியிருப்பு உள்ளூராட்சி மன்றமானது மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட வருமானத்தின் ஒரு பகுதியை அபிவிருத்தி வேலைக்காகப் பயன்படுத்த தீர்மானித்துள்ளது.
2. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, **பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டட வேலைக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **கட்டட அமைப்புக்கான** இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், பிரதேசசபை புதுக்குடியிருப்பு **(தொலைபேசி: 024 324 3541)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 15.00 மணி வரை 25.03.2015 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 024 324 3541)** எனும் இடத்திலிருந்து **04.03.2015 ஆம் திகதியிலிருந்து 24.03.2015 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.** இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு **செயலாளர், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கச்செய்வதுடன் மறுபிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். **25.03.2015** ஆம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு – 10.06.2015) நாள்கள் வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| வேலை இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரு) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/MU/PUPS/W/01/2015 | விசுவமடு பொதுச்சந்தையில் மரக்கறிச்சந்தை அமைத்தல். | 9.393 | 4 மாதங்கள் | C 7 அல்லது அதற்குமேல் | 94,000.00 | 08.07.2015 வரை |
| NP/MU/PUPS/W/02/2015 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தைக்கான வீதி அமைத்தல் | 0.855 | 3 மாதங்கள் | C 9 அல்லது அதற்குமேல் | 8,600.00 | 08.07.2015 வரை |
| NP/MU/PUPS/W/03/2015 | றெட்பானா பொதுச்சந்தையில் மலசலகூடம் திருத்தம். | 0.104 | 3 மாதங்கள் | C 10 அல்லது அதற்குமேல் | 1,100.00 | 08.07.2015 வரை |
| NP/MU/PUPS/W/04/2015 | மாங்குளம் நூல்நிலையக்காணிக்கான வேலி அமைத்தல். | 0.260 | 3 மாதங்கள் | C 10 அல்லது அதற்குமேல் | 2,600.00 | 08.07.2015 வரை |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபைக் கட்டடத்தில் 19.03.2015 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
பிரதேசசபை, புதுக்குடியிருப்பு. 27.02.2015

(சி/16827)(4.3.7)



# பணத்தை வாரி வழங்கிய அமெ.நிறுவனம்

அமெரிக்காவில் உள்ள நீதித்துறைசார் நிறுவனம் ஒன்று Sondra Arquiett என்ற பெண்ணுக்கு 134,000 அமெரிக்க டொலர்களை அபராதமாகச் செலுத்தியுள்ளது.

அந்த நிறுவனம் போலி பேஸ்புக் பேஜ் ஒன்றை உருவாக்கியிருந்த நிலையில் குறித்த பெண்ணின் படத்தை அரைகுறை ஆடையுடன் பதிவேற்றியிருந்தமையே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது படத்தை குறித்த பேஸ்புக் பேஜில் பார்வையிட்ட அந்தப் பெண் வழக்குத் தொடர்ந்துள்ள நிலையில் குறிப்பிட்ட அபராதத் தொகையை செலுத்த வேண்டிய நிலைக்கு அந்த நிறுவனம் தள்ளப்பட்டுள்ளது. அதே நிறுவனத்திலே இந்தப் பெண்ணும் பணிபுரிவதுடன் தனது கைபேசியைப் பார்வையிடுவதற்கு அங்கிருந்த சக ஊழியர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார். இதன் போதே கைபேசியிலிருந்த குறித்த படம் களவாடப்பட்டு பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## கணினியில் வாட்ஸ் அப்: பயன்படுத்துவது எப்படி?

ஸ்மார்ட் போன் பயனாளிகள் மத்தியில் வாட்ஸ் அப் அதிக வரவேற்பைப் பெற்றிருந்ததால், அதன் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துக் கொண்டே சென்றது.

அனைவரும் எதிர்பார்த்தது கணினியில் இதனை பயன்படுத்த முடியுமா? என்பது தான். இந்த நிலையில் பயனாளிகளின் ஏக்கத்தைப் பூர்த்தி செய்யும் வகையில், கணினியில் பயன்படுத்தக் கூடியவாறு வாட்ஸ் அப் வெப் என்னும் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.



பயன்படுத்துவது எவ்வாறு? முதலில் உங்கள் ஸ்மார்ட் போனில் வாட்ஸ் அப் செயலியை அப்டேட் செய்து கொள்ள வேண்டும். கணினியில் கூகுள் குரோம் திறந்து அதில் web.whatsapp. com என்ற தளத்தைத் திறந்து கொள்ளவும். திறந்தவுடன் QR code காட்டப்படும். உங்கள் போனில் வாட்ஸ் அப் ஆப் திறந்து, அதில் WhatsApp Web செலக்ட் செய்து கொள்ள வேண்டும், செலக்ட் செய்தததும் QR Scanner ஓபன் ஆகும். இந்த ஸ்கேனர் மூலம், கணினியின் உலாவியில் காட்டப்பட்டிருக்கும் QR codedçB ஸ்கேன் செய்தால் போதும். அது உங்கள் போனையும், உலாவியில் உள்ள வாட்ஸ் அப்பையும் இணைத்து விடும். இது தொடர்ந்து இயங்குவதற்கு, உங்கள் போன் இன்டர்நெட் இணைப்பில் இருக்க வேண்டும்.

## விண்வெளியிலிருந்து வந்த மர்ம ரேடியோ சமிக்ஞை

விண்வெளியிலிருந்து திடீரென வந்த ரேடியோ சமிக்ஞையொன்றால் ஏற்பட்ட மர்மம் நீடிக்கிறது. அது வேற்றுக் கிரகவாசிகளால் அனுப்பப்பட்டதொன்றா என்ற கோணத்தில் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

விண்வெளியிலிருந்து பூமிக்கு அடிக்கடி ரேடியா சமிக்ஞைகள் வருவதுண்டு. ஆனால் சமீபத்தில் பெறப்பட்ட சமிக்ஞையொன்று முந்தைய ஒலி அலைகளை விட மில்லி நொடிக்கும் குறைவான நேரத்தில் பதிவாகிஉள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அந்தக் கணநேரத்தில் வெளியான வெளிச்சமானது சூரியனின் மேல் பரப்பில் ஒருநாள் முழுவதும் வெளியாகும் வெளிச்சத்திற்கு சமமாக இருந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு ஒலி அலை பூமிக்கு வரும்போதும், ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருப்பதாகவும், கடந்த 2007ஆம் ஆண்டு கிடைத்த ஒலி அலைகள் அதற்கு முந்திய வருடங்களில் கிடைத்த ஒலிகளை விட வித்தியாசமாக உள்ளதாகவும், தற்போது கிடைத்துள்ள ஒலி அலைகளையும் ஒப்பிட முடியவில்லை எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ரேடியோ சமிக்ஞைகள் குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானி ஜோன் மல்கேயி கூறுகையில், இதுபோன்ற ரேடியோ சமிக்ஞைகள் எமது வான்வெளியில் ஒளிந்திருக்கும் மர்மங்கள் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

தற்போது கிடைத்திருக்கும் ரேடியோ சமிக்ஞை எமது பால்வழி மண்டலத்தைத் தாண்டி சுமார் 5.5 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவிலிருந்து வந்திருக்கலாம் என விஞ் ஞானிகள் கணித்துள்ளனர். இதுபோன்ற மர்மமான ரேடியோ ஒலி அலைகளை கலிபோர்னியா, கனரி தீவுகள், அவுஸ்தி ரேலியா, சிலி, ஹவாய், இந்தியா மற்றும் ஜேர்மன் நாடுகளில் அதிநவீன தொலைநோக்கிகளை பயன்படுத்தி பலவருடங்களாக ஆராய்ந்து வருகின்றனர்.







உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

**உதயன் 30ஆவது ஆண்டு**
**ஆக்க இலக்கியத் தேர்வுகள்**

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ....................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
....................
கற்கும் பாடசாலை: ....................
தரம்: ..............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ....................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ....................
ஆசிரியரின் பாடத்துறை: ....................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .................... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

மக்கள் வங்கி அனுசரணையுடன்

**மாபெரும் சிறுகதைப் போட்டி**

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது. மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ. கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.





ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இன்று மட்டுமே!



## ஆளில்லா விமானத்தை பறக்கச் செய்த 3 செய்தியாளர்கள் பிரான்ஸில் கைது



பரிஸ்,பெப்.28
பிரான்ஸ் தலைநகர் பரிஸில் ஆளில்லா விமானத்தைப் பறக்கச் செய்த அல் ஜஸீரா செய்தியாளர்கள் மூவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆளில்லா விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள அந்த நகரில், கடந்த சில நாள்களாகவே அத்தகைய விமானங்கள் பறப்பதைத் தாம் கண்டதாக நகரவாசிகள் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில், அந்தநகரின்பூங்கா ஒன்றில் ஆளில்லா விமானத்தைப் பறக்கவிட்டதாக அல்–ஜஸீரா தொலைக்காட்சியைச் சேர்ந்த செய்தியாளர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## அருங்காட்சியகம் ஐ.எஸ்ஸால் அழிப்பு



பக்தாத்,பெப்.28
வடக்கு ஈராக்கின் மொசுல் நகரில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றில் புராதன பொருள்களை ஆயுததாரிகள் அழிப்பதைக் காட்டுகின்ற வீடியோ காட்சியை இஸ்லாமிய அரசு இயக்கத்தினர் வெளியிட்டுள்ளனர்.

அந்த வீடியோவில் பெரிய சிலைகளையும் இடித்து வீழ்த்துகின்ற ஐ.எஸ். ஆயுததாரிகள், சுத்தியலால் அவற்றை அடித்து நொருக்குகின்றனர்.

கிறிஸ்துவுக்கு முன் 9ஆம் நூற்றாண்டுக் காலத்தின் அஸ்ஸிரிய காலத்தைச் சேர்ந்த, சிறகுகள் கொண்ட காளை மாட்டின் கலைச்சின்னமும் அழிக்கப்பட்ட பொருள்களில் அடங்குகின்றது.

பொய்ச் சிலைகள் என்று அவற்றை விபரிக்கும் படங்களுடன், மொஹமது நபி அவற்றை அழிக்க உத்தரவிட்டிருந்தார் என்ற வாசகங்களும் அந்த வீடியோவில் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசியாவின் சிறந்த நிர்வாகிகளாக 6 இந்தியப் பெண்கள்

ஆசியாவின் சிறந்த பெண் நிர்வாகிகளாக 6 இந்தியப்பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகப் போர்ப்ஸ் இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. அதில் ஆசியாவின் சக்தி வாய்ந்த 50 பெண் நிர்வாகிகளில் 6 இந்தியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்திய வங்கித் துறையின் முதல் பெண் மணி என அழைக்கப்படும் அருந்ததி பட்டாச்சார்யாவும் அதில் ஒருவராவார். அவர் 18 லட்சம் கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்களைக் கொண்ட வங்கியையும், 22.50 கோடி வாடிக்கையாளர்களையும் நிர்வகித்து வருகிறார். இவர்கள் அனைவரும் இந்தியாவில் சிறந்த பெண் இயக்குநர்களாக செயற்பட்டு வருவதுடன் தற்பொழுது ஆசியாவுக்கு பெருமை சேர்த்துள்ளனர் என்று போர்ப்ஸ் இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## துருக்கி தூதரக வாகனம் மீது மனித வெடிகுண்டுத் தாக்குதல்

காபூல்,பெப்.28
ஆப்கன் தலைநகர் காபூலில், துருக்கி நாட்டுத் தூதரக அதிகாரியின் கார் மீது மேற்கொள்ளப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 2 பேர் உயிரிழந்துள்ளனர். இதுகுறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில்;

ஈரான் தூதரகத்துக்கு மிக அருகில், இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

வெடிபொருள் நிரப்பிய காரொன்றைச் செலுத்தி வந்த தீவிரவாதியொருவர், துருக்கி தூதரகக் காரின் மீது மோதி வெடிக்கச் செய்தார்.

அந்தத் தாக்குதலில் துருக்கி நாட்டைச் சேர்ந்த ஒருவரும், அந்த வழியாகச் சென்றுகொண்டிருந்த பொதுமகன் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அந்தத் தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து 13 ஆண்டுகளுக்குப் பிறகும், அவர்களது தீவிரவாதச் செயற்பாடுகள் அங்கு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.அங்கு நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கப் படையினரும் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதையடுத்து, தலிபான்களுடன் சமரசம் மேற்கொள்வதற்கான முயற்சியில் ஆப்கன் அரசு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், தலிபான்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள அந்தத் தாக்குதலானது, சமரசம் ஏற்படும் என்ற நம்பிக்கையைக் குலைப்பதாக உள்ளது என்று அரசியல்அவதானிகள் தெரிவிக்கின்றனர். (ஒ–ரி)

# ஒபாமாவை கொல்ல முயன்ற 3 பேர் கைது

வொஷிங்டன்,பெப்.28
அமெரிக்காவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதுடன், ஐ.எஸ். கிளர்ச்சியாளர்களுக்கு பொருளுதவி செய்ததாகவும் மத்திய ஆசிய நாட்டைச் சேர்ந்த 3 பேர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அமெரிக்க அதிபர் ஒபாமா மீதும் தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.



விசாரணைகளின் முடிவில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட வாய்ப்பு உண்டு என்று சட்ட நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த நபர்களில் ஒருவர் 2014 ஆம் ஆண்டு ஐ.எஸ். உத்தரவிட்டால் அமெரிக்க அதிபர் ஒபாமாவையும் கொல்லத் தயார் என்று உஸ்பெக் மொழி இணையத்தளத்தில் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்.

அதன் பிறகு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு அவர்கள் பின் தொடரப்பட்டநிலையில் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)



இந்தியத் தலைநகர் டில்லியில் ரயில் தொங்கிக் கொண்டு செல்லும் பயணிகளின் நிலை

## இந்தியாவுடனான பேச்சுக்கு தயாராகிறது பாகிஸ்தான்

புதுடில்லி,பெப்.28
இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் ஜெய்சங்கர், 2 நாள் அரசு முறைப் பயணமாக எதிர்வரும் மார்ச் மாதம் பாகிஸ்தான் செல்கிறார்.

அவரது அந்தப்பயணத்தின்போது இடம்பெறவுள்ள பேச்சுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய விவகாரங்கள் குறித்து ஆலோசிப்பதற்காக அந்தநாட்டில் உள்ள இந்தியத் தூதருக்குப் பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது.



இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் ஜெய்சங்கரது பாகிஸ்தான் வருகையின்போது அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்படும் என பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் தஸ்னீம் அஸ்லாம் தெரிவிக்கையில், ஜம்மு காஷ்மீர் விவகாரம், நதிநீர்ப் பிரச்சினைகள், வர்த்தக விவகாரங்கள் ஆகிய அனைத்து விடயங்கள் குறித்தும் விவாதிக்கப்பட வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்' என்றார்.

மேலும் கடந்த 13ஆம் திகதி பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை தொடர்பு கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இரு நாடுகளுக்கும்" இடையிலான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாகா நகரை மீட்டது நைஜீரிய இராணுவம்

மைதுகுரி, பெப்.28
நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் வடகிழக்கு பகுதியில்உள்ளபாகா நகரத்தைஇராணுவம் மீட்டுள்ளது. அதனையடுத்து கமரூன் எல்லை அருகே உள்ள அந்த நகரின் பாதுகாப்பு நிலவரங்களை இராணுவ லெப்டினன்ட் ஜெனரல் கென்னத் மினிமா ஆய்வு செய்தார். அந்தத் தாக்குதல் பற்றி அவர் தெரிவிக்கையில்;

இடம்பெயர்ந்த பாகா நகர மக்கள் எதிர்வரும்மார்ச்மாதம்நடைபெறும் தேர்தலில் வாக்களிக்கும் வகையில் தமது சொந்த இடத்துக்கு திரும்ப முடியும் என்றும் பாகா நகரை மீட்ட இராணுவ வீரர்களின் துணிச்சலான நடவடிக்கை நைஜீரியர்களுக்கு பெருமை தருவதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

## அடையாளம் காணப்பட்டார் ஜிகாதி ஜோன்

லண்டன்,பெப்.28
இஸ்லாமிய அரசை உருவாக்கியுள்ள தீவிரவாத அமைப்பினால் கைது செய்யப்பட்ட மேற்குலக பணயக்கைதிகளை தலை துண்டித்துக் கொல்லும் காணொலிகளில் அந்தக் கொலைகளை மேற்கொண்டவராகக் கருதப்பட்ட ஜிகாதி ஜோன் அடையாளம் காணப்பட்டுள்ளார் பிரிட்டனைச் சேர்ந்த மொஹம்மத் எம் வாசி என்பவரே அவர் என்பது தெரியவந்திருக்கிறது. மேற்கு லண்டனைச் சேர்ந்த அவர் குறித்து பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைப்புகள் சிலகாலமாகவே தெரிந்து வைத்திருந்தன.

ஜிகாதி ஜோன் என்று பரவலாக அழைக்கப்பட்ட பிரிட்டனைச்சேர்ந்த அலன் ஹென்னிங் மற்றும் டேவிட் ஹைன்ஸ் ஆகிய இருவர் உட்பட வேறு மேற்குலக பணயக்கைதிகளை கழுத்தறுக்கும் காணொலிகளில் அவரே காணப்பட்டார்.

2006 ஆம் ஆண்டு சோமாலியாவுக்கு அவர் சென்றிருந்ததாகவும், அல்ஷபாப் அமைப்புக்கான நிதி திரட்டல் போன்ற பல்வேறு உதவிகளை செய்வதற்கான கட்டமைப்புடன் அவர் தொடர்புடையவர் என்றும் நம்பப்படுகிறது.

கடந்த ஆண்டு இஸ்லாமிய அரசு வெளியிட்ட காணொலியில் அவர் முதன்முதலில் தோன்றியிருந்தார். அந்தக் காணொலியில் அமெரிக்க ஊடகவியலாளர் ஜேம்ஸ் பாலியின் கழுத்தை அறுத்து க்கொலை செய்யும் காட்சியிலும் . அதற்குப் பிறகு ஐ.எஸ். அமைப்பின் வேறு பல கொடூரமான காணொலிகளிலும் அவர் தோன்றியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)





லண்டனில் நடைபெற்று வரும் தூய்மையாக்கும் பசுமைத்திட்டத்தின் கீழ் அந்த நாட்டு மேயர் போரிஸ் ஜோன்சன் கலந்து கொண்டு குளம் ஒன்றைத் தூய்மைப் படுத்துவதைக் காணலாம்.

# விழுந்து நொறுங்கியது ஈரான் விமானப்படை ஹெலி

டெஹ்ரான், பெப்.28

ஈரானிய விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கியதில் அதில் பயணம் செய்த 3 பேரும் சாவடைந்துள்ளனர்.

வடக்கு டெஹ்ரானில் மலைப்பாங்கான இடத்தில் அந்த விபத்து நடந்துள்ளது. இதுபற்றி தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்கு மீட்புக் குழுவினர் விரைந்துள்ளதாக மாவட்ட ஆளுநர் செய்தி வெளியிட்டுள்ளார்.



கடும் பனிப்பொழிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஈரானிய விமானப் படையில் இராணுவத்தில் அமெரிக்கா மற்றும் ரஷ்ய தயாரிப்பு ஹெலி கொப்டர்களே அதிக அளவில் பயன்பாட்டில் உள்ளன. அவை நீண்டகாலமாகப் பயன்படுத்திய பழைய விமானங்கள் என்பதாலும் மோசமான பராமரிப்பு காரணமாகவும் அடிக்கடி இவ்விதம் விபத்துக்கள் நடப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)



# போலி வீடியோ மூலம் அச்சுறுத்தும் ஐ.எஸ்.

ஐ.எஸ். தீவிரவாதிகளால் கவரப்பட்ட ஏமன் சிறுவர்கள், போலியான வீடியோ ஒன்றை எடுத்து இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

அந்த வீடியோவில், 10 வயது மதிக்கத்தக்க 5 சிறுவர்கள் ஐ.எஸ் தீவிரவாதிகளை சித்திரிக்கும் வகையில் முகமூடி அணிந்திருந்த 5 சிறுவர்களால் கடற்கரையோரமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து, அழைத்துச் சென்ற அந்தச் சிறுவர்களை மண்டியிடச் செய்வதுடன், அவர்களது தலையை கத்தியால் வெட்டுவது போன்ற காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. தலை துண்டிப்பு, பெண்கள் மீதான பாலியல் தாக்குதல் போன்ற ஐ.எஸ் தீவிரவாதிகளின் கொடூரச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

சமீபத்தில் எகிப்திய கிறிஸ்தவர்கள் 21 பேரை ஐ.எஸ் தீவிரவாதிகள் தலைகளைத் துண்டித்து கொல்வது போன்ற வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. இந்த நிலையில் இவ்வாறானவீடியோக்களைவெளியிட்டு ஐ.எஸ். தீவிரவாதிகள் மக்களை திகிலடையச் செய்து வருகின்றனர்.

# பெண்களுக்கான மசூதி

வொஷிங்டன்.பெப்.28


உலகில் முதன்முறையாக பெண்களுக்கான மசூதி ஒன்று அமெரிக்காவில் அமைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள 1200 மசூதிகளில் பெரும்பாலானவை கடந்த 12 ஆண்டுகள் கால இடைவெளிக்குள் கட்டப்பட்டவையாகும்.

இந்தநிலையில் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தில் பெண்களுக்கான பிரத்தியேக மசூதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முன்பு யூதர்களின் வழிபாட்டுத் தலமாக விளங்கிய அந்த இடத்தில், தற்போது மிகப்பெரிய மசூதியும் அமைந்துள்ளது.

இது குறித்து அந்த மசூதியை நிறுவிய பெண் உரிமையாளர் தெரிவிக்கையில்; பெண்களுக்கென ஒரு மசூதி அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்லேதான் குறித்த மசூதி கட்டப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.



மேலும் இங்கு வரும் பெண்கள் வழிபாட்டின்போது தாங்கள் அதிகளவில் அமைதியைப் பெறுவதாக மகிழ்ச்சியாகத் தெரிவித்துள்ளனர்.(ஒ–ரி)

# பிலிப்பைன்ஸில் தாக்குதல்

## 14 தீவிரவாதிகள் சாவு




மணிலா, பெப்.28

பிலிப்பைன்ஸ்ஸில் உள்ள படிகுல் காட்டுப்பகுதியில் பதுங்கி உள்ள தீவிரவாதிகளுக்கு எதிராக நேற்று இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதல்களையும், வான் வழித் தாக்குதல்களையும் நட்த்தினர். அந்தத் தாக்குதல்களில் 14 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். 19 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அந்த தாக்குதல்களின் போது 2 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் அல் குவைதா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய அபு சயீப் தீவிரவாதிகள், ஐ.எஸ். தீவிரவாதிகள் போல தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்க இராணுவத்திடம் பயிற்சி பெற்ற பிலிப்பைன்ஸ் இராணுவ வீரர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்தநிலையில் அபு சயீப் தீவிரவாதிகள் மலேசியா, ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் உட்பட 3 பேரை பணயக்கைதிகளாகக்கடத்திச்சென்றனர்.

அவர்களை மீட்கும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

# 2,500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பூனையின் சிலை 52 இலட்சம் ரூபாவுக்கு ஏலம்

லண்டன்,பெப்.28

2,500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பூனையின் சிலையொன்று 52 இலட்சம் ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது.

எகிப்து நாட்டைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழைமையான,வெண்கலத்தால் செய்யப்பட்ட பூனையின் சிலை இங்கிலாந்தில் நடைபெற்ற ஏலத்தில் 52 இலட்சம் ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது. அதனை வைத்திருந்தவர் 2003ஆம் ஆண்டில் காலமாகி விட்டார். அவரது குடும்பத்தினருக்கு அந்தச் சிலையின் அருமை தெரியவில்லை.

எனவே, அதனை குப்பையில் போடுவதற்கு அவர்கள் தயாராகிய வேளை. அது, ஓர் ஏல நிறுவனத்தின் பார்வைக்கு சென்று, அந்தச் சிலை ஏலத்துக்கு விடப்பட்டது. 10 லட்சம் ரூபாவுக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஐந்து மடங்கு அதிகமாக 52 லட்சம் ரூபாவுக்கு அந்தச் சிலை ஏலம் போயுள்ளது. பிரபல லண்டன் வர்த்தகர் ஒருவர் அதனை ஏலத்தில் எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ–ரி)



# சர்ச்சைக்குரிய சிறுகதைக்காக தாக்கப்பட்ட எழுத்தாளர்

சென்னை,பெப்.28

தமிழ்நாட்டின் கரூர் மாவட்டத்தில் உள்ள பசுபதி பாளையத்தைச் சேர்ந்த புலியூர் முருகேசன் என்பவர், அவர் எழுதிய சிறுகதை ஒன்றுக்காகத் சில ஜாதி அமைப்பினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாக புகார் எழுந்துள்ளது.தற்போது அரசு மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்று வரும் முருகேசன் திருநங்கைகளின் வாழ்வைச் சித்திரிப்பதற்காகவே தான் அந்தக் கதையை எழுதியதாகத் தெரிவித்துள்ளார்.

முருகேசன் எழுதிய 'பாலச்சந்திரன் என்றொரு பெயரும் எனக்குண்டு' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் 'நான் ஏன் மிகை அலங்காரம் செய்துகொள்கிறேன்' என்ற சிறுகதை தங்களது சமூகத்தை இழிவுபடுத்துவதாகக் கூறி ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர், முருகேசனை வீட்டிலிருந்து அழைத்துச் சென்று ஒருகாட்டுப்பகுதியில்வைத்துத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.



தன்னுடைய புத்தகத்திலிருந்து அந்தக் கதையை நகல் எடுத்து 1,000க்கும் மேற்பட்டவர்களுக்கு விநியோகித்ததன் மூலம் தனக்கு எதிரான குரோத உணர்வை ஏற்படுத்தியதாக அவர் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக சில ஜாதி அமைப்பினர் நேற்று மாலையில் கரூர் – திருச்சிவீதியில் வீதி மறியலிலும் ஈடுபட்டனர்.இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்திருக்கும்தமிழ்நாடுமுற்போக்கு எழுத்தாளர் சங்கம், எழுத்தாளருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.



# பாடசாலைச் செயன்முறையில் மாற்ற முகாமைத்துவம்

நடேசு தயாளன், அதிபர்.

தரமான கல்வியை விருத்தி செய்தல், ஆற்றல்களை வளர்த்தெடுத்தல், சமூகப் பொருளாதாரக் கலாசார நிலைகளில் விருத்தியை ஏற்படுத்துதல் என்பன சமகாலப் பாடசாலைக் கல்வியின் போக்காக மாறியுள்ளன. புதிய சவால்களை இளம் சந்ததியினர் எதிர்கொள்வதற்கு உதவுகின்றன. இயங்கியல் ரீதியான உலகின் சவால்களை வெற்றி கொள்ளக் கூடியவர்களாகப் பிள்ளைகளை மாற்ற வேண்டுமானால், பாடசாலைகள் புதிய முகாமைத்துவச் செயன்முறையுடையதாகவிளங்க வேண்டியது அவசியமானதாகும். இந்த நோக்கம் கருதிப் பகுப்பாய்வுத் திறன், வடிவமைப்புத் திறன், புத்துணர்வு ஒன்றிணைந்த செயற்பாடு என்பவற்றோடு தலைமைத்துவப் பாங்கு இயக்கியல் நிலை என்பவற்றைப் புதிய மாதிரியில் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமானதாகும். அந்த வகையில் இன்றைய பாடசாலைகளில் மாற்ற முகாமைத்துவத்தின் பிரயோகம் இன்றியமையாததாகும்.

மாற்ற முகாமைத்துவம் என்பது தனியாள் மற்றும் நிறுவனம் சார்ந்த மாற்றத்துக்கான முழுமையான செயலொழுங்காகும். இதுநிறுவனமொன்றைப்பொறுத்தவரையில் புதிய பெறுமானங்களையும், மனப் பாங்குகளையும், நியமங்களையும், நிறுவனத்தினுள்ளே உருவாக்குவதற்கான செயலொழுங்காகும். மாற்ற முகாமைத்துவமானது தனியாளையும் நிறுவனத்தையும் வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கான முகாமைத்துவ உத்தியாகும்.

ஒரு நிறுவனத்தினது முன்னேற்றச் செயற்பாட்டுக்கும் வெற்றி அடைவுக்கும் மாற்ற முகாமைத்துவமானது அவசியமானதாகும். இந்த மாற்ற முகாமைத்துவமானது ஒரு செயலொழுங்காகவன்றி முன்னேற்றச் செயலொழுங்கமைவாகவேயுள்ளது. இதன் செயற்பாடானது தொடர்ச்சியான படி முறையாகவோ செயற்பாடுகளாகவோ உள்ளன. இந்த முகாமைத்துவச் செயலொழுங்கானது பின்வரும் செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

1.மாற்றத்துக்குத் தயாராகுதல்:– மாற்ற முகாமைத்துவத் தந்திரோபாயங்களாக அதற்கான அணியினரை உருவாக்குவதும் திட்டமிடப்பட்ட மாதிரியைக் கட்டியெழுப்புவதும் இடம்பெறும்.

2.மாற்றத்தை முகாமைத்துவம் செய்தல்:– மாற்ற முகாமைத்துவத் திட்டத்தை விருத்தி செய்தல் செயற்பாடுகளை முன் வைத்துத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன இங்கு மேற்கொள்ளப்படும்.

3.மாற்றங்களை மீள வலியுறுத்துதல்:– இங்கு பின்னூட்டல்களைச் சேகரித்து பகுப்பாய்வுக்குட்படுத்தல், இடைவெளிகளை இனம் காணுதல், பதிலீடுகளை மேற்கொள்ளல், சரியான திட்டங்களை நடைமுறைகளாலும் வெற்றிகளைப் பகிர்ந்து கொள்ளலும் மேற்கொள்ளப்படும்.

இன்றைய பாடசாலைகளின் முகாமைத்துவச் செயலொழுங்கானது பாடசாலை மட்டம் சார்ந்ததாக மாணவர்கள் மையமானதாகத் தரத்தை முதன்மைப்படுத்தியதாக விளங்குகின்றது. பாடசாலைகளானது அதன் உரித்தாளர்களுக்கு வகை கூற வேண்டியுள்ள நிலையில் நிர்வாக நிலைசார் விருத்தி, கற்பித்தல் நிலைகளில் முன்னேற்றம், அதனூடான வெளியீட்டின் உயர்வு என்பன முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றன. பாடசாலை முகாமையாளரது முகாமைத்துவ வகிபாகமானது ஆளணி முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பாடவிதான முகாமைத்துவம் என்றவாறாக விரிவடையும் நிலையில் அவற்றைச் சிறப்பான முறையிலும் விளைதிறனுடையதாகவும் மேற்கொள்ள வேண்டுமானால் பாடசாலைகளில் மாற்ற முகா மைத்துவம் பின்பற்றப்படுதல் அவசியமானதாகும்.

பாடசாலைத் தலைமைத்துவங்களைப் பொறுத்தவரையில் மாற்ற முகாமைத்துவம் என்பது சிக்கார்ந்த பரிமாற்றச் செயலொழுங்காகும். பாடசாலைத் தலைவர்கள் மாற்றங்களைப் புரிந்தவர்களாக விளங்குதல் அவசியமானதாகும். மாற்ற முகாமையாளரானவர் முழுநேர வாண்மையாளராவார். அதிபர் அல்லது பகுதித் தலைவர் பாடசாலையில் அல்லது அதன் ஒரு பகுதியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பொறுப்பாளராக விளங்க முடியும்.

மாற்ற முகாமையாளரான அதிபர், பாடசாலையின் சமகால ஏழு வினாக்கள் எவை என்பதை இனங்கண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அதற்குத் தெளிவான இலக்குகளையும் தீர்வாக முன்வைக்க வேண்டும். இதன்போது பாடசாலையின் சமூகப் பெறுமானம் பாடசாலையின் இயலுமை அதனது தயார்நிலை என்பன தொடர்பிலும் தனது கவனத்தைச் செலுத்துதல் அவசியமானதாகும்.

பாடசாலை மாற்ற முகாமையாளராகச் செயற்படும் அதிபரானவர் வசதி செய்பவராகவும் ஏனையவர்களைக் கொண்டு மாற்றத்துக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடியவராகவும் விளங்குதல் அவசியமானதாகும். மாற்றச் செயன்முறைக்கான பங்காளர்களை இனங்காணக்கூடியவராகவும் இத்தகைய பங்காளிகளின் முழுப் பங்குபற்றுதலைப் பெறக் கூடியவராகவும் மாற்றச்செயன்முறைக்குப் பொருத்தமான செயன்முறையை முன்வைக்கும் போது எத்தகைய மாற்றச் செயன்முறை முன் வைக்கப்படுகின்றது என்பதையும் அதனால் பெற்றுக்கொள்ளக் கூடிய அனுகூலங்கள் எவை என்பதையும் தெளிவாக உணர்த்துவதனூடாக அவர்களின் ஈடுபாட்டையும் பங்குபற்றுதலையும் பெற்றுக்கொள்ளக் கூடியவராகவும் விளங்குதல் வேண்டும்.

பாடசாலை முகாமையாளரானவர் குறித்தொதுக்கப்பட்ட தெளிவான இலக்கை அடைவதற்கான செயலொழுங்குகளை வடிவமைப்பவராகவும் விளங்குதல் வேண்டும். இங்கு மாற்றச் செயன்முறைக்கான கருவிகளின் கிடைப்பனவு தொடர்பில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். அதனைப் பொருத்த மான உத்திக்கேற்ப பயன்படுத்த வேண்டியதும் அவசியமானதாகும்.

பாடசாலையின் முதன்நிலை முகாமையாளரான அதிபரது மாற்ற முகாமைத்துவத் தகுதிகளாகப் பின்வருவன காணப்படுதல் அவசியமாகும், அவையாவன:– நன்மனப் பாங்கு, நம்பிக்கையைக் கட்டியெழுப்பக் கூடிய இயல்பு பரந்த ரீதியிலான தொழில்சார் அனுபவம், பல்வேறு மாறுபட்ட நிலைமைகளில் மாற்றத்துக்கான காரணிகளைக் கையாளக் கூடிய திறன், பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் அணியாகச் செயற்படும் திறன், ஆக்க மலர்ச்சிச் சிந்தனை, தன்னம்பிக்கை, சமநிலை, ஆளுமைத்திறன், வடிவமைப்புத் திறன், பயிற்றுவிக்கும் திறன், புதுமைகாணும் ஆற்றல், மனவெழுச்சி சார் நிலைமைகளில் சீராகச் செயற்படும் திறன் என்பன திறம்படப் பெற்றவராக விளங்குதல் அவசியமானதாகும்.

மாற்றம் என்பதை ஒவ்வொரு முகாமையாளரும் தனது செயலொழுங்காகக் கொள்ள வேண்டும்.வேறுபட்ட பாடசாலைகள் வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே மாற்றத்துக்கான செயன்முறையானது பலமான தலைமைத்துவத்தினாலேயே சாத்தியமானதாக மாறும். இங்கு ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களைப் பொறுத்தவரையில் கலந்துரையாடல் இடம்பெறுவதன் மூலமே மாற்றச் செயன் முறையை பாட சாலை முகாமைத்துவத்தை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

# 12ஆவது வருடத்தில் எச்.எஸ்.பி.சி

தனது வெற்றிகரமான 12ஆவது வருடத்தில் எச்.எஸ்.பி.சி கொழும்பு பேஷன் வீக் ஆனது 2015ஆம் ஆண்டின் கோடைப் பருவகாலத்தைப் புதுப்பிக்கின்றது. இந்தப் பருவகாலம், இலங்கை வடிவமைப்பார்கள் தங்கள் தொகுப்பினை கட்டமைத்து, இலங்கையிலும் இணையத்திலும் தமது வர்த்தக இருப்பினை உருவாக்கிக்கொள்வதன் ஊடாக சர்வதேச சந்தைகளில் அவர்களையும் உள்ளெடுத்து ஊக்குவித்தலை நோக்காக கொண்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் கொழும்பு பேஷன் வீக் ஆனது இலங்கையின் நவநாகரிக ஆடைத் தொழிற்றுறையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் வினைத்திறன் மிகு முயற்சிகளுடனேயே களமிறங்குகின்றது. இந்த வருடத்தில் கொழும்பு பேஷன் வீக் இன் முதன்மை இலக்காக பேஷன் வடிவமைப்பாளர்களின் பெயரைக் கட்டமைத்து, பேஷன் சந்தையில் அவர்களுக்கு தனியிடம் அளித்தலை நோக்காகக்கொண்டு செயற்படும் அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்த பி.ஆர் முகவர் நிறுவனமான ஓமன் பி.ஆர் உடன் உத்தியோகபூர்வ பங்குடைமை ஒன்றில் இணைதல் விளங்குகின்றது. மேலதிகமாக கொழும்பு பேஷன் வீக் ஆனது இந்த வருடம் சரியான தருணத்தில் கொழும்பு பேஷன் வீக்கின் தலைவர் அஜய் வி.சிங் அவர்களை, ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் நகரைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் கொமன்வெல்த் பேஷன் கவுன்சிலின் ஸ்தாபக கவுன்சில் அங்கத்தவராக்கியுள்ளதன் மூலம் தன்னை மேலும் வலுவாக்கிக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் கொழும்பு பேஷன் வீக், கருப்பொருள் ஒன்றினை கருவாகக் கொண்டுதசாப்தங்களாக நவநாகரிகத்துறையில் கவனம் செலுத்திய போக்கு அல்லது கருத்தாக்கம் ஒன்றினைக் கொண்டாடுகின்றது. இந்தப் பருவகாலத்தில் கொழும்பு





பேஷன் வீக்கின் அனைத்து நிகழ்வுகளிலும் மைய கண்கவர் கருப்பொருளாக ரை–டை எனப்படும் கருப்பொருள் விற்பனைப் பொருள்களாகவும், இணைய தளங்களில் காட்சிப்பொருளாகவும் விளங்கும். ஹில்டன் நீச்சல்குளப் பகுதியானது இதற்கான கருப்பொருள் சார்ந்த பேஷன் கிராமமாக உருவாக்கப்படவுள்ளதுடன் கொழும்பு பேஷன் வீக்கின் அனைத்து நடவடிக்கைகளினதும் ஆற்றல்மிகு மத்திய நிலையமாகவும் திகழும்.

எமது திட்டங்களின் படி 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகள் வர்த்தக முனைப்புகளை மேலும் தீவிரப்படுத்துவதிலும் இலங்கை வடிவமைப்பாளர்களை அமெரிக்கா, ஆசிய மற்றும் கொமன் வெல்த் நாடுகளின் புதிய சந்தைகளில் ஊக்குவிப்பதனையும் அர்ப்பணிப்புடன் மேற்கொள்தலை இலக்காய் கொண்டுள்ளோம். 2003ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது முதல் கொழும்பு பேஷன் வீக் ஆனது இலங்கை நவநாகரிக தொழிற்றுறையின் பின்புலமாக விளங்குவதுடன், இலங்கை நவநாகரிக வடிவமைப்பாளர்கள் எதிர்கொள்ளும் தடைகளைத் தகர்த்து அவர்களுக்கு சிறந்த வெளிப்பாட்டினை அளித்தலை தமது முதன்மை விடயமாக கொண்டுள்ளது. கொழும்பு பேஷன் வீக், தம்மையொத்த சிந்தனை கொண்ட சக அனுசரணையாளர்களின் பங்களிப்பைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பருவகாலத்தில், கொழும்பு பேஷன் வீக் புகழ்பெற்ற பல உள்நாட்டு மற்றும் சர்வதேச வடிவமைப்பாளர்களின் புதிய தொகுப்புகளை 2015 மார்ச் 12ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறும் பிரதான நிகழ்வுகளின் ரண்வேயில் காட்சிப்படுத்தும். சர்வதேச ரீதியில் இடம்பெற்ற பல்வேறு மதிப்பு மிக்க பேஷன் வாரங்களில் தமது படைப்புகளை அரங்கேற்றிப் புகழ்பெற்ற ஏழு சர்வதேச வடிவமைப்பாளர்களுக்கு இம்முறை இடம்பெறும் கோடை 2015 பருவகால நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு பேஷன் வீக்கின் வடிவமைப்பாளர் தெரிவுக்குழுவினால் அநாமதேயமாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வு நடவடிக்கைகள் மூலம் கவனமாக ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது உள்நாட்டு வடிவமைப்பாளர்களும் தமது புதிய ஆடைத்தொகுப்புகளை இந்த பருவகாலக் கண்காட்சியில் காட்சிப்படுத்துவர். உள்நாட்டு வடிவமைப்பாளர்களைத் தேர்ந்தெடுத்த குழுவில் ஆசியாவின் மிக அனுபவமிக்க வடிவமைப்பாளர்களான பிபி ரசல், ரிஸ்வான் பேய்க், பிரசாத் பிட்டப்பா மற்றும் யோலண்ட் அளுவிஹார ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர். இவர்கள் யாவரும் உள்நாட்டு வடிவமைப்பாளர்களுக்கு ஒருங்கிணைந்த பின்னூட்டங்களை அளித்ததுடன், தமது தொகுப்புகளை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்ற வழிகாட்டுதல்களையும் வழங்கினர். (த)

# வாசகர் திருமுகம்



## மருத்துவமனை நிர்வாகம் கவனிக்குமா?

கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.போதனா மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் வாழ்க்கையில் மறக்க முடியாதது.

எனது தந்தையார் சிகிச்சை பெறும் பொருட்டு மருத்துவமனையின் விடுதியொன்றில் தங்கியிருந்தார். முற்பகல் 10 மணியளவில் அவரது கண்களைப் பரிசோதிக்கும் பொருட்டு கண் கிளினிக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இது தொடர்பாக எமக்கு எதுவுமே தெரியாது. வழக்கம் போல நான் மதிய உணவை எனது தந்தைக்கு எடுத்துச் சென்ற போதே, அவர் கண் பரிசோதனைக்குச் சென்ற விடயம் தெரிந்தது. அங்கு சென்ற போது 12.15 மணியளவில் கண்பரிசோதனைகள் முடிவடைந்த போதிலும், எனது தந்தை விடுதிக்கு அழைத்துச் செல்லப்படாமல் அங்கேயே தங்கி நின்றதைக் காண முடிந்தது. மதிய உணவு கூட அவர் அருந்தவில்லை. மேலும் அவர் நடக்க முடியாத நிலையிலேயே காணப்பட்டார்.

நான் இது தொடர்பாகத் தெரிவிக்கும் பொருட்டு, கண்களைப் பரிசோதிக்கும் அறைக்குள் சென்றேன். அங்கு ஒருவர் இருந்தார். அவரிடம் எனது தந்தையின் பரிதாப நிலையைக் கூறி அங்கிருந்து அவரை விடுதிக்கு கூட்டிச் செல்வதற்கு உதவுமாறுகேட்டுக் கொண்டேன். அவர் என்னை அலட்சியமாகப் பார்த்தார். பின்னர் தொலைபேசியில் என்னையே தொடர்பு கொண்டு விடுதியில் இருப்பவர்களுடன் கதைக்குமாறு கூறி தொலைபேசியைத் தந்தார். நான் விடுதியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அங்கும் அலட்சியமாகவே பதிலளிக்கப்பட்டது. பின்னர் 2 மணியளவில் எனது தந்தை விடுதிக்கு கூட்டிச் செல்லப்பட்டார்.

மேற்படி கண் கிளினிக் அறையில் கடமை புரிபவர் வழக்கமாக அலட்சியப் போக்குடனும், மரியாதைக் குறைவாகவும் நடப்பதாக வேறு சிலரும் கூறியுள்ளனர். நோயாளிகளுக்கு மனிதாபிமான சேவை ஆற்ற வேண்டிய இவரைப் போன்றவர்களை, எவ் வாறு கூறுவதென்றே தெரியவில்லை.

மருத்துவமனை நிர்வாகம் நோயாளர்கள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

*கு.ராஜினி, கொக்குவில்.*

## பொறுப்பற்ற வாகனச் சாரதிகள்

இரவில் வீதிகளில் செல்லும் மோட்டார் சைக்கிள்களில் பெரும்பாலானவற்றின் முகப்பு(ஹெட்லைற்) வெளிச்சம் எதிரில் வரும் வாகன சாரதிகளினதோ பாதசாரிகளினதோ கண்களுக்கு நேராக கண்களை கூசச் செய்து பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக உள்ளன. தெருவுக்கு சமாந்தரமாகவும், அதனை விட இன்னும் மேல் நோக்கியதாகவும் இவற்றின் 'ஹெட்லைற்'களின்வெளிச்சம் பாய்ச்சப்படுவதும் அண்மைய இரவு விபத்துக்களுக்கு காரணம் எனப்படுகிறது. ஒளிக் குவிப்பின் தூரம் ஒரு குறிப்பிட்ட அளவு தூரத்தில் தெருவைத் தொடக்கூடியதாக (தரையை) அமைக்கப்பட்டிருக்க வேண்டியது இரு பகுதியாருக்கும் பாதிப்புக்களில் இருந்து விடுபட உதவும். தவிர ஒளிச்சமிக்ஞை மூலமாக சில சாரதிகள் எதிரே வரும் வாகனங்களுக்கு இதனால் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்க வேண்டி 'டிம்லைற்றை' ஒளிரவிடும்படி தெரிவித்தாலும் சிலர் அதனை சட்டை செய்யாது பொறுப்புணர்வற்று சாரதியம் செய்வது வருந்தத்தக்கது. இவ்வாறான வாகன ஒளிப்பாய்ச்சல்கள் குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் நேரெதிரே வழியில் இருப்பவற்றையோ, மேடு பள்ளங்களையோ தெளிவாகப் புலப்படுத்த மாட்டா.

தெருவுக்குத் தெரு, சந்திக்குச் சந்தி மறைந்து நின்று, வரும் போகும் வாகனங்களை மறித்து நிறுத்தும் போக்குவரத்துப் பொலிஸார் இது விடயத்திலும் தங்கள் கவனத்தைத் திருப்பினால் அது பெரும் புண்ணியகாரியமாக அமையும் என்பதுடன், விபத்துக்களையும் அநியாய உயிரிழப்புக்கள், அங்க இழப்புக்கள் ஆகியவற்றையும் தவிர்க்க உதவுமல்லவா?

*எஸ்.விமலன், யாழ்ப்பாணம்*

### கேலிச் சித்திரம்




*நன்றி: மவ்பிம*

# பூதாகாரமாகும் மீனவர் விவகாரம்

இலங்கை–இந்திய மீனவர் பிரச்சினை இப்போது மிகத் தீவிரமானதொரு கட்டத்தை அடைந்து வருகின்றது. இருநாட்டு அரசுகளும் இந்த விடயத்தில் மெத்தனப் போக்குடன் நடந்துகொள்வதால் இருநாட்டு மீனவர்களுக்கு இடையே மோதல் போக்கு உக்கிரமடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் வடக்குக் கடல் இந்திய மீனவர்கள் நடத்திய மூர்க்கத்தனமான தாக்குதலில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு மீனவர்கள் மூவர் காயமடைந்துள்ளனர். அவர்களுடைய படகுகளும் சேதமாக்கப்பட் டுள்ளன. இரு பகுதி மீனவர்களுக்கு இடையேயும் ஒரு நேரமாகக் கடலில் கைகலப்பு நடந்ததாக நேரில் கண்ட மீனவர்கள் கூறினர். அதேவேளை, கட்டைக்காடு மீனவர்கள் மீது இந்திய மீனவர்கள் பெற்றோல் குண்டு வீசி, தாக்குதலையும் நடத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய ஊடுருவலை இலங்கை கடற்படையினர் தடுக்காமை காரணமாகவே இந்த மோதல் வெடித்ததாக கட்டைக்காடு மீனவர்கள் கூறியுள்ளனர். இதனால், கட்டைக்காட்டில் உள்ள கடற்படை முகாமை முற்றுகையிட மீனவர்கள் முயன்றதால் அங்கு பதற்ற நிலைமை தோன்றியது.

கடந்த சில தினங்களாகவே வடக்குக் கடலில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் தொடர்வதாக குற்றாச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இலங்கை ஜனாதிபதியின் இந்திய பயணத்தையொட்டி ஏற்கனவே கைதாகி சிறையில் இருந்த, இருநாட்டு மீனவர்களும் பரஸ்பரம் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். அதன்பின்னர், இலங்கைக் கடற்பரப்பில் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளும் விடுவிக்கப்பட்டிருந்தன. இதன் பின்னர், இந்திய மீனவர் கள் ஊடுருவல் விடயத்தில் இலங்கை நெகிழ்வுப் போக் கையே கடைப்பிடித்தது. இலங்கை கடற்படையினரும் இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்காமல் தம்பாட்டில் இருந்துவிட்டனர். இது இந்திய மீனவர்களுக்குச் சாதமாகப் போக அவர்களின் ஊடுருவல் எல்லை மீறிப் போனது.

இதனையடுத்தே நேற்றுமுன்தினம் இருநாட்டு மீனவர்களுக்கு இடையேயும் கடலில் வெடித்தது மோதல். இந்த மோதல் நேற்றுமுன்தினத்துடன் முடிந்துவிடவில்லை. கட்டைக்காடு மீனவர்கள் மீதான தாக்குதலின் எதிரொலியாக எல்லை தாண்டி, மீன் பிடித்த குற்றச் சாட்டில் நேற்று இந்திய மீனவர்கள் 83 பேர் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். கைதான மீனவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இரு நாட்டு அரசுகளும் அசமந்தப் போக்குடன் செயற்பட்டதன் பலாபலனே இரு நாட்டு மீனவர்களிடையேயும் இந்த மோதல் வெடிக்கக் காரணமாக இருந்தது. தொடர்ந்தும் இரு பகுதி மீனவர்களும் கடலில் மோதல் போக்குடனேயே இனிமேல் நடந்துகொள்ளப் போகிறார்கள்.

மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வை எட்டுமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்தபோதும், அது பல்வேறு காரணங்களாலும் பின்தள்ளப்பட்டுவந்தது. இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி ஆட்சியில் அமரும் அரசுகள் இந்த மீனவர் விவகாரத்தைக் கண்டு கொள்ளாமலேயே தமது காலத்தை நகர்த்துகின்றன. அவ்வப்போது, இது தொடர்பான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டபோதும் அவற்றின்மூலம் உறுதியான தீர்வு எதுவும் எட்டப்பட்டிருக்கவில்லை. தீர்வை எட்டுவதில் இருநாட்டு அதிகாரிகளும் விடாப்பிடியாகச் செயற்படுவதால் பேச்சுக்களும் பயனளிக்கவில்லை.

இவற்றின் வெளிப்பாடாகவே நேற்று முன்தினம் வெடித்த மோதல் நோக்கப்படுகின்றது. எனவே இருநாட்டு அரசுகளும் இனியாவது இந்த விடயத்தில் அதிக சிரத்தை எடுத்து, மீனவர்களின் பாது காப்பை கவனத்தில் கொண்டு ஒருஉறுதியானதீர்வை எட்ட முற்படவேண்டும்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற்போனோர் விசாரணைக்குழுவின் நம்பகத்தன்மை கேள்விக்குறியே!

பாதிப்புற்ற மக்களுக்கு நியாயமும் நீதியும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடுகளில் ஆணைக் குழுக்களை நிறுவி விசாரணை நடத்தும் வழமை உண்டானது. ஆனால் எமது நாட்டில் அரச விசாரணை ஆணைக்குழுக்கள், ஆட்சியாளர்களின் கைப்பொம்மைகளாக மாறிச் செயற்படுகின்றனவோ என்ற சந்தேகம் மேலெழும் நிலைமை எழுந்து உயர்கிறது.

காணாமற் போனவர்கள் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவும், மேற்சொன்ன வகை சார்ந்ததா என்ற சந்தேகம், பாதிக்கப்பட்ட உறவுகளிடம் ஏற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் நடைபெற்ற வேளைகளிலும், அதற்குப் பின்னரும் பெரும் எண்ணிக்கையில் பல வயதினரும் அரச அலகுகளால் காணாமற்போகச் செய்யப்பட்டனர் என்ற ஐயம் இப்போது பெருத்துப் பருத்துள்ளது.

மேற்குறிப்பிட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, தனது விசாரணையை மேற்கொண்டிருந்த வேளை, காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் மரணச் சான்றிதழ்களை வழங்கும் திட்டம் ஒன்றை முந்திய அரசு நயவஞ்சக நோக்கத்துடன் முன்னெடுத்திருந்தது; அறிவித்திருந்தது.

அதேவேளை, காணாமற்போகச் செய்யப்பட்டவர் களைக் கண்டுபிடிப்பதற்கு உதவத் தகுந்த, ஏதுவான வினாக்களை, அவர்களின் உறவுகளிடம் - சாட்சிகளிடம்- கேட்பதற்குப் பதிலாக, அதனை விடுத்து, அவர்களைத் திசைமாற்றும் கேள்விகளையே கேட்டிருந்தனர் என்ற அதிருப்தியும் மேலோங்கி இருந்தமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

அதுமட்டுமன்றி, முந்திய அரசின் தேவைக்கு ஏற்ப, ஏற்கனவே அதன் அதிகாரிகளால், விசாரணைக்குரிய பரப்பு காலத்துக்குக் காலம் கூட்டிக்குறைக்கப்பட்டதும் இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த விவகாரம், அரசியல் மயப்படுத்தப்பட்டு விட்டது என்பதனையும் துலாம்பரமாகத் தொட்டுக் காட்டுகிறது.

காணாமற்போகச் செய்யப்பட்டவர் களைத் தேடிக்கண்டு பிடிப்பதற்கான ஊற்றுக் கண்களை இனம் காண்பதற்கு, பயன்தரும் வகையில் ஆணைக்குழு செயற்பட்டதா, அதற்கு அரசினால் வசதிசெய்யப்பட்டதா என்பதற்கான செயல்முறை வடிவங்கள் எதுவும் தென்படவில்லை!

அவற்றோடு சேர்த்துச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய இன்னொரு விவகாரமும் பொருத்தமானது எனலாம். ஆம், காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட அனைத்துலக நிபுணர்களில் ஒருவர் --

முன்னைய அரசின் அனைத்துலகப் பரப்புரைகளுக்கான ஆலோசகராகவும் செயற்பட்டிருக்கிறார்!

அது ஒன்றே, காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழு, அரசின் நலன்கருதியே -- அதன் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் வழியில் தடம் பதித்தே செயற்படும் என்று கொள்ளலாம் அல்லவா.........?

ஆகையால், தமிழ் இளைஞர், யுவதிகள் காணாமற் போகச் செய்யப்பட்ட பாவத்தில் - குற்றத்தில் - பங்கு கொண்ட அரச அலகுகளின் - அமைப்புக்களின் - பிம்பமான ஆணைக்குழுவின் அமர்வுகளைப்புறக்கணிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு -- கோரிக்கை - ஏற்புடையதே. அரசு தனது தந்திரோபயங்களை அழுத்தி, அமுக்கி நடைமுறைப்படுத்த முனைவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. நல்லாட்சிக்கான அறிகுறியும் அல்ல.

நூறுநாள் வேலைத்திட்டம் என்ற இனிப் ... காட்டி, தமிழ் மக்களின் உடனடித் தேவை ... நிறைவேற்றாது, கோயக்கம் மாயக்கம் செய்வதற்கு மைத்திரிபால - ரணில் அரசு முனைந் ... ஆட்சியியல் தன்பாட்டில் தறுக்கணிக் ... காலத்தின் பதிலும் அதுவாகவே ...

# மீனவர்கள் மோதல் சம்பவம் தமிழர்களின் உறவுக்கு வேட்டு

## இந்தியத் துணைத்தூதரே, விரைந்து செயற்படுங்கள்



■ சேரலாதன்

புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் இந்திய, இலங்கை மீனவர்கள் இடையே நடுக்கடலில் வைத்து மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள கடற்பரப்பில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை சிறியதொரு விடயமாக எவரும்கருதிவிடமுடியாது. ஏனென்றால் மோதலில் ஈடுபட்டவர்கள் தமிழர்கள் என்பதுதான் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

வழக்கமாகவே இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல்எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றமை அனைவரும் அறிந்த ஒன்றுதான். ஆனால் இதனால்பாதிக்கப்படுபவர்கள் இலங்கைத் தமிழ் மீனவர்கள் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.


மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மீனவர்கள் போர்முடிவடைந்த பின்னரும் நிம்மதியாகத் தமது தொழிலை மேற்கொள்ளமுடியாதநிலையில்காணப்படுகின்றனர். கடற்படையினரின் கெடுபிடிகள், தென்பகுதி மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் இவற்றுக்கெல்லாம் மேலாக இந்திய மீனவர்களால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள், அழிவுவேலைகள், என்பன தமிழ் மீனவர்களின் தொழிலை முடக்கிவிடும் அளவுக்கு அத்துமீறிச் சென்று கொண்டிருப்பதைஅவதானிக்கமுடிகின்றது.


வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்த நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களின் படகுகள் அங்கு போடப்பட்டிருந்த கட்டைக்காடு மீனவர்களது வலைகளை அறுத்தெறிந்து நாசம் விளைவித்துள்ளன. இதனால் சுமார் ஏழு லட்சத்துக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர். மேலும் தமது அறுக்கப்பட்ட வலைகளைத் தேடித் தாம் சென்றபோது இந்திய மீனவர்கள் தம்மோடு முரண்பட்டதுடன் கரையில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் வைத்து இந்திய மீனவர்கள்தம்மீதுகற்கள், பொல்லுகள், ஈயக்குண்டுகள்ஆகியவற்றால்தாக்கியதுடன் இறுதியில் பெற்றோல் குண்டுகளை வீசியதாகவும் கட்டைக்காடு மீனவர்கள் தெரிவித்தனர். இதனால் மூன்றுபேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது அங்கு நின்ற இலங்கைக் கடற்படையினர் ஒன்றுமே செய்யாது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

முன்பெல்லாம் இந்தியமீனவர்களை விரோதிகளாகக் கருதி இலங்கைக் கடற்படையினர் நடத்திய தாக்குதல்களில் பல நூற்றுக் கணக்கான இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஏராளமானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். மீனவர்களின் வள்ளங்கள் உட்படப் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்பட்டன. இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசிப்பதைத் தடை செய்வது இலங்கைக் கடற்படையினரின் முக்கிய கடமையாகும். ஆனால் கட்டைக்காட்டில் நடந்த சம்பவத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறலையும், கட்டைக்காடு மீனவர்கள் மீதான தாக்குதலையும் கடற்படையினர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தமை தமிழர்கள் தம்மிடையே மோதிக் கொள்ளட்டும், அவர்களின் ஒற்றுமைசிதைந்து போகட்டும் என்ற இனவாதச் சிந்தனையில்அவர்கள்இருந்தமையையே காட்டுகின்றது. மாறாக இந்திய மீனவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது இவ்வித தாக்குதலை மேற்கொண்டால் இதே கடற்படையினர்வேடிக்கைபார்த்துக் கொண்டு இருப்பார்களா?

> இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல்எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றமை அனை வரும் அறிந்த ஒன்றுதான். ஆனால் இதனால் பாதிக்கப்படுபவர்கள் இலங் கைத் தமிழ் மீனவர்கள் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றால் இந்திய, இலங்கைத்தமிழர்களின் உறவுக்குப் பெரும் பாதகமாகவே அமைந்து விடும். இதைத்தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும், இலங்கையின் தமிழ் அரசியல்வாதிகளும் புரிந்து கொள்ள வேண்டும். இதை வெறுமனே இரண்டு நாடுகளின் மீனவர் பிரச்சினை என எடுத்துக் கொள்ளாமல், தமிழர்களின் பிரச்சினை என்ற கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரும் ஒரு தமிழர் என்பதால் இந்த விடயத்தில் உடனடியாகச் செயற்பட்டு ஒருசுமுகமானநிலையை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தவறின் எதிர்காலத்தில் மிக மோசமான விளைவுகளையே சந்திக்க நேரிடும்.





அம்பாந்தோட்டையில் சீனாவின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட 361 மில்லியன் டொலர் பெறுமதியான துறைமுக அபிவிருத்தியும் ஒரு கடன் அடிப்படையிலான திட்டமாகும். இந்தியக் கப்பல்கள் இங்கு தரித்து நிற்பதன் மூலமாவது இத்துறைமுகத்திலிருந்து வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

# வெள்ளை யானைகளின் மையமாக மாறியுள்ள அம்பாந்தோட்டை

அம்பாந்தோட்டையில் பல மில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையம் விமான சேவையினரால் புறக்கணிக்கப்பட்டதிலிருந்து, ஆடம்பரமான துடுப்பாட்ட அரங்கம் விளையாட்டு வீரர்களால் நிராகரிக்கப்பட்டது வரையான விடயங்களை நோக்குகின்றபோது, மேலதிக செலவினங்களை எதிர்காலத்தில் தவிர்ப்பதெனத் தற்போதைய புதிய அரசு தீர்மானித்துள்ளதையே அது வெளிக்காட்டுகிறது.

முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஆட்சி அதிகாரத்தின் மூலம் இலங்கையைப் பிராந்திய வர்த்தக மையமாக மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். அதன் ஒருகட்டமாக அவர் தனது சொந்த இடமான அம்பாந்தோட்டையை கலைத்துறை மையமாக மாற்றவேண்டும் எனக் கட்டளையிட்டிருந்தார்.

பத்து ஆண்டுகளாக இலங்கை ஆட்சி செய்த மஹிந்த ராஜபக்ஷ மிகப் பெரிய திட்டங்களின் பின்னால் தனது பெயரை வைத்திருந்தார். ராஜபக்ஷ தனது ஆட்சிக் காலத்தில் பல்வேறு ஊழல் மோசடிகள் மற்றும் குடும்ப ஆட்சியால் நாட்டை மிகவும் மோசமான நிலைக்கு இட்டுச்சென்றதன் காரணத்தாலேயே கடந்த மாதம் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்.

ராஜபக்ஷ அரசு கடந்த காலத்தில் பல பில்லியன் டொலர் களைக் கடனாகப் பெற்றுள்ளது.

"பொருளாதார ரீதியாக நோக்கினால், முதலீடுகளை நாங்கள் இரத்துச்செய்ய வேண்டிய நிலையிலுள்ளோம். நாங்கள் நீண்ட காலத்தின் பின்னரே கடன்களை மீண்டும் வழங்க முடியும். ஆனால் அவற்றிலிருந்து நாம் பயனுள்ள எதனையும் எதிர்பார்க்க முடியாது" என நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புத் துறையின் பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரட்ண குறிப்பிட்டுள்ளார்.

210 மில்லியன் டொலர்கள் கடனாகப் பெறப்பட்டு கட்டப்பட்ட ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையம் 2013இல் திறந்து வைக்கப்பட்ட பின்னர், இந்தவிமான நிலையத்தின் ஊடாக தேசிய விமான சேவையான சிறிலங்கன் எயார்லைன்ஸ் மாத்திரமே பறப்பில் ஈடுபட்டது.

இந்தவிமான நிலையத்தின் பயணிகள் காத்திருப்பு மண்டபம் எப்போதும் வெறுமையாகவே காணப்படும்.

இந்தவிமானநிலையத்தில்நாளாந்த பயணிகள் சேவை இடம்பெறும் போது மட்டும் அதற்கான நீர் வழங்கல் மற்றும் காற்றுச்சீரமைப்பு போன்றவற்றை இயக்குமாறும் ஏனைய நேரங்களில் அவற்றை நிறுத்திவிடுமாறும் புதிய அரசு கட்டளையிட்டுள்ளது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை, ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையத்தின் ஊடாக தனது பறப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என ராஜபக்ஷ கட்டளையிட்டிருந்தார். ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் உடனடியாக எயர்லைன்ஸ் விமான சேவை புதிய விமான நிலையத்தின் ஊடான தனது பறப்புக்களை நிறுத்திவிட்டது. இதன்மூலம் இந்த விமானசேவை, ஆண்டுதோறும் 18 மில்லியன் டொலர்களைச் சேமிக்க முடியும் என மதிப்பிடப்படுகிறது.

பறவைகள் தங்குமிடத்தில் கட்டப்பட்டுள்ள இந்த விமானநிலையத்தில் விமானங்களும் பறவைகளும் மோதுண்ட சம்பவங்களும் இடம்பெற்றதுண்டு.

மிக அண்மைக்காலத்தில் ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையம், வெள்ளை யானைகளின் சுற்றுலா மையமாக மாறியுள்ளமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

இந்த இடத்தைப் பலப்படுத்த வேண்டியது எனக்கான சவாலாகும். ஏனெனில் விமானங்கள் பறப்பில் ஈடுபடாத ஒரு விமான நிலையமாக இது காணப்படுகிறது என இதன் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் டெறிக் கருணாரட்ன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து 250 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அம்பாந்தோட்டை நகரம், விவசாய நிலங்களால் சூழப்பட்ட வறண்ட நிலப்பரப்பாகும். ஆனால் இந்த இடத்தில் பல பில்லியன் டொலர்கள் பெறுமதியான திட்டங்களை– பரீட்சார்த்த அறிக்கைகளைப் புறக்கணித்துவிட்டு ராஜபக்ஷ மேற்கொண்டார்.

அதாவது இந்த இடம் தொடர்பான புவிசார் அறிக்கைகள், சூழலியலாளர்களின் எச்சரிக்கைகள் மற்றும் யானைகள், சிறுத்தைகள் மற்றும் கரடிகள் போன்ற காட்டு மிருகங்களின் தங்குமிடமாக அம்பாந்தோட்டை காணப்படுவதாக எச்சரிக்கப்பட்ட போதிலும் இவற்றை எல்லாம் அசட்டை செய்துவிட்டு ராஜபக்ஷ தனது திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

"அம்பாந்தோட்டையில் சீனாவின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட 361 மில்லியன் டொலர் பெறுமதியான துறைமுக அபிவிருத்தியும் ஒரு கடன் அடிப்படையிலான திட்டமாகும். இந்தியக் கப்பல்கள் இங்கு தரித்து நிற்பதன் மூலமாவது இத்துறைமுகத்திலிருந்து வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

அம்பாந்தோட்டை மாவட்டத்துக்குள் ஆறு நிரல்களைக் கொண்ட நெடுஞ்சாலை ஒன்றை ராஜபக்ஷ அரசு அமைத்தது. அதற்காக 52 மில்லியன் டொலர் பெறுமதியான மேம்பாலம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதை விரிவாக்கப்பட்டுள்ளதுடன், பிறிதொரு அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்கான பணிகளும் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. இவை அனைத்தும் ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களாகும். இவற்றுக்கு பல மில்லியன் டொலர்கள் தேவையாக உள்ளன.

அம்பாந்தோட்டையில் 15.5 மில்லியன் டொலர்கள் செலவில் ஒரு மாநாட்டு மண்டபமும் அமைக்கப்பட்டது. 2013 பொதுநலவாய மாநாடு இடம்பெற்றதன் பின்னர், இந்த மண்டபம் வெறுமையாகக் காணப்படுகிறது. இதில் தற்போது திருமண விழாக்களும் இடம்பெறுகின்றன.

இதைப்போன்று அம்பாந்தோட்டையில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் தாவரவியல் பூங்கா ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள வேற்றிடத் தாவரங்களைப் பராமரிப்பதற்காக நாள்தோறும் பல தொன் நீர் தேவைப்படுகிறது.

மழைவீழ்ச்சி அதிகம் கிடைக்கப் பெறாத அம்பாந்தோட்டை வாழ் கிராமத்தவர்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரை இந்தப் பகுதியிலிருந்தே பெறவேண்டும். இந்த நிலையில் இவர்கள் நீரைப் பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள்.




நாங்கள் இங்குவேற்றிடத்துத் தாவரங்களைவளர்க்கிறோம். அவை ஈரவலயத் தாவரங்களாகும் என பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாடு இடம்பெற்ற போது ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்ட இத் தாவரவியல் பூங்காவின் பாதுகாவலர் தெரிவித்தார்.

இங்கு நீர் எவ்வளவு தூரம் விரயமாக்கப்படுகிறது என்பது மக்களுக்குத் தெரியும்போது நிச்சயமாக கலவரம் ஏற்படும். இந்தப் பகுதியில் தாவரங்களைப் பாதுகாத்து வைப்பதற்கான திட்டமே இதுவாகும் என நாம் கருதுகிறோம். ஆனால் தாவரங்களைப் பராமரிப்பதற்கு பெருமளவான நீர் தேவைப்படுவதால் இந்தத்திட்டம் நீடித்து நிலைக்கக் கூடியதல்ல என தனது பெயரைத் தெரிவிக்க மறுத்துவிட்ட பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

2011 உலகக் கோப்பைக்கான இரண்டு ஆட்டங்கள் இலங்கையில் இடம்பெற்ற போது அதற்காக அம்பாந்தோட்டையில் வடிவமைக்கப்பட்ட துடுப்பாட்ட அரங்கத்திற்கு அருகிலும் நீர்த் தட்டுப்பாடு காணப்படுகிறது.

ஆகக்குறைந்த ஆட்டங்கள் மட்டுமே இடம்பெறும், 35,000 இருக்கைகளைக் கொண்ட இந்த அரங்குக்காக இலங்கை துடுப்பாட்ட சபை கட்டணம் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான திட்டங்களை வைத்துக் கொண்டு நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பதை வரையறுப்பது மிகவும் கடினமானதாகும். முதற்கட்டமாக நாங்கள் கடன்களை வகைப்படுத்தவுள்ளோம். ஐந்து தொடக்கம் ஏழு சதவீதத்துக்கு வாங்கப்பட்ட கடன்கள் தொடர்பாக மீளவும் பேச்சுக்களை நடத்த விரும்புகிறோம். அதன் பாதி சதவீதத்துக்கு மேல் எங்களால் கட்ட முடியாது என இலங்கையின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுக் கடன்கள் உட்பட நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக முன்னைய அரசு உண்மைகளை வெளியிட மறுத்துள்ளதாகவும் இந்தத் திட்டங்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தப்போவதாகவும் தற்போதைய அரசு தெரிவித்துள்ளது.

*நன்றி:*
*ஏ.எவ்.பி செய்தி நிறுவனம்*
*தமிழாக்கம்: புதினப்பலகை.*

# தவக்காலச் சிந்தனை



## அனைவரும் பகிர்ந்துண்டு மகிழ்வுடன் வாழ்வோம்

ஆண்டவர் இயேசுவின் திருப்பாடுகளை அறிவிக்கும் இந்தத் தவக்காலத்தில் பகிர்ந்துண்டு வாழும் பண்புள்ளவர்களாக மாற்றமடைய முயற்சி செய்வோம்.

ஆண்டவர் இயேசுவின் உவமைக் கதையில் வரும் ஊதாரிப் பிள்ளையாக எம்மில் பலர் வாழ்ந்து வருவது மிகவும் கவலைக்குரிய விடயமாக உள்ளது. அதிவேகமாக வளர்ந்து வரும் நாகரிக உலகில் நாம் வாழ்கின்றோம். சில அநாகரிக செயல்கள் வேதனையளிப்பதாக உள்ளன போரின் சத்தத்தில் இருந்து மீண்டோமே தவிர, அதில் பட்ட காயங்கள் இன்னும் ஆறவில்லை.

விதவைகள், அங்கவீனர்கள், தாய் தந்தையர் யாரும் அற்ற அநாதைச்சிறார்கள் உணவு, உறைவிடம், கல்வி வசதி, ஏதுமற்றோர் மத்தியில் நாம் வாழ்கின்றோம் என்பதை மறந்து, விருந்துகள், வேடிக்கை விநோதங்களில் பெருமளவு உணவு வகைகளை சிந்திச்சிதறி வீணடிக்கின்றோம். சாவுக்கும் திருமணத்துக்கும் கிரிக்கெட்டுக்கும் தேர்தல் வெற்றிக்கும் கட்டுக்கட்டாக பட்டாசுகள் கொளுத்திக் காசைக்கரியாக்குகின்றோம். இவ்வாறெல்லாம் செலவுகள் செய்து வீணாக்கப்படும் பணத்தை சில தர்மகாரியங்களுக்குப் பயன்படுத்த முடியாதா? ஏன் முடியாது. எம்மவரின் மன மாற்றத்தால் முடியும். மனமாற்றத்துக்கான காலமே இந்தத் தவக்காலம். இந்தத் தவக்காலத்தில் ஊதாரித்தனங்களை விட்டு விட்டு எம்மால் முடிந்தவரை இல்லாதவர்களுடன் பகிர்ந்து வாழப் பழகிக் கொள்வோம். தவக்காலத்தை மேன்மேலும் பயனுள்ளதாக்குவோம்.

ந.மரியநாயகம்,
கொழும்புத்துறை.

தேன் மிகச் சிறந்த உணவுப் பொருளாகும். தேன் மூலம் எல்லாப் பிணிகளையும் நீக்கமுடியும். அதிகாலையில் வெறும் வயிற்றில் தேனை நாவால் தொட்டுச் சாப்பிட்டு வந்தால் எந்த வியாதியும் நமக்கு வராது. ஆனால், தேன் சுத்தமான தேனாத இருக்கவேண்டும். தேனுடன் சுண்ணாம்பைக் கலந்து, நன்றாகக் குழைத்து பழுக்காத கட்டிகள் மேல் பூச கட்டிகள் பழுக்கும்.




மீன் எண்ணெயோடு தேனைக் கலந்து உண்டு வந்தால், ஆறாத புண்கள் ஆறிவிடும், கருஞ்சீரகத்தை நீர் விட்டுக்காய்ச்சி அதில் தேன் கலந்து சாப்பிட, கீழ் வாதம் போகும். வயிற்றுவலி ஏற்பட்டவர்களுக்குத் தொப்புளைச் சுற்றிலும் தேன் தடவினால் வலி நீங்கும். தேனோடு பாலோ, எலுமிச்சம் பழச்சாறோ கலந்து சாப்பிட பித்த நீர்த் தொந்தரவுகள் குறையும். கல்லீரல் வலுவடையும். அல்சர் நோய்க்கு சாப்பாட்டிற்கு முன் இரண்டு கரண்டித் தேனைத் தொடர்ந்து சாப்பிட்டு வர, குணமாகும். ஆஸ்துமா, அலர்ஜி தொல்லைகளிலிருந்து விடுபட தினமும் தேனைப் பருகி வரவேண்டும்.

## அழகு தரும் மஞ்சள்

மஞ்சள் இலை மற்றும் குப்பைமேனி இலை இரண்டையும் அரைத்து குளித்த பிறகு உடலில் பூசிக் கழுவுவதை தினமும் செய்தால் பூனை முடிகள் உதிரும். கழுத்து, கணுக்கால்களில் கருமையைப் போக்க மஞ்சள் தூளை தயிரில் கலந்து தடவி வரவும். மூட்டுவலியால் அவஸ்தைப்படுபவர்கள், உணவில் மஞ்சள் தூளை சேர்த்து வந்தால், அதில் உள்ள குர்குமின் என்னும் பொருள், வலியை உண்டாக்கும் ஹோர்மோன்களின் உற்பத்தியை முற்றிலும் தடுத்துவிடும். மஞ்சள், சுண்ணாம்பு, விளக்கெண்ணெய் மூன்றையும் நன்றாக குழைத்து கட்டிகள் உள்ள இடத்தில் பற்று போட்டால் கட்டிகள் சீக்கிரம் பழுத்து உடைந்து விடும். பாலில் சிறிது மஞ்சள் தூளை கலந்து, அதனைக் கொண்டு முகத்தை துடைத்தால், சருமத்தில் உள்ள அழுக்குகள் அனைத்தும் வெளியேறி, சருமம் பொலிவோடு காணப்படும். சருமத்தில் உள்ள காயங்களைப் போக்கி, அழகான சருமத்தை பெறுவதற்கு, மஞ்சள் தூளுடன் தேன் சேர்த்து கலந்து, தடவி ஊற வைத்து கழுவ சருமத்தில் உள்ள காயங்கள் மறைந்து அழகான சருமத்தை பெறலாம்.



## கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 650 | 600 | 500 |
| நண்டு | 200 | 200 | 350 | 300 | 350 |
| கணவாய் | 500 | 500 | 600 | 500 | – |
| பாரை | 550 | 400 | 500 | – | 350 |
| சுறா | 550 | 500 | 650 | – | 450 |
| சீலா | 300 | 350 | 450 | 300 | 300 |
| விளை | 550 | 300 | 500 | 350 | 300 |
| முரல் | 300 | 300 | 350 | – | – |
| கும்பிளா | 450 | 250 | 380 | 400 | 250 |
| கிழாக்கன் | 350 | 500 | 400 | 300 | 250 |
| ஓரா | 350 | 550 | 350 | 250 | – |
| திரளி | 150 | 200 | 300 | 200 | – |
| நகரை | 150 | 200 | 300 | 250 | 250 |
| சூடை | 100 | 100 | 150 | 100 | 70 |
| ஒட்டி | 100 | 100 | 150 | 200 | – |
| திருக்கை | 150 | 250 | 200 | 200 | 130 |
| பாலை | 350 | 250 | 300 | 350 | – |
| வாளை | 100 | 100 | 250 | 250 | 200 |
| கொய் | 80 | 100 | 200 | 80 | – |
| மதனம் | 150 | 200 | 300 | 200 | 250 |

## நாளை

### மாசி-17 ஞாயிற்றுக்கிழமை 01.03.2015

திதி:ஏகாதசி: பி.ப.05.16 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ.02.34
சுபநேரம்: 09.28-10.58 வரை
இராகுகாலம்: 04.58-06.28 வரை

ஏகாதசி விரதம்

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 80 | 20 | 40 | 40 | 20 |
| கத்தரி | 100 | 100 | 100 | 120 | 100 | 100 | 90 | 60 |
| கரட் | 120 | 170 | 120 | 180 | 120 | 140 | 140 | 150 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 60 | 40 | 50 | 50 | 30 |
| பயிற்றை | 70 | 100 | 60 | 100 | 60 | 120 | 120 | 80 |
| பாகல் | 90 | 100 | 70 | 120 | 100 | 140 | 180 | 110 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 50 | 80 | 80 | 45 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 90 | 90 | 80 | 100 | 90 | 70 |
| சி.வெங்காயம் | 40 | 70 | 60 | 80 | 70 | 100 | 80 | 55 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 | 100 | 120 | 120 | 100 |
| தக்காளி | 80 | 60 | 60 | 60 | 60 | 80 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 90 | 60 | 60 | 80 | 60 |
| கீரை | 10 | 30 | 30 | 10 | 15 | 20 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 25 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 100 | 120 | 100 | 120 | 140 | 140 | 120 |
| புடோல் | 70 | 60 | 60 | 60 | 80 | 80 | 80 | 70 |
| கோவா | 80 | 80 | 70 | 100 | 60 | 80 | 120 | 70 |
| வெண்டி | 80 | 100 | 60 | 60 | 80 | 80 | 80 | 45 |
| போஞ்சி | 200 | 180 | 100 | 160 | 150 | 120 | 220 | 200 |
| லீக்ஸ் | 150 | 140 | 140 | 180 | 150 | 180 | 120 | 160 |
| தேங்காய் | 60 | 55 | 60 | 50 | 45 | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 70 | 90 | 80 | 70 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 160 | 130 | 200 | 160 | 160 | 140 | 240 | 220 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 100 | 90 | 120 | 140 | 70 |
| பனங்கிழங்கு | 04 | 03 | 05 | 02 | 03 | 05 | 03 | 03 |

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 6 | 4 | 5 | | 7 | 8 |
| 8 | | | 1 | | | 9 | 5 | |
| | | 6 | | | 9 | | | |
| 1 | | | 7 | | 6 | 4 | | |
| | | | | 5 | | | | |
| | | 5 | 4 | | 1 | | | 3 |
| | | | 2 | 9 | | 1 | | |
| | 1 | 8 | | | 7 | | | 9 |
| 3 | 7 | | 5 | 1 | 4 | | | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 5 | 7 | 9 | 4 | 3 | 6 | 2 |
| 3 | 9 | 4 | 8 | 2 | 6 | 5 | 7 | 1 |
| 6 | 2 | 7 | 1 | 5 | 3 | 9 | 8 | 4 |
| 7 | 4 | 6 | 2 | 1 | 9 | 8 | 5 | 3 |
| 2 | 5 | 9 | 3 | 4 | 8 | 6 | 1 | 7 |
| 8 | 1 | 3 | 5 | 6 | 7 | 2 | 4 | 9 |
| 9 | 7 | 8 | 4 | 3 | 5 | 1 | 2 | 6 |
| 5 | 6 | 2 | 9 | 7 | 1 | 4 | 3 | 8 |
| 4 | 3 | 1 | 6 | 8 | 2 | 7 | 9 | 5 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### மற்றவர்களுக்காக வாழுங்கள்

மற்றவர்களுக்கு நன்மை ஏற்படுமானால் நரகத்திற்குக் கூட செல்வதற்குத் தயாராய் இருங்கள். மரணம் வருவது உறுதியாக இருக்கும்போது ஒரு நல்ல காரியத்திற்காக உயிரை விடுவது மேல். உலகில் நல்லவர்கள் பெரிய தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் முழுவதும் அனுபவிக்கிறது.

உலகவாழ்வில் இருந்து தப்பி ஓட முயற்சி செய்ய வேண்டாம். வெற்றியோ தோல்வியோ போராடுங்கள். மற்றவர்களுக்காக வாழுங்கள். இறைவன் உங்களை வழிநடத்துவார்.

# தை



## தை மாதத்தில் பிறந்தவர்களின் மகிமைகளும் பலன்களும்

சூரியன் மகர ராசியில் சஞ்சரிக்கும் காலத்தை தை மாதம் என்கிறோம். இந்த ராசி, சனி பகவானின் ஆட்சி வீடுகளில் ஒன்றாகும். சூரியனுக்கு இது பகைவீடாகும். குருவுக்கு இது நீச ராசியாகவும், ஆற்றல் மிக்க செவ்வாய்க்கு உச்ச ராசியாகவும் விளங்குகின்றது. இது சுக்கிரனுக்கு நட்பு வீடாகும். கண்ணுக்குத் தெரியாமல் மண்ணுக்குள் மறைந்திருப்பவை விண்ணில் தோன்றிய விநோதங்களைவிட விபரீதங்களை சோதிடரீதியாக விளக்கும் ஏடுகள் எண்ணிலடங்கா. இத்தகைய மண்ணைப் போன்றவர்களாம் தை மாதத்தில் தோன்றிய வித்தகர்கள்.

**தோற்றம்**

பெரும்பாலும் நடுத்தர உயரத்துக்கும் குறைவான உயரம் உடையவர். எலும்புகள், முட்டிப் பாகங்கள் எடுப்பாகத் தோற்றம் அளிக்கும். எனினும் அழகு வாய்ந்தவை. உண்மையான வயதைவிட அதிக வயது உடையவராகக் காட்சியளித்திடுவார். நீண்ட கழுத்தும், நீண்ட தலையும் உடையவர். நெற்றி விரிந்தும் உயர்ந்தும் காணப்படும். அதில் ஆழ்ந்த கோடுகள் உடைய சுருக்கமுடைய சரும பாகம் காணப்படும். புருவங்கள் உயர்ந்தும் வளைந்தும் காணப்படும்.

கண்கள் ஆழமாகப் பதிந்து சிறுத்துக் காணப்படும். நீண்ட நாசியும் ஒரு சிலருக்கு வளைந்தும் காணப்படும். தாடைகளில் சுருக்கம் அல்லது பள்ளம் தென்படும். செவிகள் விரிந்து நீண்டு காணப்படும். தோள்கள் விரிந்திருக்கும். பாதங்கள் அகன்றிருக்கும். கீழ்ப் பார்வை உடையவர். முகத்தில் கவலைக் குறியும் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டவர் போன்ற பாவனையும் வெளிப்புறத் தோற்றமாகக் காட்சியளித்திடும்.

அழுத்தந்திருத்தமாகப் பேசுவார். பேச்சில் உறுதி தொனிக்கும். நிதானமாகவும் பரபரப்பின்றியும் பேசுவார். கபடமற்ற உள்ளமும், ஆடம்பரமற்ற தோற்றமும் உடையவர். ஜனசஞ்சாரம் உடைய கூட்டங்களில் இவர் பின்னணியில் நிற்பார். பிறருடைய கவனத்தை ஈர்த்திடாவண்ணம் நடந்துகொள்வார்.

**குணபாவங்கள்**

வந்தவர்களுக்கு விருந்தளிப்பதும், நொந்தவர்களுக்கு மருந்தளிப்பதும் இவர் கடமைகளில் ஒரு சிலவாம். சரண் புகுந்தவர்களுக்குக் கருணை காட்டுவதும், பயந்து தம்மை யடைந்தவர்களுக்கு அபயமளிப்பதும் இவருடைய இயல்பாம்.

நண்பரானாலும், பகைவரானாலும் விருப்பு, வெறுப்புக் கொள்ளாதவர். எதையும் எளிதில் கிரகிக்கும் சக்தியுடையவர். கிரகித்ததைப் பிறருக்குப் பாத்திரமறிந்து அனுக்கிரகம் செய்யும் ஆவலுடையவர். பிரதிபலன் கருதாது உழைத்திடுவார். உழைப்பால் உயர்ந்திடுவார். கடவுளைக் காட்டிலும் கடமையைப் பெரிதென மதிக்கும் இலட்சியவாதி. பிடித்ததை விடார். ஆனால் வீண் பிடிவாதக்காரரல்லர்.

வீண் வார்த்தைகளை வெளியிடார். பிறர் வெளி யிட்டாலும் பொருட்படுத்தமாட்டார். மனம் வெகுளார். விடாமுயற்சியே இவ ருடைய மூச்சு. நீதி வழுவாமை இவருடைய பக்தியாகும். தை மாதத்தில் பிறந்தவர் எவ்வளவு கொடிய சோதனைகள் வந்தாலும் வேதனையடைய மாட்டார். தம்முடைய குறிக்கோள் நிறைவேறும் வரை சாதனையிலேயே ஈடுபடுவார். நிபந்தனைகள் பலவாக இருப்பினும் உண்மையான போதனைகளைக் கைவிடமாட்டார். மற்றவர்களிடத்தில் காண முடியாத அதிசயம் இவரிடத்தில் உண்டு. ஒரு காரியத்தில் ஈடுபடும்போது குறைந்தபட்சம் இரண்டு விதமான நன்மைகளை ஏற்படுத்திக் கொள்வதே அதுவாகும். தரம் பார்த்துச் செலவு புரிந்திடுவார். சிக்கனத்தில் உலோபிகளையும் இவர் தோற் கடிப்பார்.

தாராள மனப்பான்மையிலும் ஊதாரிக் குணத்திலும் கொடை வள்ளல்களும் இவரைக் கண்டு நெஞ்சஞ்சுவர். எதை, எந்தெந்த நேரத்தில், எப்படிச் செய்ய வேண்டுமோ, அதை அந்தந்த நேரத்தில் அதன்படியே செய்து முடிப்பார். இந்த நெறியே இவருக்கு உறுதுணையாக நின்று எளிதில் அரும் பயனைத் தேடியளித்திடும்.

பணத்தைக் கொண்டும், செல்வாக்கைக் கொண்டும், மற்றவர்கள் சாதிக்க முடியாததை இவர் செலவின்றி, பரிந்துரை இல்லாது நொடிப்பொழுதில் சாதித்திடுவார். சிக்கல் நிறைந்த வாழ்க்கையெனினும் சிக்கலிலிருந்து இவர் தன்னை விடுவித்துக் கொள்வார். இவரை நம்பி எந்தக் காரியத்தையும் ஒப்படைக்கலாம். ஆனால், இவரை நம்பி எந்தக் காரியத்திலும் பிறர் பிரவேசிக்கலாகாது. 'வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை' என்பது போல், இவர் நினைத்தால் ஆண்டியையும் அரசனாகக் கருதுவார். நினைத்தால், அரசனைத் துரும்பாகவும் மதியார். 'ஆம்' என்பவர்களுக்கு ஆத்திக னாகவும், 'இல்லை' என்பவர்களுக்கு நாத்திகனாகவும் தோற்றமளிப்பார்.

ஆசாரங்களை அனுட்டிப்பது ஒழுக்கம் என்றும் கருதுவார். அதேபோல், அனாச்சாரத்தை இழுக்கெனக் கருதவும் மாட்டார். ஒளிவுமறைவு என்பதை இவரிடத்தில் காண்பது அரிது. பிறர் புலனுக்குக் கடுமையாகத் தோற்றமளிப்பார். ஆனால், உள்ளம் கனிந்தவர். செய்வதைத் திருந்தச் செய்வார். மிதமாகவே எதையும் உபயோகிப்பார். ஆக்க சக்தியுடையவர். அழிவதைத் தடுக்க வல்லவர். அழிந்ததை மீட்கக் கூடியவர். இருப்பதைப் பெருக்கிடும் ஆற்றலுடையவர். தன்னை உணர்ந்தவர். தனிமையில் இனிமையைக் காண்பவர். தன்னம்பிக்கையுடையவர். குஷிப் பேர்வழி. சுபிட்சமான எதிர்காலத்தை நிர்மாணித்திடப் பல திட்டங்களைத் தீட்டிடுவார். ஆனந்த பரவசமுடையவர்.

சிறிய விடயங்களிலும் பெரிய பிரயாசை எடுத்துக் கொள்வார். தன் வழிக்கு இசையாததைக் கண்டு வருந்துவார். ஆனால், மற்றவர்களைப் போல் நீண்ட நேரத்தைச் சிந்தனையில் செலவிடமாட்டார். பிடிக்காத விடயம் என்றால் திரும்பியும் பார்க்க மாட்டார். வாழ்க்கையில் ஏற்படும் அரிய வாய்ப்பை நழுவ விடமாட்டார். இவருக்கு அதிக நண்பர்கள் இருக்க மாட்டார்கள். காரிய தம்பிரான் என்றால் அது இவர்தான்.

**நோயும் மருந்தும்**

உணவில் அக்கறையின்றி சலிக்காமல் செயலாற்றுவார். இதனால் ஜீரண உறுப்புக்களில் கோளாறுகள் தோன்றி வாட்டும். பல் வலி, சரும நோய், வழுக்கை விழுதல், மனச் சோர்வு போன்றவை சாதாரணமாக இவர்களுக்கு ஏற்படும். வாய்ப்புக் கிடைக்கும்போது உல்லாசப் பயணங்களில் ஈடுபடுவதாலும், புதிய இயற்கை வனப்பைக் கண்டு களிப்பதாலும், மன ஆறுதல் அளிக்கும் கண்காட்சிகளைக் கண்டு களிப்பதாலும் அசதிகளைத் தடுக் கலாம். எந்த நேரத்திலும், எது கிடைத்தாலும் ருசி அறியாது உட்கொள்ளக் கூடியவர். இந்தப் பழக் கத்தை மாற்றிக்கொண்டு, பசி நேரத்தில் பக்குவமான உணவுகளை உட்கொண்டால் எவ்விதக் கோளாறும் இன்றி இவர் நோயற்ற வாழ்க்கை வாழலாம்.

**குறையும் நிறையும்**

இவர் அதிகாரத்துக்கு வளைந்துகொடுப்பவர் அல்லர். பிறருடைய அபிப்பிராயங்களுக்குச் செவி சாய்ப்பவரல்லர். துதிபாடுவது இவருக்குப் பிடிக்காது. இன வேட்கை அதிகம். சொல்லுக்கு இணங்காதவர்களை வேருடன் களைந்து அகற்றி டுவார். இவரைப் புரிந்துகொள்வது மிகக் கடினம்.

## கணவனும் மனைவியும்..



குடும்பம் என்பது சற்று மாறுபட்ட அமைப்பு. உறவுகளிலும் உணர்வுகளிலும் உண்மை இருந்தால் போதுமானது. புத்திபூர்வமான அணுகுமுறை பல சமயங்களில் குடும்பச் சூழலை இயந்திரத்தனமாக மாற்றிவிடும் அபாயமும் உண்டு. அதிகமான குறைகளை மட்டுமே சுட்டிக் காட்டும் மனைவியும், அதிகமாக நிறைகளை மட்டுமே சுட்டிக் காட்டும் நட்பும், ஒருவனை என்றுமே உயர்த்துவதில்லை. தொழிலென்று வரும்போது, கணவனோ மனைவியோ தங்களது பலம் அல்லது பலவீனம் இரண்டையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

தொழிலை வழி நடத்திச் செல்லும் திறமை யாருக்கு அதிகம் என்பது முதலில் கண்டறியப்பட வேண்டும். தலைமைப் பண்பு அதிகமுள்ள அந்த நபரை இன்னொருவர் ஏற்று அங்கீகரிக்கவேண்டும். இதில் ஆண், பெண் பேதம் கிடையாது. ஒருவேளை, மனைவி தலைமையேற்கும் பட்சத்தில், அவரை முன்னிலைப்படுத்தி தொழிலைக் கொண்டு போவதில் கணவனுக்கு தான் என்ற இறுமாப்பு இருக்கக்கூடாது. நட்புணர்வுடனும் ஆழ்ந்த புரிதலுடனும் இருவரும் ஒன்றிணைந்து இயங்க வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால் அங்கே தொழில் வளர்ச்சி பெருகும். தொழில் நிமித்தமாகத் தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. அத்தகைய சமயங்களில் கணவன், மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் அனுசரணையாக இருக்கவேண்டியது அவசியம். ஒவ்வொரு தொழிலும், தட்பவெப்ப மாறுதல்களைப் போல் மாறுதலுக்கு உட்பட்டதே. வழமையான வசந்த காலங்களில் லாபத்தை அனுபவிக்கவும் தொழில் நலிவடையும் சமயங்களில், அந்தத் துன்பத்தை கட்டுக்குள் வைத்திருக்கவும் இருவருக்கும் தெரிந்திருக்கவேண்டும்.

பெரும்பாலும் கணவன்–மனைவி இருவரும் சேர்ந்து செய்யும் தொழில்களில் தொழில் வளர்வதை விட, குடும்பச் சூழலில் நிம்மதி பறிபோவதுதான் அடிக்கடி நடந்துவிடுகிறது. இதற்கு தொழில் காரணமல்ல. சமூகத்தின் ஆண் பெண் கண்ணோட்டமே காரணம்.

பொதுவாக, பெண்களின் திறமைகளை மனம் திறந்து பாராட்ட முன்வரும் ஆண் வர்க்கம், தனது மனைவி என்று வரும்பொழுது, பெண்களின் புத்திக்கூர்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. ஆணின் கருத்துக்கு, வீட்டில் பெண் மறுப்பளித்தால் அது அவளுடைய ஆணவமாகவே புரிந்துகொள்ளப்படுகிறது. பெண்களும் பெரும்பாலும் இரண்டு நிலைகளில் செயற்படுகின்றனர். அதிகம் அடங்கிபோவது அல்லது அதிகம் அடக்கப் பார்ப்பது. இரண்டில் இருந்தும் விடுபட்டு, அவரவருக்குரிய இடத்தில் இருந்துகொண்டு அடுத்தவரை மதிக்கக் கற்றுக் கொள்ளும்போதுதான் வாழ்க்கை அமைதியாகச் செல்லும்.

கணவன், மனைவி இருவருமே அறிவுக் கூர்மையில் ஒன்றாக இருக்கும் பட்சத்தில், தொழில்களைத் தனித்தனியாக செய்வதில் தவறில்லை. ஆண், பெண் என்ற பாகுபாட்டை மறந்து, தொழில் என்று வரும்போது, ஒருவர் மற்றவரின் கருத்துகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தைப் பெறவேண்டும். ஒரு தொழிலுக்கு பல திறமையாளர்கள் தேவைப்படலாம். ஆனால் முன்னிலைப்படுத்தப்படும் நபர் ஒருவராக இருப்பது நலம். பொதுவாக பணம் என்று வரும்பொழுது, பெண்கள் அதிகபட்ச பாதுகாப்பை மனதில் கொண்டு செயற்படுவர். ஆண்களோ அது சாம்ராஜ்யமாக விரிவடைவதில் அதிகமாகக் கவனம் செலுத்துவார்கள். பெண்கள் தொழில் செய்வதில் பெரும்பாலும் ஒரு நேர்த்தி, ஒழுங்கு முறை இருக்கும். ஆனால் பிரபல்யத்தை அவ்வளவு எளிதில் அடைய மாட்டார்கள்.

இதற்கு விதிவிலக்குகளும் இருக்கலாம். பிரபல்யத்தை உருவாக்கும் திறமை இருப்பினும், பெண்கள் பொதுவாக சிறிது அடக்கி வாசிக்கும் மனோபாவத்தை உடையவர்களாக இருப்பர். ஆண்களோ இதற்கு முற்றிலும் வேறுபாடாக, தொழில் சாம்ராஜ்ஜியங்களை நிறுவுவதில் அதிக ஆர்வம் காட்டுவர். மனைவிக்கு கணவனைப் போல் சிறந்த பங்காளர் கிடைப்பது அரிது. அதேபோல் கணவனுக்கும் நேர்மையான தொழில் பங்காளர் அமைவது அரிது. குடும்ப வேலைகள் என்று வரும் பொழுது, சமையல், குழந்தை பராமரிப்பு, பெரியவர்களைப் பார்த்துக் கொள்ளுதல் என்று பலவற்றிலும், ஆண் இறங்கி வந்து வேலைகளை சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும் போதுதான், பெண் பதற்றமின்றி வெளி வேலைகளைக் கவனிக்க முடியும். ஆனால் ஆண்களில் ஒரு பிரிவினர், 'நான் வெளியில் போவதைத் தடுக்கவில்லையே, மேலே படிப்பதைத் தடை செய்யவில்லையே, வேலைக்குப் போவதை மறுக்கவில்லையே, நானும் சுதந்திரம் கொடுத்துத்தான் இருக்கிறேன்' என்று சொல்வார்கள்.

ஆனால் இவர்கள் பெண்களிடம் ஓர் அஸ்திரத்தைப் பிரயோகிப்பார்கள். 'நீ காலையில் எழுந்து எல்லா வீட்டு வேலை, சமையல் இன்னும் பிற வேலைகள், குழந்தைகள் பராமரிப்பு, சில்லறை வேலைகள் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு, மாலை இரவு உணவு வகை குறித்து திட்டமிட்ட பின்னர், என்ன வேண்டுமென்றாலும் செய்து கொள்!' என்பர்.

இதைச் சொல்வது ஆண்களுக்கு எளிதானது. ஆனால் நடைமுறையில் பெண்கள் அனைத்து வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும்பொழுது உடலளவிலும் மனரீதியிலும் எளிதில் பலமிழந்துவிடுகின்றனர். அதற்குமேல் தொழில், வேலை போன்றவற்றில் சுமையை ஏற்றுக்கொள்ளும்பொழுது அதிக மன உளைச்சலுக்கு ஆளாகுகின்றனர்.

இதற்கு மாறாக குடும்பப் பொறுப்புகளை சரிசமமாகப் பகிர்ந்து கொண்டு, குழந்தைகளைப் பராமரிப்பதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, ஆண்கள், பெண்களை முன்னேற்றினால் அதிக அளவு தொழில் மாற்றங்கள் ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை. கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் மட்டும் இவை பொருந்தும் என்பதில்லை. குடும்ப உறவினருக்கிடையே நடக்கும் எந்தத் தொழிலிலும் மற்றக் குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்.



## வர்ணம் தீட்டலாம் வாங்க...






## பால்வாடியில் விடும் விலங்கு!

முயலைப் போலவே அர்ஜெண்ரீனாவில் ஒரு விலங்கு உள்ளது. ஆனால், முயலைவிட கொஞ்சம் பெரியதாக இருக்கும். அதன் பெயர் மாரா. இவை இரை தேடப் போகும்போது தன் குட்டிகளைப் பொதுவான ஒரு வளைக்குள் விட்டுவிட்டு போகும். இப்படி அம்மா மாராக்களால் ஒரே வளைக்குள் இருபதுக்கும் அதிகமான குட்டிகள் இருப்பதைப் பார்க்கும்போது, அது ஒரு பால்வாடி பள்ளி போலக் காட்சி தரும்.



## வாத்து



குவா குவா வாத்து குவா குவா வாத்து
குள்ளமான வாத்து ஆகா என்ன அழகு
அசைந்த நடை அழகு! குவா குவா வாத்து
கூடிச் செல்லும் வாத்து யாவரையும் ஈர்க்கும்
அழகு நிறைந்த வாத்து!
கரையில் வந்து நிற்கும்
குவா குவான்னு கத்தும்
இரையாய் நத்தை தின்னும்
இன்னும் பலவும் தேடும்!
தூவல் வாலை ஆட்டும்
தலையைத் தலையை நீட்டும்
ஆவலாய் நீரில் நீந்தும்
ஆர்வமாய்ப் பார்த்து மகிழ்வோம்!

## எது ஞானம்



ஒரு குடும்பஸ்தருக்கு திடீரென்று வாழ்வில் வெறுப்பு தோன்றியது. தானும் சிறந்த ஞானம் பெற்று ஒரு பெரிய ஞானியாக வேண்டும் என்ற ஆசை எழுந்தது. அந்த ஊரில் இருந்த ஞானி ஒருவரிடம் சென்று தன் ஆசையைச் சொன்னார். இவரது ஆர்வத்தை நன்கு புரிந்து கொண்ட அந்த ஞானி, உபதேசம் மூலம் இவருக்கு ஞானத்தைத் தெரிய வைக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டார். 'உங்கள் வீட்டு வழியாக சலவைக்காரன் பொதி சுமக்கும் கழுதையைத் தினமும் கொண்டு செல்வதை உற்று நோக்கி இருக்கிறாயா?' என்று கேட்டார். 'பார்த்திருக்கிறேன் குருவே,' என்றார் அந்தக் குடும்பஸ்தர். 'அப்படியானால் நாளைக் காலை அந்தக் கழுதை பொதியை சுமந்து கொண்டு செல்வதையும், மாலையில் பொதியை சுமந்து கொண்டு திரும்பி வருவதையும் நன்றாக உற்றுப் பார். அப்புறம் இங்கே வா,' என்று கூறி அவரை அனுப்பி வைத்தார் ஞானி.

அதேபோல மறுநாள் காலையில் தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டார் அந்தக் குடும்பஸ்தர். அழுக்குப் பொதியை சுமந்தவாறு கழுதை ஒன்று போய்க் கொண்டிருந்தது. சலவைக்காரன் அதனை மேய்த்துச் சென்றான். பின்னர் மாலையில் சலவை செய்த பொதியை சுமந்து கொண்டுதிரும்பி வந்தது கழுதை. இதனை நன்றாகக் கவனித்த அந்த குடும்பஸ்தருக்கு அதில் ஞானம் சம்பந்தமான பொருள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. 'இந்த ஞானி ஏன் இப்படிக் குழப்புகிறார்?' என்று மனதிற்குள்ளேயே நொந்து கொண்டார். மறுநாள் ஞானியிடம் சென்ற அவர், 'நீங்கள் சொன்ன மாதிரியே காலையிலும், மாலை யிலும் பொதி சுமந்து செல்லும் கழுதையை நன்றாகக் கூர்ந்து பார்த்தேன் குருவே. ஆனால், அதில் ஞானம் தொடர்பாக ஏதுமில்லையே,' என்றார் வருத்தத்துடன். இதைக்கேட்டு மெல்ல சிரித்த ஞானி, "காலையில் நீ பார்த்த கழுதை சுமந்து சென்றது அழுக்கு மூடையை. ஆனால், அப்போது அழுக்கு மூடையைச் சுமந்து செல்கிறோமே, என்ற வருத்தம் அதன் முகத்தில் காணப்பட்டதா?' என்று கேட்டார். 'இல்லை' என்றார் குடும்பஸ் தர். 'சரி. மாலையில் சலவை செய்த துணி மூடையை சுமந்து வந்த கழுதை, அப்போதாவது மகிழ்ச்சியுடன் காணப்பட்டதா?' என்று கேள்வி எழுப்பினார் ஞானி. அதற்கும், "இல்லை!' என்றே பதிலளித்தார் அவர். 'இப்படித்தான் துன்பம், இன்பம் ஆகிய இரண்டையுமே சமமாகப் பாவிக்க வேண்டும். அப்படிப்பட்ட மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் உண்மையான ஞானம்,' என்று பதிலளித்தார் ஞானி. இதைக் கேட்ட குடும்பஸ்தருக்கு வாழ்க் கையின் தத்துவம் புரிந்தது.

## பழக்கங்களைச் சமாளிப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி...)

மனம் என்பது பரிணாம வளர்ச்சியில் முதலில் சில பழக் கங்களை முயற்சி செய்து பார்த்தது. இயற்கையாக உணவு, உறவு,உறக்கம் என்ற மூன்றும் இன்பம் தந்தன. ஆனால் இன்றும் இதை அளவுக்கதிகமாக உபயோகித்து அழிபவர் அதிகம். வாழ்வதற்காகவே சாப்பிடுகிறோம்.ஆனால் பலர் சாப்பிடவே வாழப் பிறந்தவர் போல சாப்பிட்டுக் கொண்டே சாகிறார்கள். மனச் சோர்வில் பலருக்கு அதீத உணவு இன்பம் தருகிறது. கவலைகளை மறக்க, மயக்க மருந்தாக போதையாக அதீத உணவு, அதிக உறக்கம் அவர்களுக்கு வடிகாலாகிறது. விளைவு உடல் பருத்து தீவிர நோயாளியாகிறார். உறக்கம் பலருக்கு தப்பிக்க தெரிந்த ஒரே வழி உறங்கு வது.தூங்கியே வாழ்வின் தோற்றவர்கள் ஏராளம். இன்னும் கொஞ்சம் மனிதன் பணம் பொருள் உறைவிடம் பாதுகாப்பு என்பது வசதிகள் வளர்ந் ததும் மனதை சாந்தப்படுத்த இசை, நாடகம்,கலை கள்,விளையாட்டு என்ற பொழுதுபோக்கு அம் சங்களை வளர்த்தான். இவை ஆரம்ப காலங் களில் நிச்சயமாக மன துக்கு நலத்தையும் வளத் தையும் கொடுத்தன.ஆனால் வியா பாரம்,போட்டி,பொறாமை,சூது என்ற நஞ்சு கலந்ததும் இவற்றில் பல பழக்கங்களும் தீமையாகி விட்டன. முக்கியமாக இசை, நாடகம், கலை கள் எல்லாம் சினிமா என்ற பெரிய திரை மற்றும் சின்னத் திரை மறை வில் மனிதனை அடிமையாக்கி அவனது அமைதியைக் கெடுத்தன.





இவற்றையெல்லாம் ஆராய்ச்சி செய்த மனிதன் எதற்கு தலையை சுற்றி மூக்கை தொட வேண்டும். நேரடியாக தொட்டால் என்ன என்று சிந்தித்தான். இன்பம் தரும் மூளை நரம்பு மண்டலத்தையே நேரடியாக இயக்கி பார்க்க ஆராய்ச்சி பல செய்தான். சோம பானங்கள் மதுர சங்கள் வடித்து மகிழ்ந்தார்கள். இப்படி மூளையை பொம்மலாட்டம் ஆடும் பொம்மை போல ஆட்டி வைத்தார்கள். திட திரவு வாயு பொருள் என பல் நூறு வகை மருந்துகளைக் கண்டுபிடித்தனர். இந்த போதை விஞ்ஞானிகள் இந்த துயர குகைக்குள்ளே மாண்டவர்கள் கோடி கோடி.

மிருகத்திலிருந்து சமூக மிருமாகி,மனிதனாகி சமூக மனிதனாகி புனிதனாகி மாமனிதனாகும் பரிணாம வளர்ச்சியின் பல திட்டங் களுக்கும் கொள்கைகளுக்கும் இது போன்று தீமையான பழக்கங்கள் இடையூறாக இருக்கின்றன. நல்ல பழக்கங்கள் நாளும் குறைவதும் தீய பழக்கங்கள் தினம் தோறும் வளர்வதும் தெளிவாகத் தெரிகிறது. தனிமனிதன் மீது குடும்ப,சமுதாய,தேசிய,கலாசார கட்டுப்பாடுகள் தளர்ந்து தனிமனித சுதந்திரம் அதி வேகமாக வளர்கிறது. இது ஒரு வகை யில் மிகவும் நன்மை தரும் தனிமனித சிந்தனையும் செயலும் விரிவடைந்து வளர மிக உபயோகமாகிறது. நல்லவர்கள் மிகமிக வல்லவர்களாக மாறுவதற்காக இது பயன்படுகிறது. ஆனால் கட்டவிழ்த்து விடப்பட்ட மனிதன் கால் போன போக்கில் கெட்டுவிட வாய்ப்பானது. எதுவும் தவறில்லை எவருக்கும் அடிமையில்லை என்ற தனிமனித தத்துவம் பலவிதமான தீய பழக்கங்களை ஆராய்ச்சி செய்கிறது. அதிலே அடிமையாகிறது. கொஞ்ச கொஞ்சமாக பெற்றோர், ஆசிரியர்,அயலார் என்ற கண்காணிப்பு தளர்கிறது.

(தொடரும்)

# அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைப்பது அவசியம்

## தென்னாபிரிக்க குழுவிடம் தெரிவித்தார் ஹக்கீம்



கொழும்பு, பெப்.28

நாட்டில் அரசியல் தீர்வுத் திட்ட மொன்றை முன்வைக்க வேண்டியது மிகவும் அவசியமானது என்று தெரிவித்துள்ளது சிறி லங்கா முஸ் லிம் காங்கிரஸ்.

இலங்கையில் மெய்யானதும், நிலையானதுமான சமாதானத்தை எட்ட வேண்டுமாயின் – காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டத்தை முன் வைக்க வேண்டியது அவசியம் – என அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க உயர்மட்டப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தென்னாபிரிக்காவின் சர்வதேச விவகாரங்களுக்கான துணை அமைச்சர் நொமாயின்டியா மிபிகாடோ தலைமையிலான குழுவுடனே இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

"அனைத்து இனங்களுக்கும் இடையே ஒற்றுமை நிலவ வேண்டும் என்ற தீர்மானத்தை ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரும் மக்கள் எடுத்திருந்தனர். இலங்கையின் நல்லிணக்க முனைப்புகளுக்கு தென்னாபிரிக்கா வழங்கும் ஒத்துழைப்பு வரவேற்கப்பட வேண்டியது."– என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# பதியப்படாத விமானத்தை பயன்படுத்திய சஜின்வாஸ்

கொழும்பு, பெப்.28

நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவுக்கு சொந்தமான கொஸ்மோஸ் லங்கா நிறுவனத்துக்குச் சொந்தமான பொருள்களை ஏற்றிச் செல்லும் சரக்கு விமானத்திற்கு பதிவுச் சான்றிதழ் இல்லை என்று கூறப்படுகின்றது.

போயிங் 727 ரக விமானத்தை சஜின்வாஸ் குணவர்தனவுக்கு சொந்தமான நிறுவனம் பயன்படுத்தி வந்துள்ளது. இந்த விமானம் 2000 ஆம் ஆண்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தமிழ் வர்த்தகர் ஒருவர் அதனை கொள்வனவு செய்திருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் இந்த விமானம் ஏரோ லங்கா என்ற பெயரில் இரத்மலானை மற்றும் யாழ்ப்பாணம் இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தது. இந்த விமானம் இலங்கையில் பதிவு செய் யப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

விமானத்தின் உரிமையாளர் விடுதலைப் புலிகளுக்கு உதவியதாக 2010 ஆம் ஆண்டு குற்றம் சுமத்தப்பட்டதுடன் இடைப் பட்ட காலத்தில் சஜின்வாஸ் குணவர்தன விமானத்தை தனக்கு சொந்தமாக்கிக் கொண்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்த விமான நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தோடு, அதற்காக செலுத்த வேண்டிய கட்டணமும் இதுவரை செலுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## காரைநகரில் திறப்பு விழாவும் வெளியீட்டு விழாவும்

யாழ்ப்பாணம், பெப். 28

கலை இலக்கிய அறிவியல் நட்புறவாளர் வட்டம் அலுவலகம் திறப்பு விழாவும் விருந்தாளி மாதாந்த இதழ் வெளியீட்டு விழாவும் காரை நகர் யாழ்ற்றன் கல்லூரிக்கு சமீபமாக உள்ள கட்டடத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கழகத் தலைவர் காரை எஸ். கெங்காதரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரனும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் ஆர். ஜெயசீலன், காரைநகர் கோட்டக்கல்விப் பணிப் பாளர் டி. ஸ்ரீ விக்கினேஸ்வரன், வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பொன். சிவானந்தராசா, ஊர்காவற்றுறை மக்கள் வங்கி கிளை உதவி முகாமையாளர் ஆர். ஜெயராஜா ஆகியோருடன்கௌரவவிருந்தினர்களாக பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)


**சிறுநீரகம் தேவை**

வயது 22-45, B+ve வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (இருபாலாரும்)

தொடர்பு: 077 87 59 400

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 600/=, இருவருக்கு 1500/=, நால்வருக்கு 2500/=.

Hotel Villa City 422, Galle Road.

வெள்ளவத்தை. 072 255 2222

**காணி விற்பனைக்கு**

நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகில், யாழ். கல்வி வலயத்துக்கு அருகாக செல்லர் வீதி, செம்மணி றோட்டில் அமைதியான சூழலில், அமைந்துள்ள நிலப்பரப்பு 1¾ ஒன்றே முக்கால் பரப்பு வருமானத்துடன் கூடிய வெறும் காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு- 0777 432645

**உணவகப் பணியாளர் தேவை**

அச்சுவேலியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு றொட்டி, புரியாணி, றைஸ்வகை, அப்பம் போடக்கூடியவர்களும் சமையல், சப்பளை என்பனவற்றுக்கும் பணியாளர்கள் தேவை. உடன் நேரில் சமூகம் தரவும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:- 0213008544

இப்பொழுதுமானிப்பாயிலும்...

**Northern Academic and Leadership Training Center (NALTC)**

வாராக நடாத்தப்பட்டுவரும் 5 – 15 வயது சிறுவர்களுக்கான ஆங்கில பயிற்சிநெறி - புதியபிரிவுகள் ஆரம்பம்.

"Children's Development Programs through Learning English and Elocution Classes".

இடம் :- பாரதி சனசமூக நிலையம் ஆனந்தா வீதி, மானிப்பாய்.

ஆரம்பம் :- 01.03.2015 நேரம் :-காலை9.00 மணி

உங்களது பிள்ளைகளையும் எம்முடன் இணைத்து சிறந்த பிரஜைகளாக்குங்கள்

Head office:-

116, Adiyapatham Road, Thirunelvely, Jaffna (0212227560)



## மணிவிழா நாயகர்களுக்குப் பாராட்டு

Best Wishes



மாணவ தலைவனாக மிளிர்ந்து தலைநகரில் பட்டப் படிப்பை முடித்து மலைநாட்டில் கல்வியை வளர்த்து இக்கட்டான காலகட்டத்தில் கஷ்டப் பிரதேசமான கிளிநொச்சி மாவட்டத்தைப் 19 வருடங்கள் வலம்வந்து பல மட்டத்திலும் கல்வியை வளர்த்து தரமுயர்ந்து தான் கற்ற சாவகச்சேரி இந்து அழைக்கச் சவால்மிக்க காலத்தில் சுமையை ஏற்று காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரையும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களையும் நெறிப்படுத்தி வளங்களைத் தேடி கலை வர்த்தகம் கணிதம் மருத்துவம் தொழில் நுட்பம் ஆகிய சகல துறைகளுக்கும் மாணவர்களைப் பட்டப்படிப்புக்கு அனுப்பி கல்லூரியின் 100 ஆவது வருடத்தைக் கொண்டாடி 10 வருடங்களுக்கு மேலாக அதிபராக நிர்வகித்து அதிபர் தரத்திலும் கல்வி நிர்வாக தரத்திலும் பட்டங்கள் பல பெற்று யாழ்.மாவட்ட அதிபர் சங்கத் தலைவராக வளங்கள் பலதேடி இன்னும் இன்னும் வளங்கள் வர அடிகோலி 3 தடவைகள் " பிரதீபா பிரபா " விருது பெற்று கப்டன் மகுடம் சூடி தகுதியுடைய சமாதான நீதிவானாகி ஆளுமையும் பண்பும் எதையும் எதிர் கொள்ளும் பக்குவமும் உடைய மதிப்பிற்குரிய **திரு அ.கயிலாயபிள்ளை** அவர்களே



கல்வித் திணைக்களத்தில் எழுதுவினைஞராகி கல்விச் செயற்பாடுகளை கற்றறிந்து சமூகச் சிற்பிகளான ஆசிரியத் தொழிலைத் தேர்ந்தெடுத்து குழப்பமான காலத்தில் ஒரு தசாப்தத்திற்கு மேலாக பளை மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக உப அதிபராக கல்வியை வளர்த்து யா/இடைக்குறிச்சியில் அதிபராகித் தான் கற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் 12 வருடங்கள் போர்ச் சூழல் மத்தியிலும் தென்மராட்சி இடப்பெயர்வு காலத்திலும் தளராது கல்லூரியை வளர்த்து தற்போதைய நிலைக்கு வர அப்போது அடிகோலி கல்வி புகட்டுவதில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு கல்வி நிர்வாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக தென்மராட்சி கல்வியை வளர உதவிய அமைதிப் போக்கும் பழகுவதற்கு இனியவரும் புன்சிரிப்புத் தவழும் முகமுடைய மேன்மைமிகு **திரு கு.சிவானந்தம்** அவர்களே

சம காலத்தில் நீங்கள் சேவையாற்றிய பிரதேசங்களில் நானும் கடமையாற்றி உங்கள் செயலாற்றலையும் நற்குணங்களையும் மெச்சினேன்.

இளமையோடு ஆரோக்கியமாக நெடுநாள் வளமோடு வாழ்க

டாக்டர் ச.அம்பிகைபாகன்


## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2015

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

01 கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 02.03.2015 தொடக்கம் 13.03.2015 பி.ப 3.00 மணிவரை

02 கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 16.03.2015 மு.ப 10.00 மணிவரை

03 கேள்வி திறக்கப்படும் திகதி : 16.03.2015 பி.ப 2.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்).

04 கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு

05 இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருத்தல் வேண்டும்.

06 கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

07 கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி, கொக்குவில்' என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்துக்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

08 மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த (ICTAD தரம்) |
|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் ஆயுர் வேத வைத்தியசாலைக் கட்டடம் அமைத்தல்- கட்டம் 1 | 10000.00 | 1000.00 | M09/C10 |
| 02 | விளையாட்டு மைதானத்துக்கு உதைபந்தாட்ட கோல் கம்பம், சிறுநீர் கழிக்கும் இடம் (Urinal) அமைத்தல் கோண்டாவில் | 1075.00 | 1000.00 | M10/C10 |

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

ப.வசந்தகுமார்
தவிசாளர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# பிரதமராகும் தகுதி உண்டு

## இப்படிக் கூறுகின்றார் நிமல் சிறிபால டி சில்வா

கொழும்பு, பெப்.28
மஹிந்தவின் ஆட்சிக் காலத்திலும், தற்போதும் பிரத மராகும் தகுதி எனக்கு காணப்படுகின்றது.– இவ்வாறு தெரி வித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா.

தொலைக்காட்சி நிகழ்ச்சி யொன்றில் கருத்துத் தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


புதிதாக அரசியலுக்குள் நுழை யும் அனைவரும் தம்மால் சிறந்த தலைமைத்துவத்தை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கின்றனர். ஆனாலும் அனைவருக்கும் அந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

மஹிந்தவின் ஆட்சியிலும் சரி, தற்போதைய ஆட்சியிலும் சரி பிரதமராகும் அனைத்துத் தகுதிகளும் எனக்கு இருக் கின்றன."– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பு மகாலிங்கம் (இராசலிங்கம்)

(மகாலிங்கம் சூல்பார் உரிமையாளர், யாழ். பஸ் நிலையம்)



வேலணை மேற்கு, வேல ணையைப் பிறப்பிடமாகவும், இல. 25, ஆஸ்பத்திரி வீதி, கொட் டடி யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பு மகாலிங்கம் (இராசலிங்கம்) 15.02.2015 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர் களான சின்னத்தம்பு- வள்ளி யம்மை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்க ளான தம்பையா-விசாலாட்சி தம் பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமணிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசசேகரம், இராசரத்தினம், சிவஞானம்மா, தங்கரத்தினம் மற்றும் அன்னலட் சுமி (கனடா), சிந்தாமணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வமலர் (யாழ்ப்பாணம்), பூவதி (சுந்தர வல்லி-லண்டன்), காலஞ்சென்றவர்களான சேனாதிராசா, தங்கராசா, செந்தில்நாதன், பாலதுரை ஆகியோரின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2015) ஞாயிற்றுக்கிழமை காலை லண்டனில் உள்ள ஸ்ரெகம் மயான நிலையத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 222 4132 (57353)(10) தகவல்: குடும்பத்தினர்.

### செல்வி சந்திரவதனி (வதனி) செல்வரத்தினம்



மீசாலை கிழக்கு, மீசாலை யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சந்திரவதனி (வதனி) செல்வரத்தினம் கடந்த (26.02.2015) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் செல்வரத்தினம் (செல்வம்) -கருணகலா தம்பதிய ரின் பாசமிகு புதல்வியும் சசிகரன் (அமெரிக்கா), கோகுலா, கௌஸல்யா, அனுசியா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளினி, ரூபன் ஆகியோரின் அன்பு மைத் துனி யும், கதிரேசு, நடேசபிள்ளை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2015) ஞாயிற் றுக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனை வரும்

காட்டுவளவு கந்தசாமி கோவிலடி, மீசாலை கிழக்கு, மீசாலை. தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயமலர் கணேசலிங்கம்



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல. 26, பாலிநகர், வவுனிக்குளத்தை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயமலர் கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், மு. பாண்டியன் குளம் மகா வித்) நேற்று (27.02. 2015) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந் தையா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மக ளும், கணேசலிங்கத்தின் அன்பு மனைவியும், செல்விமலர், காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் சிவானந்தராசா (ராசன்), காலஞ் சென்ற யோகானந்தராசா (வவா) மற்றும் ரோசிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌசியா, றோஜிதன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் , தகனக்கிரி யைக்காக பாலிநகர் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- சிவானந்தராசா (ராசன்- சகோதரன்)
077 1605497

### அன்னரெத்தினம் இராசையா



பிறப்பு 15.03.1933 இறப்பு 26.02.2015

நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னரெத்தினம் இராசையா நேற்று முன்தினம் (26.02.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -பசுபதி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் (சிகரெட் இராசையா) அன்பு மனைவி யும், தேவராணி, காலஞ்சென்ற தேவமனோகரி (டென்மார்க்) மற்றும் தேவமலர், தேவதேவி, தேவரஞ்சினி, காலஞ்சென்ற தேவமஞ்சரி (கனடா) மற்றும் தேவ காந்தி, தேவயோகராணி, அருள்வேந்தன், ஜீவகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஏகாம்பரநாதன், தெட்சணா மூர்த்தி, காலஞ்சென்ற வின்சன் றொபேட் மற்றும் சிவாஜி, சாந்தகுமார், நூமன், கேசவன், மதிமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், சேந்தன், கார்த்திகா, சிந்துஜா, ரபித்தா, அனுசன், அகிலன், கிங்சிலி, கனீசியா, அருள்மொழி, அருட்செல்வி, சிந்துஜன், திவ்யா, டிலானி, திரிலோசன் ஆகியோரின் பேர்த்தியும், காயத்திரி, நித்தியஸ்ரீ, கேசான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 89/3, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

89/3, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 077 959 7271

தகவல்:- குடும்பத்தினர். (57334)(3.4.7)

## தேர்தலுக்கு தற்போது அவசரம் இல்லை

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, பெப்.28
தேர்தலுக்கு செல்ல அவசரம் எதுவும் தற்போது கிடையாது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரட்ன தெரிவித்துள்ளார்.

"தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப் பட்டதன் பின்னரே தேர்தல் நடத்தப்பட வேண் டும். அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் அரசியலமைப்பு திருத்தங்கள் பற்றிய உறுதி மொழிகள் அளிக்கப்பட்டுள்ளன. அந்த உறுதி மொழிகள் உரிய முறையில் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமானது."– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"அவசர அவசரமாக தேர்தலை நடாத்த வேண்டிய அவசியம் கிடையாது. தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டு மெனக் கோரியே மக்கள் இந்த அரசுக்கு வாக்களித்தனர்."– என்றும் அவர் தெரிவித் தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்றுமுன்தினம் பங்கேற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார். (ற)

## சுதந்திர கட்சியை உடைக்க உள்ளிருந்தே சிலர் முயற்சி

### ஜனாதிபதி மைத்திரிபால கூறுகின்றார்

கொழும்பு, பெப்.28
சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்துவதற்கு கட்சிக்குள்ளேயே சிலர் முயற்சிக்கின்றனர். இரண்டு தோணிகளில் கால் வைத்திருப்ப வர்கள் தொடர்ந்தும் தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும். – இவ்வாறு எச்சரித்துள்ளார் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன.


நுகேகொட கூட்டத்துக்குச் சென்றவர்கள் தொடர்பில் கடும் தொனியில் சாடியுள்ள அவர், எங்கே இருக்கப் போகிறார்கள் என்பதை அவர் கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை சுதந்திரக் கட்சியின் உயர்மட்டக் குழுவினருடன் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

நுகேகொட கூட்டத்துக்குச் சென்றவர்களின் நோக்கம் தமக்கு நன்கு தெரியுமெனவும் , உள்ளே இருந்து குழிபறிக்கும் வேலைக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையென வும் ஜனாதிபதி அங்கு கடும்தொனியில் பேசியுள் ளார். மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஜனாதிபதி கடும் விசனம் தெரிவித்துள்ளார்.

இரண்டு தோணிகளில் கால் வைத்திருப்பவர் கள் ஒரு முடிவை எடுக்க வேண்டும். தொடர்ந் தும் உள்ளிருந்து செயற்பட முனைந்தால் தாமே முடிவெடுக்கும் நிலை ஏற்படலாமெனவும் ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார். (ற)

### விநாயகமூர்த்தி சிறிஸ்கந்தராசா (பபா)




வராத்துப்பளை பருத்தித்துறை யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட விநாயகமூர்த்தி சிறிஸ் கந்தராசா கடந்த (24.02.2015) செவ் வாய்க்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி - வள்ளிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் இராசம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும், பாலசரஸ் வதியின் அன்புக் கணவரும், மனோ கராவின் (ஜேர்மனி) அன்புத் தந்தை யும், மதுவின் (ஜேர்மனி) அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான நவரட்ணவேல், மாணிக்கராசா, தங்க வேல் மற்றும் வரதராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரா ஜேஸ்வரி (பிரான்ஸ்), சரோஜி னிதேவி, செல்வராணி (கனடா), ஸ்ரீரஞ் சினி (பிரான்ஸ்) மற்றும் தங்கவடி வேல் (விநாயகம்-கனடா), கனகரட்ணம் (கனடா), பரஞ்சோதி (கிளி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வராத்துப்பளை, பருத்தித்துறை. தகவல் : சி. மனோகரா (மகன்)

### இரத்தினம் குமாரதாசன்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இரத் தினம் குமாரதாசன் 26.02.2015 வியாழக் கிழமை இறைபதம் அடைந்து விட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் சிந்தாமணி தம்பதியின ரின் மகனும் காலஞ்சென்றவர்களான சுகிர் தரத்தினம், கமலாம்பிகை ஆகியோ ரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்ற நடராசா - வள்ளியம்மை தம் பதியினரின் மருமகனும் அம்பாலிகையின் அன்புக் கண வரும் குருபரன் தமயந்தி (லண்டன்), செந்திற்செல்வன் (லண்டன்), சிவ சோதி- சயந்தி (சுவிஸ்), கேதீஸ்வரன்-உஷாந்தி (லண்டன்), உருத்திரதாசன் (பனை ஆராய்ச்சி நிறுவனம் PRI) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவனுஷா, சிவார்த்தி, சிவவாரணி, மகிஷா, அங்கஜன், சிவரூபி சிவசுதன், தரணீதரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் மு.ப 10மணியளவில் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில். தகவல்:- குடும்பத்தினர்.

# ஆமை வேகத்தில் போதை பொருள்விசாரணைகள்



கொழும்பு, பெப்.28
போதைப் பொருள் விநியோகத்தர்கள் தொடர்பான விசா ரணைகள் மந்த கதியில் நகர் கின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளது ஜே.வி.பி. மொனராகலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்த அந்தக் கட்சியின் பிர தம செயலாளர் ரில் வின் சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"முன்னாள் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய அவரின் பதவிக் காலத்தில் தனது பதவியைத் துஷ்பிரயோகம் செய்தார். வெலே சுதாவுடன் இணைந்து போதைப் பொருள் வர்த்தகத தில் வர்த்தகத்தில் ஈடுபட்டார்."– என்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
"தற்போது அவர் தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைது செய்ய முடியாது. போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய சில நாடாளுமன்ற உறுப்பினர்களதும் வேறு பலரதும் பெயர்கள் குறிப்பிடப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படு கின்றன. ஆயி னும் அவை ஆமை வேகத்திலேயே மேற் கொள்ளப் படுகின்றன."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
"பாபுல் (போதை பாக்கு) பக்கெட்டுக்கள் காணப்படின் ஓடிப்போய் ஆற்றில் குதிக் கும்வரை துரத்து கின்றனர். தொன் கணக்கில் போதைப் பொருள்களைக் கொண்டு வருபவர்களைக் கைது செய்யத் தவறிவிடுகின்றனர்."– என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)

# கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியருக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி, பெப்.28
கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக நீண்டகாலமாகச் சேவையாற்றி 2013 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நியமனத்தின்போதும் உள்வாங்கப் படாது தற்போதும் சேவையாற்றி வரும் தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் என்று எதிர்வரும் 02ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.
கிளிநொச்சி எடிசன் தனியார் கல்வி நிலையத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.
நியமனம் தொடர்பான இந்தக் கலந்துரையாடலுக்கு வரும்போதே பாடசாலையில் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணத்துடன் சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ற–426)

# நகர் வீரரின் உயிரிழப்பு விபத்தால் ஏற்படவில்லை

## பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28
நாராஹென்பிட்டியில் வசீம் தாஜுதீன் என்ற றகர் விளையாட்டு வீரரின் உயிரிழப்பு விபத்தால் ஏற்பட்டதல்ல என உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
நாராஹென்பிட்டியில் 2012 ஆம் ஆண்டு மே 17 ஆம் திகதி சம்பவம் இடம்பெற்றது. அவரின் சாவு தொடர்பில் நாராஹென்பிட்டி பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு விசாரணை ஆரம்பித்தது. அதில் இரண்டு விஞ்ஞானபூர்வ சாட்சிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. முதலாவது பிரேத பரிசோதனை நடத்திய வைத்தியரின் அறிக்கை. இரண்டாவது இரசாயன பகுப்பாய்வாளர்களின் அறிக்கை.
இது தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரியின் கருத்து கிடைக்கப்பெற்றிருந்தது. ஆனால் அரச இரசாயன பகுப்பாய்வு அதிகாரியின் கருத்து எமக்கு கிடைக்கப்பெறவில்லை. அது தொடர்பான அறிக்கை 2015 பெப்ரவரி 12 ஆம் திகதியே கிடைத்தது. இரசாயன பகுப்பாய்வாளர் சம்பவம் குறித்து இறுதி முடிவுக்கு வரமுடியாது என அறிவித்துள்ளார். ஆனால் மற்றைய அறிக்கையில் சாவு குறித்து சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.
உயிரிழந்த நபரின் உடலில் காபனீர் ஒட்சைட் வாயு சேர்ந்திருப்பது சாவில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதென தெரியவருகிறது. அதனால் இந்த விபத்து ஏற்பட்ட சாவு அல்ல என்பது சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் உறுதியாகிறது.
அதனால் இது குறித்து விசாரணையைநாராஹென்பிட்டிபொலிஸ் நிலையத்தில் இருந்து அகற்றி நேற்றுமுன்தினம் தொடக்கம் குற்றத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்க பொலிஸ் மா அதிபர் தீர்மானித்துள்ளார். அதன்படி குற்றத் தடுப்புப் பிரிவினர் பூரண விசாரணை நடத்துவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன மேலும் தெரிவித்துள்ளார். (ற–4)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**கண்ணீர் அஞ்சலி**

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும் சுப்பிரமணியம் முகுந்தன் அவர்களின் அன்புத் தந்தை

**கதிரவேல்பிள்ளை சுப்பிரமணியம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

# மஹிந்தானந்த, சஜின் வாஸிடம் பொலிஸார் வாக்குமூலம்

கொழும்பு, பெப்.28
முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுக்கமகே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன ஆகியோரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.
நிதி மோசடிக் குற்றச் சாட் டுக்கள் தொடர்பாகவே அவர்களிடம் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது.
சுமார் மூன்று மணி நேரம் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# முன்னாள் பிரதியமைச்சரை சிறையில் சந்தித்தார் மஹிந்த

கொழும்பு, பெப்.28
முன்னாள் பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகர எனப்படும் சொகா மல்லியை, நேற்றுமுன் தினம் குருவிட்ட சிறைச்சாலைக்கு சென்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பார்வையிட்டுள்ளார்.
குருவிட்ட சிறைச்சாலை வைத்திய சாலையில் முன்னாள் பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகர சிகிச்சை பெற்று வருகின்றார். முன்னாள் பிரதி அமைச்சர் துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர் ஒருவரை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காக்கி கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் சப்ரகமுவ மாகாணசபையின் அமைச்சர்களான ரஞ்சித் பண்டார மற்றும் பண்டார ராஹுபத்த ஆகியோரும் சென்றிருந்தனர். (ற)

# சம்பள உயர்வு வழங்க பணம் அச்சிடவில்லை

கொழும்பு, பெப்.28
அரச ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க பணம் புதிதாக அச்சிடப்படவில்லை என்று தெரிவித்துள்ளார் பொருளாதார திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஸ டி சில்வா.
"சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதிக் கொள்கைகளின் அடிப்படையில் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ அரசைப் போன்று போலிப் புள்ளி விவரங்கள் வெளியிடப்படாது."– என் றும் அவர் தெரிவித்தார்.
"சம்பள உயர்வுக்காகப் பணம் அச்சிடப்படவில்லை. கடந்த அரசு பின்பற்றிய பாதையை நாம் பின்பற்றப் போவதில்லை."– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணையுங்கள்

## ஜனாதிபதி மைத்திரிபால அழைப்பு

கொழும்பு, பெப்.28
இலங்கையில் சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.
கொழும்பில் இடம்பெற்ற தேசிய சிறுநீரக பாதுகாப்பு நிதியத்திற்காக வர்த்தக தரப்பினர் ஒன்றிணைந்து நிதியம் ஒன்றை ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"கடந்த காலங்களில் வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் மாத்திரமே சிறுநீரக நோய் பாதிப்பு இருந்து வந்தது. எனினும் அந்த பாதிப்பு தற்போது அங்கு மாத்திரம் வரையறுக்கப்படாது நாடளாவிய ரீதியாக பரவி வருகின்றது. இது சுகாதாரத்துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது."– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.
"மறுபுறத்தில் அது பெரும் மனிதாபிமான மீட்பு நடவடிக்கையாக உள்ளது. எனவே, இதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இந்தநிலையில், பாதிக்கப்பட்டவர்களின் மருந்து தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், அவர்களின் உறவினர்களின் பாதுகாப்புக்கும் இந்த நிதியம் ஒத்துழைப்பு வழங்கும். பொதுமக்களைதெளிவூட்டும் செயற்பாடுகளுக்கும் இந்த நிதியம் உதவி புரியும்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**கந்தையா துரைராஜா**
(முன்னாள் புனிதவேல் மில் உரிமையாளர் பண்டத்தரிப்பு சந்தைக்கு முன்பாக)
திதி: பூர்வபக்க தசமி
28.02.2015
ஆலம் விழுதுகள் போல் - உறவுகள் ஆயிரம் வந்துமென்ன
வேரென நீங்கள் இருந்தமையால்
நாங்கள் வீழ்ந்துவிடாமல்
இருக்கின்றோம் அப்பா.
உங்கள் நினைவில்...
மகன் Dr. சந்திரமோகன்
குடும்பத்தினர்.
கொக்குவில் கிழக்கு.

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

மலர்வு 18 ★ 08 ★ 1944
உதிர்வு 30 ★ 01 ★ 2015



அமரர் **பொன்னம்பலம் நடராசா**

குடும்பம் என்னும் கோவிலிலே - மனை
சிறக்க வாழ்ந்த எங்கள் அப்பாவே!
இன்றும் பசுமையாய் அமைக்கின்றோம் உம்நினைவை
எம்கண்ணோரங்களில் ஈரம் காயவில்லை
நல் உறவாக, கணவனாக, சகோதரனாக,
அன்புத் தந்தையாக, மாமனாக, பேரனாக
பாசத்தில் பிணைந்து நின்றீர்
வான்வீட்டில் அமைதிபெற வேண்டுகின்றோம்.

அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (28.02. 2015) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியவிருந்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

79/3, நக்கா வீதி,
கண்டுக்குளி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## அங்கத்துவ

யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் இந்தக் கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டது. பாரவூர்தி உரிமையாளர்கள் மகேஸ்வரி நிதியத்துக்கு முன்பாக சுமார் 30 நிமிடங்கள் பதாகையை தாங்கியவாறு காத்திருந்தனர். எனினும் மகேஸ்வரி நிதியத்தில் இருந்து எவரும் வெளியில் வரவில்லை. பின்னர் நிதியத்தின் இணைப்பாளர் ரஜீவன் பாரவூர்தி உரிமையாளர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

சங்கத்தின் பெயருக்கு பணத்தை மீளச் செலுத்த முடியாது. ஏற்கனவே வழங்கப்பட்ட 2 லட்சத்து 50 ரூபாவை 50 பேருக்கு வழங்கிவிட்டு, அதன் விவரங்களைத் தந்தால் ஏனையவர்களுக்கு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்று ரஜீவன் தெரிவித்தார். ஆயினும் அதை பாரவூர்தி உரிமையாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அங்கத்துவப் பணத்தை சங்கத்திடம் ஒப்படைக்குமாறு அவர்கள் கோரினர்.

அதைபடுத்து இருசாரருக்கும் இடையே சிறிது நேரம் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அரசியல் சுய லாபத்துக்காக பாரவூர்தியாளர்களின் அங்கத்துவப்பணத்தை பயன்படுத்தியுள்ளார் என்று பாரவூர்தி உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டினர். அதன்பின்னர் பாரவூர்தி சங்கத்தின் உறுப்பினர்கள் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்தரையாடிய பின்னர் இன்னும் இரு தினங்களில் சாதகமான முடிவை வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து பாரவூர்தி உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டத்தைகைவிட்டனர். இதேவேளை– இரு தினங்களில் அங்கத்துவப் பணத்தை மீள வழங்காவிடில் மீண்டும் ஒரு போராட்டம் நடத்தப்படும் என்று பாரவூர்தி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஒரு மாதத்துக்கு முன்னர் பாரவூர்தி உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த திட்டமிட்டிருந்தபோது வாராந்தம் 50 பேருக்கு அங்கத்துவப் பணத்தை படிப்படியாக மீளளிப்பதாக மகேஸ்வரி நிதியத்தினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2010 ஆம் ஆண்டு மகேஸ்வரி நிதியத்தினரால் 500 இற்கும் மேற்பட்ட பாரவூர்தி உரிமையாளர்களிடம் இருந்து 5 ஆயிரம் ரூபா அங்கத்துவப் பணமும், சேவைக்கட்டணமாக 300 ரூபாவும் பெறப்பட்டுள்ளது. (ற–14)

## வாகரையில்

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் நடந்துள்ளது. தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றிருந்த புவனேஸ்வரி அண்மையிலேயே நாடு திரும்பியிருந்தார். குறித்த பெண்ணின் கணவர் தற்போது வேறு திருமணம் செய்து வாழ்ந்து வருகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

படுகாயமடைந்த புவனேஸ்வரி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற)

## வெள்ளைவான்

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவால் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி, ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருந்த அவர், அங்கிருந்து நேற்று முன்தினம் திரும்பியிருந்தார். இதன் பின்னர் அவர் கொழும்பு கலதாரி விடுதியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அவர் "வெள்ளைவான் கடத்தல்கள் மற்றும் கொலைகளின் பின்னணியில் சில இராணுவ அதிகாரிகளே இருந்தனர். இந்தக் குற்றங்களில் பொலிஸார் தொடர்புபட்டிருக்கவில்லை." – என்று கூறியுள்ளார்.

" முன்னைய அரசு தமது சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு, பாதுகாப்பு அளிக்கின்ற ஒரு விளையாட்டுப் பொருளாகவே பொலிஸ் ஊடகத்துறையைப் பயன்படுத்த முனைந்தது. அதற்கு நான் உடன்பட மறுத்த போது என்னைப் பழி வாங்க முனைந்தனர். முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ என்னை பாதுகாப்பு அமைச்சுக்கு அழைத்து, தமது சட்டவிரோத உத்தரவுகளைச் செயற்படுத்தாமல், நியாயமான கடமைகளை ஆற்ற நினைத்தால், மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும் என்று அச்சுறுத்தினார். என்னையும், எனது குடும்பத்தினரையும் கொலை செய்யப் போவதாக பல தொலைபேசி அழைப்புக்களின் மூலம் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. அது குறித்து விசாரித்த போது, அவை பாதுகாப்புச் செயலரிடம் இருந்தே வந்தன என்பதைக் கண்டறிந்தேன்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிரசாந்த ஜெயக்கொடியின் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்று நிராகரித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. (ற–5)

## நேரில்

அந்தப் பகுதியில் உள்ளடங்கும் 6 கிராம சேவையாளர் பிரிவுகளை முதல்கட்டமாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராய்வதற்கு செயற்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்படவுள்ள பிரதேசங்களின் தற்போதைய நிலையை ஆராய்வதற்காக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில், விடுவிக்கப்படவுள்ள பிரதேசங்களின் கிராமசேவையாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் செல்லவுள்ளனர். (ற–5)

## வலி.வடக்கு

யாழ்ப்பாணத்தின் மீள்குடியமர்வு தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல் ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. அதில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், வடக்கு மாகாண ஆளுநர் பளிகக்காரா, யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதில் அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய ஆயிரம் ஏக்கர் நிலத்தை விடுவிப்பது பற்றி ஆராயப்பட்டது. வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் தற்போது உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள, பளைவீமன்காமம் தெற்கு (ஜே/237), கட்டுவன் (ஜே/238), வறுத்தலைவிளான் (ஜே/241), குரும்பசிட்டி (ஜே/242), வசாவிளான் கிழக்கு (ஜே/244), வலி.கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் தற்போது உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள வளலாய் (ஜே/284) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளே முதற்கட்டமாக விடுவிக்கப்படவுள்ளன.

பளைவீமன்காமம் தெற்கு மற்றும் வறுத்தலைவிளானில் 400 ஏக்கரும், கட்டுவன் – குரும்பசிட் டியில் 300 ஏக்கரும், வசாவிளானில் 200 ஏக்கரும், வளலாயில் 200 ஏக்கர் நிலப்பரப்பும் விடுவிக்கப்படவுள்ளன. இந்தப் பிரதேசத்தில் இதுவரை மீள்குடியமர்வதற்காக ஆயிரத்து 500 குடும்பங்கள் வரையில் பதிவு செய்துள்ளன.

நேற்றைய கலந்துரையாடலுக்கு அமைய, மீள்குடியமர்வு அனுமதிக்கப்படவுள்ள பிரதேசத்தை முதலில் பார்வையிடுதல், அதன் பின்னர் விடுவிக்கப்படவுள்ள பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுதல், மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவுள்ள பிரதேசத்தில் குடியமர்வுக்குப் பதிவுகளை மேற்கொள்ளுதல் என கட்டம் கட்டமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதற்காக மீள்குடியேற்றம் தொடர்பான செயலணியின் தலைவர் ஹரின் பெர்னாண்டோ தலைமையில், அரச அதிபர், பிரதேச செயலாளர், இராணுவத்தினரை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மூன்று வார காலத்துக்குள் மக்களின் மீள்குடியமர்வுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், "ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு மக்கள் பாவனைக்காக விடப்படவுள்ளது. அதில் அந்தக் காணிகளின் உரிமையாளர்களே குடியமர்த்தப்படவுள்ளனர். இதற்காக செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. மூன்று வாரங்களுக்குள் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு மக்களிடம் காணிகள் கையளிக்கப்படும்."– என்று கூறினார். (ற–5)

## 110 சேவை

யாழ்.மாவட்டத்தில் மட்டுமே இந்தச் சேவை நடைமுறைப்படுத்தப்படுகிறது. அது ஏனைய மாவட்டங் களுக்கும் மாகாண சபையால் விரிவுபடுத்தப்படும் என்று கூறப்படுகின்றது. இதுவரை காலமும் 110 இலக்க அவசர அம்புலன்ஸ் சேவையைப் பெறுபவர்களிடமிருந்து 300 ரூபா கட்டணம் அறிவிடப்பட்டு வந்தது. அதனைச் செலுத்த வசதியில்லாதவர்களிடம் கட்டணம் அறவிடப்படவில்லை. இதுவரையான காலத்தில் அவ்வாறு சுமார் 25 வீதமானோர் சேவைக்கான கட்டணம் செலுத்தவில்லை.

"நாளை முதல் இந்தச் சேவை இலவசமாக வழங்கப்படும். ஆதார, பிரதேச வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் வண்டிகள் தரித்து நிற்கும். அவசர தேவை கருதி 110 க்கு அழைப்பு ஏற்படுத்தும் நோயளர்களை அவர்களது வீடுகளுக்கு அண்மையாக எந்த வைத்தியாலை உள்ளதோ அந்த வைத்தியசாலையில் சேர்த்து விடுவார்கள்." – என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (ற–4,9)

## வடக்கு

அதற்கு முன்னதாக, பிரதிச் செயலாளருக்கு அறிக்கையிடுவதற்காக, அந்த அலுவலகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்தனர். நல்லூரில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் அவர்கள் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனையும் அவர்கள் சந்தித்தனர். முற்பகல் 11 மணியிலிருந்து சுமார் பி.ப. ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

"புதிய அரசு தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலோ, நூறு நாள் வேலைத் திட்டத்திலோ தமிழர் விடயம் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அது மட்டுமல்லாது, தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் புதிய அரசி டம் தெளிவான திட்டம் இல்லை. நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, உள்ளக விசாரணை குழு அமைக்கப்படமாட்டாது. ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளே செயற்படுத்தப்படும் என்று சொல்கின்றார். அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித, தென்னாபிரிக்கா போன்று உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை நடைமுறைப்படுத்துவதைப் பற்றி பேசுகின்றார். வெளிவிவகார அமைச்சர் மங்கள, உள்ளக விசாரணை அமைக்கப்படும் என்கின்றார். எனவே இவர்களிடம் ஒழுங்கான நிலைப்பாடு இல்லை என்பதை அவர்களிடம் சுட்டிக்காட்டினேன்."– என்று அவர் தெரிவித்தார்.

"இலங்கையில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை நம்புவதற்கு தமிழ் மக்கள் தயாராகவில்லை. ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்தவை அகற்றவே வாக்களித்தார்கள். இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் ஒவ்வொரு அரசுகளும் தமிழ் மக்களை ஏமாற்றியே வருகின்றது.

ஐ.நா. எமது விடயத்தில் நேரடியாகத் தலையிட வேண்டும். சர்வதேச தலையீட்டால் மட்டுமே எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். பெருந்தொகைப் பணத்தை செலவு செய்து மேற்கொள்ளப்பட்ட ஐ.நா. விசாரணை அறிக்கை வெளியிடப்பட வேண்டும். அவ்வாறு வெளியிடப்படுவதுடன், அதனை நடைமுறைப்படுத்த ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும். உள்ளக விசாரணைப் பொறிமுறையை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் அவர்களிடம் தெரிவித்தேன்" என நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் குறிப்பிட்டார். (ற–5)

## யாழ்.

இவர்கள் இருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோகண கூறினார்.

பியகம விலேஜ் ஹோட்டல் உரிமையாளரான பிரபல கோடீஸ்வரர் பேனாட் ஜயரட்ன சில ஆண்டுகளுக்கு முன்னர் கொலை செய்யப்பட்டார். அவரது கொலை தொடர்பான தகவல்களை, அப்போது விசேட அதிரடிப்படையில் பணியாற்றியவரும், தற்போது யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான விமலசேன, மற்றும் பொலிஸ் பரிசோதகர் ஆகியோர் மறைத்தனர் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார். கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

விமலசேன, சில வாரங்களுக்கு முன்னர் விடுமுறையில் வீடு சென்றிருந்தார். அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவரை நேற்றுக் கைது செய்தனர் என்று கூறப்படுகின்றது. (ற–4)

## மீண்டும்

அதன் இடைக்கால தீர்ப்புக்கு அமைய தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. பின் னர் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி தேர்தல் நடைபெற இருந்தது. எனினும் அப்போதும் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. அதற்கமைய தேர்தல் நடை பெறாமல் இருந்து வந்தது. கடந்த ஜனவரி மாதம், மேற்படி பிரதேசங் களில் மீள்குடியமர்வு பூர்த்தி செய் யப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத் துக்கு தெரியப்படுத்தப்பட்டது. அத னையடுத்து தேர்தல் ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இன்று தேர்தல் நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவின் பிரகாரமும், 2014 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரகாரமுமே தேர்தல் நடைபெற இருந்தது.

சிவாஜிகணேசன் சுஜீவன், விசுவமடு வள்ளிபுனத்தைச் சேர்ந்த ஜெயஜீவன் ஜெயதீபன் ஆகியோரால் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யபட்டது. குறித்த வழக்கில் மூன்று விடயங்களை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு வேட்பு மனுத் தாக்கல் செய்யும் போது, நபர் ஒருவர் தகுதியான வயதை அடைந்திருக்க முடியாததால் தேர்தலில் போட்டியிட்டிருக்க மாட்டார். ஆனால் தற்போது அவர் தகுதியான வயதை அடைந்திருக்கின்றார். அவர் தேர்தலில் போட்டியிடும் அடிப்படை உரிமையை இந்தத் தேர்தல் 2011 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியல் ஊடாக நடத்துவதால் மறுக்கின்றது. (அதாவது 2011 ஆம் ஆண்டு, 15 வயதுடைய நபர் ஒருவர் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆனால் தற்போது அவருக்கு 19 வயதாகியிருக்கும். அவர் தேர்தலில் போட்டியிட முடியும். அதற்கான வாய்ப்பை வழங்காது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது.)

உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தின் பிரகாரம், வேட்பு மனுத் தாக்கல் செய்கின்ற ஒவ்வொரு கட்சியிலும், 35 வயதிற்கு உட்பட்ட இளம் வேட்பாளர்கள் 25 சதவீதம் இருக்க வேண்டும். 2011 ஆம் ஆண்டு வேட்பு மனுத் தாக்கல் செய்யும் போது, 35 வயதுக்கு உட்பட்டிருந்தவர்கள் தற்போது அந்த வயது எல்லையைக் கடந்திருப்பார்கள். அதனால் 25 சதவீதம் பேர், 35 வயதிற்கு உட்பட்டு இருக்க மாட்டார்கள்.

மூன்றாவதாக, வேட்பு மனுத் தாக்கல் செய்யும் போது ஒரு கட்சியில் இருந்தவர் தற்போது ஆட்சி மாற்றத்தால் வேறு கட்சிக்கு மாறியிருக்கக் கூடும். அதனால் 2011 ஆம் ஆண்டு வேட்புமனுத் தாக்கல் செய்த பட்டியலின் பிரகாரம் [illegible]தல் நடத்தக் கூடாது என்று, உயர் நீதிமன்றத்தில் கோரப்பட்டுள்ளது.

அதனையடுத்து, எதிர்வரும் மார்ச் 27 ஆம் திகதி வரை தேர்தலை நடத்துவதற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### பணவிரயம்

இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டு மூன்றாவது தடவையாக தேர்தல் நடைபெறும் அறிவிக்கப்பட்டிருந்த கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தல் ஏற்பாடுகளுக்காக 55 லட்சம் ரூபா வரையான மக்களின் வரிப்பணத்தை தேர்தல்கள் திணைக்களம் செலவு செய்துள்ளது என்று தெரியவருகின்றது.

தேர்தல் ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில், வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. இந்தநிலையில் திடீரென தேர்தலை இடைநிறுத்துவதற்கான நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனால் 55 லட்சம் ரூபா வரையில் வீண் விரயமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தேர்தல் ஏற்பாடுகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையாலேயே அதிக தொகை வீணாகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டமை தொடர்பில் இரண்டு பிரதேச சபைகளுக்கும் போட்டியிட்ட பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். ஒவ்வொரு முறையும் தேர்தலுக்காக தமது சொந்த நிதியை பெருமளவு செலவு செய்த நிலையில், தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### மீளப்பெறப்பட்டன

தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட அறிவுறுத்தலுக்கு அமைவாக தேர்தல் நடவடிக்கைகளை மீளப்பெற்றுகொள்கின்றோம் என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்தார். அதையடுத்து வாக்கு சாவடிகளுக்கு கொண்டு செல்லப்பட்ட வாக்கு பெட்டிகள் அனைத்தும் நேற்று மாலை உடனடியாகத் திருப்பி எடுக்கப்பட்டு முல்லைத்தீவு மத்திய கல்லூரிக்கு கொண்டு வரப்பட்டது. தேர்தல் பணிகளுக்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட அதிகா ரிகளும் திருப்பி அனுப்பப்பட்டனர். இது குறித்து மக்களுக்கு ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிக்கப்பட்டது. (ற–5,21)



களுதாவளையில் நேற்றுமுன்தினம் மாலை மீனவரின் வலைகளில் சிக்கிய பெருமளவான நெத்தலி மீன்கள்.(வ)

## அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள்

தென்மராட்சி, பெப்.28
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வர்த்தக வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவை உபகரணங்களுக்கு இவ்வருடத்துக்கான முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் 9, 10 12, 13 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி நகர சபையில் இடம் பெறவுள்ளன. உபகரணங்களுக்கு முத்திரையிடுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.(வ-9)

## மாணவன் காயம்

வலி.வடக்கு, பெப்.28
பாடசாலைக்குச் சென்ற சிறுவனை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்வி கற்கும் சிவகுமார் கோபிநாத் (வயது-10) என்ற சிறுவனே இவ்வாறு காயமடைந்தவராவார்.
தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ-86)

# தடுத்து நிறுத்துக

## பண்ணையாளர் மீதான நடவடிக்கையை

மட்டக்களப்பு, பெப்.28
மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கெவிளியாமடுப் பகுதியிலுள்ள மேய்ச்சல்தரைக் காணிகளில் மேய்ச்சலுக்கு செல்லும் மாடுகள் பிடிக்கப்படுகின்றன. அத்துடன், கால்நடை பண்ணையாளர்கள் மீது பொலிஸாரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா வேண்டுகோள் விடுத்தார்.
சிறுபோக நெற்செய்கை தொடர்பான ஆரம்பக்கூட்டம் மட்டக்களப்பு மாவட்டச் செயலக மேலதிக அரச அதிபர் எஸ்.கிரிதரன் தலைமையில், போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,
கெவிளியாமடுப் பகுதியில் மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட காணிகளில், வேறு மாவட்டங்களிலுள்ள பெரும்பான்மை இனத்தைசேர்ந்தவர்கள் அத்துமீறிய பயிர்ச்செய்கையை மேற்கொள்கின்றனர். அங்கு மேய்ச்சலுக்கு செல்லும் மாடுகளைப் பிடித்து வைத்துக் கொண்டு அதிக பணம் கேட்கின்றனர். பொலிஸாரும் கால்நடை உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கின்றனர்-'' என்றார். (வ)

## பெண்ணுக்கு அபராதம்

தென்மராட்சி, பெப்.28
நீதிமன்ற திறந்த மன்றில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கைபேசி திடீரென அலறியதால் அதை வைத்திருந்த பெண்ணுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.
வழக்கைப் பார்வையிடுவதற்காக வந்த வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த பெண் ஒருவர் வைத்திருந்த தொலைபேசியே அலறியது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது.
நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் அந்தப் பெண் மீது நீதிமன்ற நடவடிக்கைக்கு குந்தகம் விளைவித்ததாகக் குற்றஞ் சாட்டி வழக்குத் தாக்கல் செய்தார்.வழக்கை விசாரித்த நீதிவான் பெண்ணுக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.
இதேவேளை கடந்த புதன்கிழமை நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கைப் பார்வையிட வந்த ஒருவர் நீதிமன்ற திறந்த மன்றில் தொலைபேசியில் உரையாடியதற்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## இளவாலையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம்,பெப்.28
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 4 ஆவது தடவையாக வழங்கும் குருதிக் கொடை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து இளவாலை புனித அன்னாள் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.
'உயிர் தந்த தேசத்துக்கு உயிர் கொடுப்போம்' என்ற தொனிப் பொருளுடன் 4 மாதங்களுக்கு ஒரு தடவை குறித்த சங்கத்தால் குருதிக்கொடை முகாம் நடத்தப்பட்டு வருகிறது.
குருதிக்கொடை முகாமில் கலந்து கொண்டு குருதி வகைகளைச் சேகரிக்க தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் இரத்தவங்கியினரும், மருத்துவ கலாநிதி பிரதீபன் உள்ளிட்டோரும் பங்குபற்றவுள்ளனர்.
இறுதியாக இடம்பெற்ற குருதிக் கொடை முகாமில் 57 குருதிக் கொடையாளிகள் கலந்து கொண்டதை அடுத்து இந்த முறை 60குருதிக் கொடையாளிகள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு குருதிக் கொடை முன்னெடுக்கப்படுகின்றது. எனவே இந்த உயிர் காக்கும் உன்னத பணியில் கலந்து கொண்டு குருதிக்கொடை அளித்து உதவுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-14)

## மீனவர்கள் பட்டினிப் போர்

மட்டக்களப்பு, பெப்.28
கல்முனை மாவட்ட கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர், கடற்றொழில் பரிசோதகர்களின் செயற்பாட்டைக் கண்டித்து பொத்துவில் ஜலால்தீன் சதுக்க கரையோர மீனவர்கள் கடற்கரையில் நேற்றுமுன்தினம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அனுமதிப்பத்திரமின்றி பொத்துவில் பிரதேசத்தில் கடந்த ஒரு மாதகாலமாக கரைவலை மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக கல்முனை மாவட்ட கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர், கடற்றொழில் பரிசோதகர்கள், சுற்றி வளைப்பை மேற்கொண்டு கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களைக் கைப்பற்ற முயன்றதை அடுத்தே குறித்த மீனவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் சார்பாக மீனவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;
''சுமார் 30 வருடமாக கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த எம்மைத் தடுக்கின்ற போது நாம் எங்கு செல்வது? எமக்கு வேறு தொழில்களும் தெரியாது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை எப்படி நடத்துவது? இதற்கு அரசு பதில் தர வேண்டும். திடீரென்று இன்று வருகை தந்த மீன்பிடி உத்தியோகத்தர்கள் எமது கரை வலையைத்தடுத்து உபகரணங்களை அள்ளிச் செல்வதென்றால் நாளை சாப்பாட்டுக்கு என்ன செய்வது?''- என்றார். (வ)



முல்லைத்தீவு வலயத்தில் 58 ஆவது பாடசாலையாக மூங்கிலாறு ஆரம்பப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாடசாலையின் பெயர்ப்பலகையை வலயக் கல்விப் பணிப்பாளர் திரைநீக்கம் செய்து வைத்தார். (வ-433)

# 4, 885 ஏக்கரில் சிறுபோகம்

மட்டக்களப்பு, பெப்.28
மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புளுக்குணாவை, கடுக்காமுனை, சேவகப்பற்று மேல், கிழல், அடைச்சல் ஆகிய குளங்களிலுள்ள நீரைக் கொண்டு இவ்வருடம் 4,885 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற் கொள்வதற்கும்; அதற்கு மேலதிகமாக சிறு நீர்ப்பாசனம், ஏற்று நீர்ப்பாசனத்தை கொண்டு 310 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
2015ஆம் ஆண்டு மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வயல் கண்டங்களில் சிறுபோகம் மேற்கொள்வதற்கான ஆரம்பக்கூட்டம், கொக்கட்டிச்சோலை பிரதேச கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
கடந்த வருடக்கை விட இந்த வருடம் 10 சதவீதமாக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ள ஏக்கரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான விவசாய வேலைகள் ஆரம்பத்திகதி 27.02.2015 என்றும்; விதைப்பு ஆரம்பத்திகதி 20.03.2015 என்றும், விதைப்பு முடிக்கப்பட வேண்டிய இறுதித்திகதி 05.04.2015 என்றும், காப்புறுதி செய்யும் இறுதித் திகதி 05.04.2015 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# அனைவரும் சேர்ந்தாலே தீர்வு வரும்

## இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஆய்வுகூடத் திறப்புவிழாவில் முதலமைச்சர்



எமது 67 வருட இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வினை நாம் அனைவரும் சேர்ந்தே உருவாக்குவது மிகமுக்கியம். அன்றாட அனுசரணைகளை வழங்கி ஆழமாகப் புரையோடியிருக்கும் எமது இனப்பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை நாங்கள் மறந்துவிடக்கூடாது என்று வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

அமைச்சரும் நாங்களும் மத்திய, மாகாண அரசுகளின் உறவு முறையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி மத்தியும் மாகாணமும் முரண் இன்றி முயன்று முன்னேற சில வழிமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்றோம். நேற்றைய அவருடனான சந்திப்பில், இங்குள்ள பிரச்சினைகளை தனக்குத் தெரியப்படுத்துங்கள். நாங்கள் சேர்ந்தே அவற்றுக்கு ஒரு தீர்வு காண்போம் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க நாங்கள் அவ்வாறே செய்ய ஆவன செய்து வருகின்றோம்.

தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பிக்கவும் அதற்கான மாணவ அறைக்கட்டடங்களையும், உரிய கருவிகளையும் மற்றும் வகுப்பறை அனுசரணைகளையும் வழங்குவதே இந்தத் தொழில்நுட்பத் திட்டத்தின் குறிக்கோள். 2013 தொடக்கம் தேசிய மட்டத்தில் 250பாடசாலைகளில்உயர்தர மட்ட தொழில்நுட்ப ஒழுங்கு முறை அறிமுகப் படுத்தப்பட்டது. தொழில்நுட்ப மாணவ மாணவியர் வருங்காலத்தில் மிக முக்கிய ஒரு பங்கை வகிக்கவுள்ளனர் என்பதை மாணவச்செல்வங்கள் மறந்துவிடக்கூடாது.

வருங்காலம் எத்தகையதாக அமையும் என்பதைக் கூற முடியாது. அதனால் நாங்கள் எமது மதரீதியான, அறரீதியான, மனிதாபிமான ரீதியான பின்னணியைப் பேணிக் கொண்டு தொழில்நுட்ப ரீதியாக முன்னேறுவதே உசிதம். போர்க் காலத்தில் தொழில்நுட்பத் திறனோடு எங்கள் இளைஞர் யுவதிகளால் கட்டப்பட்டிருந்த பலதையும் இன்று நாம் அழித்து விட்டுள்ளோம். அத்தனை தொழிற்திறனும், தொழில் வல்லமையும், பொறுமையும் சேர்ந்து உருவாக்கிய அந்த இயல்பியல் அதிசயங்கள் கண்காணாமற் போயுள்ளன.

ஆகவே எமது அறநெறியில் ஸ்திரமாக இருந்து கொண்டு ஆன்மீக அறிவுரைகளில் திளைத்துக் கொண்டு அதே நேரம் தொழிற்துறைகளில், தொழில்நுட்பங்களில் மேம்பாட்டைக் காணவேண்டும் என்றார். (4)

## உயர்தர மாணவன் கஞ்சாவுடன் கைது

யாழ்ப்பாணம்,பெப்.28

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த உயர்தர வகுப்பு மாணவனொருவன் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை நேற்றுக் கோப்பாய் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியவேளை எதிர்வரும் 12ஆம் திகதிவரை சான்று பெற்ற பாடசாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

நேற்றுக் கோப்பாய் பொலிஸார் நல்லூர் பகுதியில் வைத்து அவரைக் கைது செய்தனர். குறித்த மாணவன் புத்தூர் பகுதியை வசிப்பிடமாக கொண்டவரெனவும் இவ் வருடம் இடம்பெறவுள்ள ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளவரெனவும் தெரிய வருகின்றது. (த-103)

## இளைஞனைக் காணவில்லை

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமற் போயுள்ளார் என்று அவரது தயாரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அல்வாய் தெற்கு, மாலு சந்தியைச் சேர்ந்த ஸ்ரீரங்கநாதன் மயூரன் (வயது 21) என்பவரே காணாமற்போனவராவார். வீட்டுக்கு வந்த இருவர் இவரை அழைத்துச் சென்றனர் என்றும், நேற்றுவரை அவர் வீடு திரும்பவில்லை என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## உதவியளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் கைதடி லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் து.மகேந்திரன் தலைமையில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-288)



வடமாகாண சுகாதாரத் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் உள்ள 4 சுகாதார மருத்துவர் பணிமனைகளைகளுக்கு தலா 5 தானியங்கள் அரைக்கும் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

## கந்தசாமி நகரில் சுழல் காற்று

வவுனியா, பெப் 28

வவுனியா செட்டிக்குளம் கந்தச்சாமி நகரில் சுழல்காற்று வீசியதில் வீடுகள் சேதமடைந்துள்ளன. நேற்று சுழல் காற்று வீசியதில் செட்டிக்குளம் கந்தசாமி நகரில் 3 வீடுகள் மோசமாகச் சேதடைந்துள்ளன. இதனை வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினர் நேரில் சென்று பார்வையிட்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கினர். (த-402)

## இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம்,பெப். 28

யாழ்ப்பாணம் முட்டாஸ் கடைச் சந்திப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் 30வயதுடைய இளைஞர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் கே.கே.ஸ் வீதி முட்டாஸ் கடைச் சந்திப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஹன்ரர் வாகனத்தில் இருந்த சாரதி கதவைத் திறந்த போது மோதுண்டு விபத்துக்குள்ளானார். இதன்போது தலையில் காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். படுகாயமடைந்தவர் நாவலர் வீதி, அத்தியடி பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்தவராவார். (த)

## கடலில் மூழ்கி ஒருவர் சாவு

யாழ்ப்பாணம்,பெப். 28

கடலில் குளிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் அதற்கு முன்னரே உயிரிழந்தார் என்பது பரிசோனையில் இருந்து தெரிய வந்தது.

வேலணை சாட்டிக் கடலில் நேற்று முன்தினம் மாலை 6.00 மணியாளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. குளித்துக்கொண்டிருந்தவேளையில் இவர் திடீரெனக் கடகில் மூழ்கியதாகவும், மீட்கப்பட்டு அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் அதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டதாகவும் கூறப்பட்டது.

காரைநகர், களபூமியைச் சேர்ந்த நடராஜா சுதாகரன் என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார். உறவினரின் மரணச் சடங்கை முடித்துவிட்டுக் கடலில் குளிக்கச் சென்றபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது. (த-4)

## வெடிபொருளை அழிக்க உத்தரவு

### பொலிஸாருக்கு நீதிமன்றம் விடுத்தது

தென்மராட்சி, பெப். 28

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் மீட்கப்பட்ட பொடெக் ரக வெடி மருந்துகளை அழிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.

நேற்றுமுன்தினம் படையினரின் வெடி பொருள்கள் அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்ட 143 கிலோ வெடி மருந்துகள் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவை தொடர்பாக பொலிஸார் நேற்று நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர் மீட்கப்பட்ட வெடி மருந்தை பாதுகாப்பான முறையில் அழிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (த-9)

## கச்சதீவு உற்சவம் இன்று ஆரம்பம்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இலங்கை-இந்திய யாத்திரிகர்களின் பங்கேற்றலுடன் வருடாந்த திருவிழா நாளை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி யாழ்.மறை மாவட்டக் குரு முதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இந்தியாவில் இருந்து வரும் குருக்களுடன் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும். திருவிழாவுக்காக இந்தியா- இலங்கையின் பலபாகங்களில் இருந்தும் கிறிஸ்தவமக்கள், குருக்கள், கன்னியாஸ்திரிகள் பங்குபற்றவுள்ளனர். இந்தியாவில் இருந்து 4 ஆயிரத்துக்கும்மேற்பட்ட யாத்திரிகர்களும், இலங்கையில் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யாத்திரிகர்களும் இதில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் இருந்து செல்லும் யாத்திரிகர்களுக்கு குறிகாட்டுவன், தலைமன்னார் இறங்குதுறை முகங்களில் இருந்து விசேட படகு சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. (த-14-7)

## யானைகள் அட்டகாசம்

கிளிநொச்சி, பெப். 28
வன்னேரிக்குளம், இரண்டு ஏக்கர் பகுதியில் குடிமனைக்குள் புகுந்த 2 யானைகள் 15க்கு மேற்பட்ட தென்னைகளை முறித்து நாசம் செய்துள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
வன்னேரிக்குளத்தில், முத்தையா என்பவரது காணிக்குள் புகுந்த 2 யானைகள் அங்கு நின்ற பெரிய தென்னைகள் இரண்டை அடியோடு சாய்த்துள்ளன.
13 தென்னங்கன்றுகளையும் சேதப்படுத்தியுள்ளன. அத்துடன் வாழைகள், வீட்டுத்தோட்டப் பயிர்கள் என்பவற்றையும் நாசமாக்கின.
கொட்டகை ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த நெல்லைப் பதம் பார்ப்பதற்காக அதன் கூரையை யானை பிடிங்கியபோது வீட்டார் விழித்துக்கொண்டு யானையை விரட்டியுள்ளனர். (த)

## மூன்று பேர் கைது

வவுனியா, பெப். 28
வவுனியா செட்டிகுளம் பகுதியில் புதையல் தோண்டமுயன்ற மூவரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 3பேரும் கைது செய்யபபட்டு நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
மூவரிடமிருந்தும் புதையல் தோண்ட பயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. (த-402).

## விபத்தில் பெண் காயம்

மன்னார், பெப். 28
தோட்டவெளி கிராமத்திலிருந்து மன்னார் நோக்கி பயணித்த இ.போ.ச பஸ் ரொட் உடைந்து விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் காயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் குறித்த பஸ் மரியன்னை ஆலயத்துக்கு முன் பயணித்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
ரொட் உடைந்ததால் பஸ் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி ஆலயச்சுவரை உடைத்துச் சென்று கட்டடத்தில் மோதி நின்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## பொலிஸ் ரோந்து

குடாநாட்டின் பல இடங்களிலும் அண்மை நாள்களாக இரவில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வீதிகளில் பயணம் செய்யும் வாகனங்கள் சோதனையிடப்படுகின்றன. (த)



இந்திய வீட்டுத் திட்டத்தில் அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறி, யாழ். ஐந்து சந்திப் பகுதியில் பதாகைகளைத் தாங்கியவாறு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம் மக்கள். (த-10)

## வீடுகள் கோரி முஸ்லிம்கள் நேற்று யாழில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 28
இந்திய வீட்டுத் திட்டத்தில் தாம் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று யாழ். மாவட்ட முஸ்லிம் மக்களால் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்பட்டது.
யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் நேற்று நண்பகல் ஒன்று கூடிய முஸ்லிம் மக்கள், விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மூலம் பாரபட்சமற்ற – நீதியான மீள்குடியேற்றம் வேண்டும் எனக் கோரிக் கோஷமெழுப்பினர். (த-10)

# கொத்துக் குண்டால் உயிரிழந்தனர் பலர்

## முல்லைத்தீவு நீதிமன்றில் ஒருவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், பெப். 28
போரின் இறுதிக் கட்டத்தில், பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட பிரதேசத்தின் மீது கொத்துக் குண்டுகள் வீசப்பட்டது. அதில் பலர் உயிரிழந்ததைக் கண்டதாக, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் சாட்சி ஒருவர் பகிரங்கமாகத் நேற்றுத் தெரிவித்தார்.
காணாமற்போனோர் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆள் கொணர்வு மனு மீதான விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்று இடம்பெற்றது. இதன்போது வழக்காளிகள் சார்பில் மன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கே.என்.ரட்ணவேல், முறைப்பாட்டாளர்கள் தமது உறவுகள் காணாமற்போனமை தொடர்பில் பொலிஸில் அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உடனடியாக ஏன் முறைப்பாடு பதிவு செய்யப்வில்லை என்பதை விளக்கினார்.
அதன் பின்னர் வழக்கின் இரண்டாவது சாட்சி சாட்சியமளித்தார். சாட்சியமளித்த பெண்ணின் உறவினர்கள் நான்கு பேர் போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுக் காணாமற்போயிருந்தனர். போரின் இறுதிக் கட்டத்தில் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட பிரதேசத்தில் கொத்துக் குண்டு வீசப்பட்டதாக அவர் தெரிவித்தார்.
இதன்போது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து வருகை தந்த அரச சட்டத்தரணி குமார் ரட்ணம், இது இங்கு தேவையில்லாதது எனவும், காணாமற்போனமை பற்றிய விடயமே தேவையானது எனவும் தெரிவித்தார்.
வழக்காளி சட்டத்தரணி ரட்ணவேல், இது பாரதூரமான விடயம் என்பதுடன், கொத்துக் குண்டு பயன்படுத்துவது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது என்று மன்றில் சுட்டிக் காட்டினார். இதன் பின்னர் நீதிவான், அது கொத்துக் குண்டுதான் என்று நீர் உறுதியாகக் கூறுவீரா? என சாட்சியிடம் வினவினார். இதற்குச் சாட்சி உரிய விளக்கம் கொடுத்தார். (த-5)

## கிளி.மக்களுக்கு வாழ்வாதார உதவி

### அமைச்சர் டெனீஸ்வரன் வழங்கினார்



கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கான ஒரு மில்லியன் பெறுமதியான வாழ்வாதார உதவித்திட்டங்கள் நேற்று வடக்கு மாகாண சபையின் மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரனால் வழங்கப்பட்டன.
நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கிராம அபிவிருத்திச் சங்கப் பணிப்பாளர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, தவநாதன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
இதில் பச்சிலைப்பள்ளி– தர்மங்கேணி மாதர் அபிவிருத்தி சங்கத்துக்குக் கதிரைகளும், பூநகரி பிரதேச வாடியடி மாதர் அபிவிருத்திச் சங்கம், கரைச்சி பிரதேச மாதர் அபிவிருத்திச் சங்கம், கண்டாவளை பிரதேச கட்டைக்காடு மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கு சமையல் பாத்திரங்களும், பூநகரி பிரதேச சின்னப் பல்லவராயன்கட்டு– நாதன் திட்ட மாதர் அபிவிருத்திச் சங்கத்தினருக்கு அலுவலகத் தளபாடங்களும் கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட தையல் தெரிந்த 25 பெண்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. (த-21)



மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் நேற்று முன்தினம் வவுனியா கந்தசாமி கோவிலுக்குச் சென்றபோது மக்களைச் சந்தித்துப் பேசினார். (த-402)

## போரின் வடுக்கள் மோடிக்காக மறைப்பு

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 14 ஆம் திகதி, வலி.வடக்குப் பிரதேசத்துக்குச் செல்லவுள்ளார். இதன்போது அங்கு இந்திய வீட்டுத் திட்டக் கையளிப்பு நிகழ்வில் பங்கேற்கவுள்ளார். இதற்காக மோடி பயணம் செய்யும் பிரதேசத்திலுள்ள போரின் வடுக்களை மூடி மறைக்குமாறு, இந்தியத் துணைத் தூதரகத்தினால் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கைக்கு வருகை தரும் இந்தியப் பிரதமர் மோடி, வடபகுதிக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார். முதலில் தலைமன்னார் வரையிலான ரயில் சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளார். அதன் பின்னர், யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். கீரிமலைக்குச் செல்லவுள்ள மோடி, இந்திய வீட்டுத் திட்ட வீட்டைப் பயனாளிக்கு கையளிக்கவுள்ளார். வலி. வடக்குப் பிரதேசத்தில் மோடி பயணம் செய்யவுள்ள வீதியைப் புனரமைப்புச் செய்யுமாறும், வீடு கையளிக்கவுள்ள பிரதேசத்துக்கு அண்மையில், போரினால் சேதமடைந்த நிலையில் காணப்படும் வீடுகளை மூடி மறைக்குமாறும் இந்தியத்துணைத் தூதரக அதிகாரிகள் கோரியுள்ளனர் எனக் கூறப்பட்டது. (த-5)

# விறுவிறுப்பான நிலையில் வீரர்களின் போர்



வலி. வடக்கு, பெப்.28

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே 15ஆவது ஆண்டாக நடைபெறும் துடுப்பாட்டம் நேற்றுக் காலை 9.45 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி வாசலில் இருந்து இரு கல்லூரிகளினதும் வீரர்கள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவத் தலைவர்கள், விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டார்கள். விருந்தினர்களுக்கு வீரர்கள் அறிமுகம், தேசிய கொடியேற்றல் போன்ற நிகழ்வுகளைத் தொடர்ந்து ஆட்டம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மகாஜனக் கல்லூரி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் ஆறு ஓட்டங்களை பெற்றிருந்த பொழுது பவிலியன் திரும்பினர். ஆரம்ப வீரர்கள் வழியிலேயே முன்வரிசை வீரர்களும் பவிலியன் திரும்ப ஸ்கந்தா கரை சேர முடியாமல் தத்தளித்தது. நிலைமையை உணர்ந்து மத்திய வரிசை வீரர்கள் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த ஒருவாறு ஸ்கந்தா 100 ஓட்டங்களை எட்டியது. முடிவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 122 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிக பட்சமாக கதியோன் 52 ஓட்டங்களையும், சஞ்சயன் 23 ஓட்டங்களையும், ரசிகரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி சார்பில் தயூஸ்ரன் 05 இலக்குகளையும், லக்ஸ்மன் 03 இலக்குகளையும், ஜெறோம் மற்றும் சசிகரன் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

123 ஓட்டங்களைப் பெற்றால் இன்னிங்ஸ் முன்னிலை பெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி ஒரு கட்டத்தில் 29 ஓட்டங்களுக்கு ஐந்து இலக்குகளை இழந்து 'பலோ ஒன்' (இரண்டாவது இன்னிங்ஸுக்குத் தகுதியற்ற நிலை) செய்ய வேண்டிய பதற்றம் அணியை இறுகிக் கொண்டது. இருந்தபோதிலும் பின்வரிசை வீரர்கள் மிக நிதானமாக துடுப்பெடுத்தாடி அணியைப் படிப்படியாக சரிவில் இருந்து மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனையடுத்து மகாஜன 'பலோ ஒன்' நிலைமையில் இருந்து தப்பித்துக்கொண்டது.

தொடர்ந்தும் ஆட்டத்தில் போராட்டத் தன்மை பற்றிக் கொள்ள நேற்றைய ஆட்டநேர முடிவில் மகாஜனக் கல்லூரி அணி 7 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களை பெற்றுள்ளது. அதிக பட்சமாக ஜசிந்தன் 33 ஓட்டங்களையும், ரசிகரன் 18 ஓட்டங்களையும், கோபிகிருஷ்ணா ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பாக சுகிர்தரன் மற்றும் விதுசாந் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

ஆட்டத்தின் இரண்டாவதும் இறுதிநாளும் இன்றாகும். ஆட்டம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (த-ரி,86)


IELTS A1 B1 B2
MBA(London) Qualified Trainer Call: 0213208342
Visit: http://edu.kugroup.info/ielts
0777302882 IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதி... கற்கக்கூடிய,அதிக அளவிலான ... பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் 16 வருட அனுபவமுள்ள ஒரே கல்வி நிறுவனம்.
K.U Education,No 626 1/1,K.K.S Rd,Jaffna

தல யாத்திரை
தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஊடாக தல யத்திரை
ஆரம்பம் :- 16.04.2015
நாள்கள் :- 16
மலைக்கோட்டை விநாயகர், ஆறுபடை முருகன், திருப்பதி குருவாயூர், மேல்மருத்தூர், கன்னியாகுமாரி, 9நவக்கிரக ஆலயங்கள், பஞ்சபூத திருத்தலங்கள், பிரமாகோயில், தோணியப்பர், பொற்கோயில், இராமேஸ்வரம், பிள்ளையார் பட்டி திருக்கடவூர் உட்பட 60 இற்குமேற்பட்ட ஆலயங்களை தரிசிக்க வாய்ப்பு-
இருவழி விமான டிக்கட், 3வேளை சுத்தமான சைவஉணவு, தண்ணீர், 2 பேருக்கான சுகாதாரமான இணைந்த குளியலறை, யாத்திரை முடியும் வரை A/C வாகன வசதி, ஆலயதரிசனக் கட்டணங்கள் உட்பட வழங்கப்படும்.
10 பேர் மட்டும்.
விபரங்களுக்கு:- கலாநிதி ஸ்ரீரங்கநாதன்
0777 680102, 077 5063280

0215671111


# வடமராட்சி பாடசாலைகள் உதைபந்தாட்டம் ஆரம்பம்

கரணவாய் பெப்.28

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைப்பந்தாட்ட தொடரின் 15, 17, 19 வயதுக்கு பிரிவுகளுக்கு உட்பட்டோருக்கான ஆட்டங்கள் நேற்றைய தினம் ஆரம்பமாகின.

15 வயதுப் பிரிவு

நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்களில் கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை– கம்பர்மலை அ.த.க. பாடசாலையை 8:0 என்ற கோல்களாலும், பொலிகண்டி த.க. பாடசாலை தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தை 1:0 என்ற கோல் கணக்கிலும், உடுப்பிட்டி அ.மி. கல்லூரி உடுத்துறை மகாவித்தியாலயத்தை 3:0 என்ற கோல் அடிப்படையிலும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வல்வை சிவகுரு வித்தியாலயத்தை 6:0 என்ற கோல் கணக்கிலும் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

17 வயதுப் பரிவு

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்களில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி– உடுத்துறை மகாவித்தியாலயத்தை 2:0 என்ற கோல் அடிப்படையிலும், அல்வாய் வடக்கு த.க. பாடசாலை பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தை 6:0 என்ற கோல் அடிப்படையிலும், தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்– ஆழியவளை வித்தியாலயத்தை 4:0 என்ற கோல்கள் அடிப்படையிலும், கொற்றவத்தை அ.த.க. பாடசாலை– புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையை 7:0 என்ற கோல்கள் அடிப்படையிலும் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன. (த-ரி,108)



மாபெரும் மாட்டுவண்டி சவாரி
நாளை (01.03.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் பொன்னாலை மான்பாஞ்சான் சவாரிதிடலில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.
சவாரி சங்கத்தினர்.

மீண்டும் யாழ் மண்ணில்!
S. G. சாந்தன் இசைக்குழுவினின் இசைப்பயணம்
புகழ் பூத்த S.G சாந்தன், வசந்தம் super star கோகுலன், சக்தி super star சுலக்ஸ்சன், இளம் பாடகர் மது பாடகர்களுடன் ஈழத்தின் தலை சிறந்த இசைக்கலைஞர்களும் இணைந்து இசை நிகழ்வுகளை வழங்கத் தயாராக உள்ளனர்.
பிரதான அனுசரணையாளர்கள்:- சிவன் வெதுப்பகம் (நிலாவரை), மிலேனியம் ரெஸ்டுரண்ட் (இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.)
கோயில், சுபகாரியங்கள் போன்ற நிகழ்வுகளுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள S.G சாந்தன் 077 1313624 0777922156


# ஹாட்லி, உடுப்பிட்டி இறுதிப் பலப்பரீட்சை

கரணவாய், பெப் .28

பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் இடம்பெற்ற அரை இறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றன உடுப்பிட்டி அ.மி. கல்லூரி மற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரின் 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்கள் நேற்று இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமைதானத்தில் நடைபெற்றது. முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் நெல்லியடி மத்திய கல்லூரியும் மோதின. ஆரம்பம் முதல் இறுதி வரை பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதற் பாதி ஆட்டத்தில் இரு அணியினருக்கும் கோல் போடுவதற்கான பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவர்கள் அதனை தவற விட, ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணியினரும் எந்தவித கோல்களையும் பெறாது சமநிலை வகித்தனர். இடைவேளையின் பின் இரு அணியினரும் சில மாற்றங்களுடன் அதிரடி வியூகங்களை வகுத்து களமிறங்க மைதானத்தில் இரு அணி ஆட்டத்திலும் அனல் பறந்தது. இதனால் பந்து இரு பகுதி கோல் பகுதியையும் மாறி மாறி ஆக்கிரமித்த வண்ணம் இருந்தது. ஆட்டத்தின் 17, 19 ஆவது நிமிடங்களில் ஹாட்லிக் கல்லூரி அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து ஆட்டத்தின் சம நிலைத்தன்மையை மாற்றி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். முடிவில் ஹாட்லிக் கல்லூரி 2:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றுஇறுதியாட்டத்துக்குதகுதிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதின. இதில் 3:0 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றது. (த-ரி,108)


ஆங்கில பிரத்தியேக வகுப்புகள்
தரம் 6 தொடக்கம் O/L மாணவர்களுக்கு அடிப்படை விடயத்திலிருந்து பிரபல கல்லூரி ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் கற்பித்துக் கொடுக்கப்படும். கட்டணம் பேசி நியாயமாக தீர்மானிக்கப்படும். சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம்.
தொடர்பு:- 077 2528824

வவுனியாவில் வீடு வளவு விற்பனைக்குண்டு
வவுனியா, மன்னார் வீதி, வேப்பங்குளம் 8ஆம் ஒழுங்கை இல-15 இல் அமைந்துள்ள 02 பரப்பு விஸ்தீரணமான வீடுவளவும் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
TP :- 077 723 8615

துயர்பகிர்கின்றோம்

எமது அச்சக குடும்பத்தின் உறுப்பினரான ஜெயசீலன் (Caxton Printers) அவர்களின் பாசமிகு தந்தையார்
கந்தையா இரத்தினசிங்கம்
இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
கரிகணன் தனியார் நிறுவனம்
681, K.K.S. Road, Jaffna.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.